ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தி

ஜா, ௩௨, ௪௪ 1935

JC
Q22m211, N35SR
N35.
218931

290

1290 857

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸாம்ராஜ்யம்.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த

ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக

மாதந்தோறும் வெளிவரும்

ஸித்தஸம்ப்ரதாயார்த்தப்ரகாசனபத்ரிகை.

ஸம்புடம் 1.] யுவ௵ தையில் மகம் [ஸஞ்சிகை 3.

பத்ராதிபர்

[illegible]கரை இராமாநுஜாசாரியார்

25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

[தனிப்ரதி விலை 0—3—0

ஜனவரி.]

218931

L. G. பெருங்காயம்.

“ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி:” என்கையால் சுத்தமான ஆஹாரத்தை உட்கொள்வதினலேயே மனிதர்களுக்கு ஸத்வ சுத்தி யுண்டாகின்றது. ஆதலின் ஸாத்விகமான ஆஹாரத்தையே உட்கொள்ளவேண்டும். அவ்விதமான ஆஹாரத்தைத் தயார் செய்வதற்கு இன்றியமையாதது பெருங்காயம் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. அப்பெருங்காயங்கள் பலவகைகளாக நமது நாட்டில் பரவியிருக்கின்றமையால் அவைகளில் எல்லோராலும் போற்றப்படுவது L. G. காயமே என்பதை மாத்திரம் இவ்விளம்பரம் தெரிவிக்கின்றது.

லால்ஜீ கோது & கம்பெனி,
பிரபல பெருங்காய வியாபாரிகள்,
பம்பாய். சென்னை. கும்பகோணம்.

அம்ருதாஞ்சநம்.

ப்ராக்ருதமான சரீரங்களை யுடையவர்களுக்கு ஜலதோஷம், தலைவலி முதலான சில வியாதிகள் உண்டாவது ஸஹஜமே. அவைகள் வந்தகாலத்தில் ஒருவிதமான வழியிலும் புத்தி செல்லாமல் மஹத்தான கஷ்டத்தை அடைய நேரிடுகிறது. அக்காலத்தில் டாக்டர்களிடம்போய் மருந்துகள் வாங்கி அவ்வ்யாதிகளின் உபசமநத்தைப் பண்ணிக்கொள்ளப் பலவிதமான இடையூறுகள் இருக்கக்கூடும். அக்காலத்தில் அம்ருதாஞ்சனம் கைவசமிருக்குமேயாயின் நாம் ஒருவிதமான பாதையையும் அடையவேண்டாமென்பதை அனைவரும் அறிந்திருந்தாலும் இவ்விளம்பரமும் அதன் பெருமையை அறிவிக்கின்றது. எங்கும்கிடைக்கும்.

அம்ருதாஞ்சனம் டிபோ.
பம்பாய். மதராஸ். கல்கத்தா.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.
𑌶𑍍𑌰𑌿𑌯𑌃𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌯 𑌨𑌮𑌃.
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌰𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌯𑍋𑌗𑌿𑌨𑍇 |
𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍 ||

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
யச்ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ||

𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍂𑌕𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌵𑌰𑍍𑌷𑌿𑌣𑍀 |
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑌾𑌮𑍍 ||

வேத வேதாந்த வேதாங்க ஸத்குருக்த்யர்த்தவர்ஷிணீ |
ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

ஸ்ரீ

ராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ.

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாசந பத்ரிகை.

பத்ராதிபர்
வடகரை இராமாநுஜாசாரியர்

ாகுதி 1.] [பகுதி 3.

பத்திராதிபரின் விஜ்ஞாபனம்.

ர்காள்!

நம்முடைய இந்த வைஜயந்தீ பத்திரிகையானது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஐகமத்யத்தை விளக்குவதற்கும் உபய ஸம்ப்ரதாயத்திலுமுள்ள உபயவேதாந்த ப்ரவர்த்தகர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களை நிஷ்பக்ஷபாதமாய் வெளியிடுவதற்குமே வெளிவரத் தொடங்கியிருக்கின்றது. கீழ் இரண்டு ஸஞ்சிகைகளில் புஸ்தக விமர்சம் என்னும் பகுதியில் ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமிபோல்வார்களுடைய உக்திகளுக்கு மறுப்பாகச் சில விஷயங்

கள் வெளியிடப்பட்டிருப்பதைக் கடாக்ஷித்த சில பெரியோர்கள் "இப்பத்திரிகையின் நோக்கத்திற்குப் பொருந்தாதவையான இத்தகைய விஷயங்களை இதில் வெளியிடாதிருந்தால் நன்றாயிருக்கும்" என்று அடியேனிடம் அன்புடன் அறிவித்தார்கள். அதை அடியேன் பெரு நன்றிபாராட்டுதலோடு சிரஸாவஹிக்கக் கடமைப்பட்டனாகவே யிருக்கின்றேன். ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் விரும்பி வாசிக்கக்கூடிய விஷயங்களை வெளியிடுவ தொன்றிலேயே அடியேனுக்கும் முழுநோக்கம். இப்போது வெளிவந்திருக்கும் அருளேதயத்திலும் வைஜயந்தீ ஸஞ்சிகைகள் இரண்டிலும் அப்படிப்பட் விஷயங்களே மலிந்துகிடக்கும். ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வ போன்றவர்களின் உக்திகளுக்கு உத்தரமாக வெளிவந்த விஷகளையும் ரஸிகர்கள் உற்று நோக்கினால் ஸம்ப்ரதாய ஐகமத்யத்திற் ஹாநிகரமான விஷயம் ஒன்றும் அவைகளில் இல்லையென்பது நன் விளங்கும்.

ஸ்ரீ உ. வே. ஏ. வி. ஜீ. ஸ்வாமி லௌகிக ஞானத்திற்போல வைதிக ஞானத்திலும் சிறந்தவர். ஆத்மகுண பரிபூர்த்தியிலும் மே பட்டவர் என்பதை எல்லோரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆ லால் அந்த ஸ்வாமியின் பெயரால் வெளிவந்த வாத்ஸல்யார்த்த ர்ண விமர்சத்தைப் பார்த்த அடியேனால் அவைகள் ஒருகாலும் அவரால் எழுதப்பட்டவை என்று நினைக்கவும் இயலாது. ஆயினும் அவைகளில் முதன்முதலாக "வாத்ஸல்யம் தோஷபோக்யத்வ" என்று ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி சொல்லுவதாகக் கண்டனம் எழுதத் தொடங்கினார். அது அண்ணங்கராசார்ய ஸ்வாமி சொல்லுவதா? அல்லது நமது பூர்வாசார்யர்கள் அருளிச்செய்தத என்பதை ப்ராமாணிகர்கள் பராமர்சிக்கவேண்டுகிறேன்.

சரணாகதி கத்ய பாஷ்யத்தில் "வாத்ஸல்யம்நாம தோஷே குணத்வ புத்தி:" என்று ஸர்வஜ்ஞரான ச்ருதப்ரகாசிகாபட்டர் ளிச் செய்திருக்கவில்லையா? கடோபநிஷத்தில் "அங்குஷ்டமா புருஷ:" என்கிற வாக்யத்தில் "நததோ விஜுகுப்ஸதே" என் விடத்தில் ஸ்ரீரங்கராமாநுஜ ஸம்யமிஸார்வபௌமரால் அநுக்ர கப்பட்ட பாஷ்யத்தில், "வாத்ஸல்யாதிசயாத் தேஹகதாநபி தோஷா போக்யதயா பஸ்யதி" என்று சொல்லப்படவில்லையா? அவ்வர்த்தத்தையன்றோ ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளியது. அதை மறுப்பது ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி போல்வார்களுக்குப் பொரு துமோ? அதற்கு அபார்த்தங்களைச் சொல்லுமவர்களை யன்றோ

கண்டிக்க ப்ராப்தம். "காக்கை வாயிலும் கட்டுரை கொள்வதன்றோ" ஸ்வரூபம். அது நிற்க, தயாசப்தார்த்த விஷயமாகவும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிய விஷயம் அவரபிப்ராயமா? பட்டர் போல்வார்களின் அபிப்ராயமல்லவோ? பட்டர் ஸ்ரீ ஸூக்தியின் மீதன்றோ இவர் தூஷணைகள் எழுதப் புகுந்தது. எல்லா ஆசார்யர்களையும் ஸமரூபமாகவே ஸம்பாவிப்பதாக எழுதும் இந்த ஸ்வாமி ஸ்வபாவத்திற்கு இவ்வாறு கண்டிப்பது பொருந்துமோ? பட்டருடைய ஸ்ரீ ஸூக்தியை அபலபிக்க யார் சக்தர். "ஸ்வார்த்த ஹர்ஷசோகாத்யபாவேபி" என்கிற ஸ்ரீஸூக்தி என்போல்வார்களும் நன்கறியும்படி யன்றோ விளங்கா நிற்கின்றது? அதற்குத் தாத்பர்யம் அப்படியில்லை என்றே ஏ. வி. ஜீ. ஸ்வாமி ஸாதிக்கிறபடி கொண்டாலும் சப்த ஸந்நிவேசத்தில் விவாதம் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை யன்றோ? அதுபோலவே மற்றையோர்களும் சொல்லி வருகிறார்களென்று இந்த ஸ்வாமியும் திருவுள்ளம் பற்றி இருந்திருக்கக் கூடாதோ? இதில் அநாவச்யகங்களான விசாரங்களை வளர்த்திக்கொண்டு போருவது உசிதமா? என்பதை விவேகிகள் விசாரிக்கவேண்டும்.

ஆக வாத்ஸல்யம், தயை என்கிற இரண்டு விஷயங்களைப்பற்றியும் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியின் உக்திக்கு உத்தரமாக ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி வெளியிட்டிருக்கிற ஸஞ்சிகைகளில் இரண்டு ஸம்ப்ரதாயங்களினுடையவும் ஸாமரஸ்யம் (ஒற்றுமை) அழகாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றதே யல்லாமல் ஒரு ஸம்ப்ரதாயத்தை தூஷித்திருப்பதாகக் காணக் கிடைக்குமோ? ஸ்ரீ கோபாலாசார்யர், ஸ்ரீ அண்ணங்கராசாரியரைப் பற்றி எவ்வளவோ மறுத்து எழுதுகிறார். ஸ்ரீ அண்ணங்கராசாரியரும் அவ்வாறே மறுத்து எழுதுகிறார். இது விஷயத்தில் அடியேன் சிறிய ஞானத்தன் என்ன செய்யமுடியும்?

இன்னமும் இந்த கோபாலாசார்யர் எழுதும் விஷயங்களைப் பற்றி அடியேன் எழுதினால் பக்ஷபாதத்தினால் எழுதுவதாகவே சிலர் கருதக்கூடும். ஆயினும் விவேகிகளின் உள்ளத்திற்கு விஷயவுண்மை விளங்காமற் போகாது. இதுவரையிலும் இவ்விரண்டு ஸ்வாமிகளுக்கும் பரஸ்பரம் அநேக விஷயங்களில் விவாதம் ஏற்பட்டு ஓயாமல் இருவரும் பத்திரிகைகள் மூலம் போராடி வருகிறார்கள். இருவருடைய போராட்டமும் மிகவும் அநாவச்யகமென்றே மத்யஸ்தர்கள் கருதுகிறார்கள். அடியேனுடைய எண்ணமும் இதுவே. பாதுகா ஸஹஸ்ராவதார தத்வ விமர்சம் என்று பெயரிட்டு ஒரு நீண்ட

நால் வெளியிட்டு வருகின்றார். அதிலும் அண்ணங்கராசார்ய ஸ்வாமியைப்பற்றி மறுத்தே எழுதி வருகின்றார். அண்ணங்கராசார்யரும் ஸ்ரீ தேசிக ஸூக்திஜயத்வஜ மாலையில் ஸ்ரீ கோபாலாசார்யரை மறுத்து எழுதி வருகிறார். இதற்கென் செய்வோம் யாம். அடியேன் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி ஸந்நிதிக்கு விடுத்த பத்திரிகைகளுக்குப் பதிலாக அவர் அனேக ஆச்சர்யமான அர்த்த விசேஷங்களை வெளியிட்டு வருகிறார். ஆயினும் அடியேன் எழுதிக்கொண்ட விஷயங்களுக்கு ஏதாவது பதில் உண்டா? என்பதை ப்ரமாணிகர்கள் அறிவித்தால் அவர்கள் விஷயத்தில் தலையல்லால் கைமாறிலேன். அறியாதவர்கள் எழுதினால் அவர்களுக்குப் பதில் ஏதாவது எழுதலாம். இந்த கோபாலாசார்ய ஸ்வாமி விஷயங்களை அறிந்துவைத்தே இவ்வாறு எழுதுவதற்கு பதில் எழுதுவது உசிதமன்று என்றே அடியேன் வாளாவிருக்கின்றேன்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம்

எம்பெருமான் தொடங்கி எம்பெருமானார் நடுவாக அஸ்மதாசார்யர்கள் பர்யந்தமாகவுள்ள ஆசார்ய பரம்பரையில் "ஜ்ஞாநாந் மோக்ஷம்" என்கையால் ஸம்ப்ரதாய பரம்பராப்ராப்தமான யதார்த்த ஜ்ஞானமே, நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைவதற்கு உறுப்பாகும். ஆகையால் நமது பூர்வாசார்யர்கள் ஆங்காங்கு நம்போல்வார்கள் உஜ்ஜீவிப்பதற்காக அருளிச் செய்திருக்கும் அர்த்த விசேஷங்களை அடியேன் பெரியோர்கள் ஸந்நிதியில் அடிபணிந்து அறிந்துகொண்டபடி இங்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

பதார்த்தங்கள் ப்ரமாணம் ப்ரமேயம் என்று இருவகைப்படும். அவற்றுள் ப்ரமேயங்களை உள்ளபடி அறிவதற்கு ஸாதகமாயிருக்குமவை ப்ரமாணங்கள் எனப்படும். அப்ரமாணங்கள் ப்ரத்யக்ஷம், அநுமானம், ஶப்தம் என்று மூன்று வகைப்படும். ப்ரத்யக்ஷமான பதார்த்தங்களை அறிவதற்கு இன்றியமையாத செவி, வாய், கண், மூக்கு, உடல் மனமும் ஆகிய ஆறு புலன்களும் ப்ரத்யக்ஷமெனப்படும். இவ்வாறு ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களால் அறியப்பட்ட வஸ்துக்களில் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமலிருக்கும் நிலைமையை அறிந்து அவைகளில் ஒன்றைக்கொண்டு மற்றொன்றை அறிவதற்கு யோக்யமான யுக்திகள் அனுமானம் என்று சொல்லப்படும். அதாவது மலையின் கண்ணுள்ள புகையைக் கண்டவுடன் அப்புகை நெருப்பில்லாவிடத்து உளதாகாமையால் அவ்விடம் நெருப்புளது என்று அறிவதற்கு யோக்யமான யுக்தி விசேஷம்.

ஶப்தமாவது ப்ரத்யக்ஷத்தால் அறிய முடியாத விஷயங்களை உள்ளபடி அறிகைக்கு யோக்யமான அக்ஷராத்மகமாயுள்ள ஶப்தங்கள். அந்த ஶப்தங்களாவன அபௌருஷேயங்களாய் நித்ய நிர்தோஷங்களாய் ஸ்வத: ப்ரமாணங்களாயிருக்கும் வேதங்களும், அவைகளின் அர்த்தங்களை அறிவதற்கநுகூலங்களான மீமாம்ஸாதி ஶாஸ்த்ரங்களும், அவ்வேதார்த்தங்களை ப்ரத்யக்ஷமாக ஸாக்ஷாத்கரித்த மனு முதலாயினோர் ஸ்ம்ருதிகளும், அவ்வேதார்த்தங்களை அறுதியிடாநின்ற இதிஹாஸ புராணங்களும், பாஞ்சராத்ராதி ஆகமங்களும், மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளாய் தென்மொழி மறை என்று கொண்டாடப்படும் திவ்யப்ரபந்தங்கள் நாலாயிரமும், அவைகளை அடியொற்றிய பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும்.

அவைகளில் வேதம், அபௌருஷேயம். (புருஷனால் செய்யப்படாதது.) ஆகையால், மயக்கம், வஞ்சனை, கவனமில்லாமை முதலாகிய குணங்களால் ஏற்படும் தோஷமில்லாததாயிருக்கும். ஸ்வத: ப்ரமாணமாவது, ஒரு விஷயத்தைத் தெரிவிக்கும்பொழுது மற்றொன்றை அபேக்ஷியாது தானே அறிவிக்கும் பெருமை. அது நித்யமாயிருக்கும். அஹங்கார தத்துவத்தினுடைய கார்யமான ஶப்தத்தை எப்படி நித்யம் என்று சொல்லமுடியுமெனில்? ஶப்தங்கள் அநித்யமாயிருந்தாலும் ஒவ்வொரு கல்பங்களிலும் அந்த ஶப்தங்களுடைய க்ரமங்கள் வேறுபடாமல் ஸர்வேஶ்வரன் திருவுள்ளத்தில் வைத்திருந்து கல்பந்தோறும் வெளியிடுகின்றமையால் நித்யமென்று சொல்லப்படுகிறது. இதிஹாஸாதி புராணங்கள் வேதத்தை அடியொற்றியே ப்ரமாணங்களாகும். வேதவிருத்தமான அர்த்தங்களை அறுதியிடுமவைகள் ப்ரமாணமாகமாட்டா. பாஞ்சராத்ரம் ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரனால் சேதனர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாய் அருளிச்செய்யப்பட்டதாகையால் வேதம்போலவே ஸ்வத: ப்ரமாணமாகும். அப்படியே மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளாகிய திவ்ய ப்ரபந்தங்களும் ப்ரமாணங்களாகும்.

படைத்தான் கவி என்கிறபடியால் இந்த திவ்ய ஸூக்திகளும் வேதம் போலேயே ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரன் ப்ரளயகாலத்தில்

தன் திருவுள்ளத்தில் வைத்திருந்து ஸுப்த ப்ரபுத்தந்யாயத்தாலே இந்த திரவிட பிரபந்தத்தை ஆழ்வாருக்கு அருளிச்செய்ய ஆழ்வாரும் மதுரகவிகள் போன்ற மஹாநுபாவர்களுக்கு அருளிச்செய்ய உலகில் வந்திருக்கின்றமையால் தராவிட ப்ரபந்தத்தையும் அபௌருஷேயமான வேதமென்றே சொல்லக்கூடும்.

அபௌருஷேயமாய் நித்யமான வேதம், கர்மபாகம் ப்ரஹ்மபாகமென்று இரண்டு வகைப்பட்டிருக்கும். அவற்றில் கர்மபாகமானது அசித்ப்ராயர்களான சேதனர்கள் உஜ்ஜீவிப்பதற்கு ஸர்வேஶ்வரன் பரம க்ருபையினால் அநுக்ரஹித்த அவயவங்களைக்கொண்டு அவனை ஆராதிப்பதற்கு அநுகூலங்களான யஜ்ஞம் முதலான கர்மங்களையும் அவைகளை அனுஷ்டிக்கும் ப்ரகாரங்களையும் அழகாகச் சொல்லுமதாயிருக்கும். அவைகளை ப்ரயத்யக்ஷீகரித்த மனு முதலியினோர் ஸ்ம்ருதிகள் அந்தக் கர்மபாகமான வேதார்த்தங்களை நாமறியும்படி விஸ்தரியா நிற்கும். ப்ரஹ்மபாகம் "ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்கிற ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூப ரூப குணவிபவாதிகளையும் அவனை அடைவதற்கு உபாயத்தையும் அவ்வுபாயத்தால் அடையக்கூடிய பலத்தையும் அப்பலத்தை அடைவதற்கு யோக்யனான புருஷனுடைய ஸ்வரூபத்தையும், அப்பலத்தைப் பெறுவதற்கு இடையூறான விரோதி ஸ்வரூபத்தையும் அறிவிக்குமதாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்களையே விஸ்தரியா நிற்கும் ஸ்ரீராமாயணாதி இதிஹாஸங்களும், ஸாத்விக புராணங்களும். மேற்சொல்லப்பட்ட ப்ரமாணங்கள் போலவே பகவத் கடாக்ஷமடியாகப் பெற்ற திவ்யஜ்ஞானத்தையுடைய ஶிஷ்டர்களின் ஆசாரங்களும் ப்ரமாணங்களாக ஆகும். "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச." (தர்மத்தையறிந்த சிஷ்டர்களுடைய ஆசாரம் ப்ரமாணம் வேதங்களும்) என்று சொல்லா நின்றதிறே. இதில் தர்மத்தையறிந்த ஶிஷ்டர்களின் ஆசாரம் ப்ரமாணம் என்று முந்துற முன்னம் ஶிஷ்டாசாரத்தைச் சொல்லியிருப்பதுடன் வேதமும் என்று சொல்லப்படுகிற சகாரத்தாலும் வேதத்தைக்காட்டிலும் ஶிஷ்டாசாரம் முக்யமான ப்ரமாணம் என்று சொல்லப்படுகிறது.

நமது ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி

தற்சமயம் நமக்கு அகஸ்மாத்தாய் ஒரு வருத்தமும் அதைக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்தவுடன் ஸமாதானமும் அடைய நேர்ந்தது. அதாவது நமது ராஜாதிராஜனாகிய ஜார்ஜ் சக்ரவர்த்தி ஸ்வர்க்கம் சென்றார் என்கிற சமாசாரம் செவிக்கெட்டியபொழுது ஒரு வருத்தமுண்டாயிற்று. அதைச் சிறிது பராமர்சித்தவுடன் அவர் இவ்வளவு காலம் இவ்வுலகை இனிது ஆண்டு இதேமாதிரி விண்ணுலகையும் ஆளக்கருதி விண்ணுலகம் சென்றிருக்கின்றார் என்றே நினைக்க வேண்டும்.

மேலும், நர: பதிதகாயோபி—யஶ: காயேநஜீவதி—என்கிறபடி ப்ராக்ருதமான சரீரத்தைவிட்டு அப்ராக்ருதமான யஶஶ்ஶரீரத்தை அவலம்பித்திருக்கின்றார். ராஜாதிராஜனாகிற நமது சக்ரவர்த்தியின் பெருமையைப் பேசப் புகுந்தால் "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:" என்று சொல்லுகிறபடி ஸாக்ஷாத் விஷ்ணுவே நமது சக்ரவர்த்தி என்று சொல்லவேண்டும். இல்லாவிடில் இவ்வளவு பெருமை ஏற்பட இயலாது. நமது சக்ரவர்த்தியின் அரசாட்சியானது நமது தேசத்தை முன் ஆண்டுவந்த அரசர்களின் அரசாட்சியை அடியொற்றினதாகவே காணப்படுகின்றது. முன் அரசாண்டவர்களின் அரசாட்சியைச் சொல்லும்போது ஒரு துறையில் புலியும் பசுவும் தண்ணீர் அருந்துமாறு ஆண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை நாம் சரித்திரங்களில் படிக்கின்றோமேயல்லாமல் ப்ரத்யக்ஷமாகக் கண்டதில்லை. ஆதலின் அது விஷயத்தில் நமக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டாகாமலிருந்தது. தற்காலம் பெரியது சிறியதை நலியாதபடி ஆண்ட நமது சக்ரவர்த்தியின் அரசாக்ஷியை ப்ரத்யக்ஷமாகக் கண்டோமாதலால் அது ஸம்பாவிதமென்றே நினைக்க நேருகின்றது. மேலும் அந்நல்லடிக் காலத்தில் அவர்கள் ஆண்டுவந்தது அவ்வளவு பெருமையல்ல. கலிஸாம்ராஜ்யம் பண்ணுமிக்காலத்தில் இவர் அரசாண்ட பெருமையைப் பன்னியுரைக்குங்கால் ப்ரதமாம். அவ்வாறு மண்ணுலகை ஆண்டு விண்ணுலகையும் ஆள விரும்பித் தன்னுடைய புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தியை இவ்வுலகாள வைத்துவிட்டுத் தான் வானாளச் சென்றிருக்கிறார். அவர் புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தியும் "தினாந்தே நிஹிதம் தேஜ: ஸவித்ரேவ ஹுதாஶந:" என்கிறபடி சாயுங்காலத்தில் சூர்யனால் கொடுக்

கப்பட்ட தேஜஸ்ஸை அடைந்து அக்நியானது எவ்வாறு ஜ்வலிக்கின்றதோ, அவ்வாறே நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியினால் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தைப் பெற்ற அவர் புதல்வரான ஹெட்வர்ட் சக்ரவர்த்தி அதி தேஜஸ்வியாய் பெரியது சிறியதை நலியாதபடி "யாவதாவர்த்ததே சக்ரம் யாவதீஹ வஸுந்தரா" என்கிறபடி ஆஜ்ஞாசக்ரமுள்ளவளவும் பூமியுள்ளவளவும் இவ்வுலகை இனிது ஆளும்படி எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் புரியுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்

வடகரை இராமாநுஜாசாரியார்,

பத்திராதிபர், S. R. S. வைஜயந்தீ.

வர்த்தமானங்கள்.

காஞ்சீபுரம் தேவப்பெருமாள் உத்ஸவங்கள் :—நாளது மாசி மாதத்தில் சுக்லபக்ஷ தசமியன்று (2-3-36) திங்கட்கிழமை தென்னேரித் தெப்பத்திருநாள் நடைபெறும். முதல்நாள் இரவு 10-மணிக்குப் பெருமாள் ஸந்நிதியை விட்டுப் புறப்பட்டருளிப் பல கிராமங்களையும் அக்ரஹாரங்களையும் அலங்கரித்துக்கொண்டு மறுநாள் காலை 11-மணிக்குத் தென்னேரி சேர்ந்து அங்கு அற்புதமான திருமஞ்சனங் கொண்டருளி மாலை 5-மணிக்குமேல் தாதஸமுத்ரமென்கிற ஏரியில் தெப்பம் கண்டருளி, அகரம் என்கிற வைதிகாக்ரஹாரத்தில் லோகவிலக்ஷணமான திருவீதிப் புறப்பாடுடன் அவ்வூர் ஸந்நிதியில் எழுந்தருளியிருந்து திருவாராதன நைவேத்யாதிகள் விசேஷமாகக் கண்டருளி மறுநாள் உதயம் காஞ்சீபுரம் ஸந்நிதியில் சேர்ந்தருள்வர்.

8-3-36 ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமியன்று ராய்ஜீ குளத் தெப்பத்திருநாள் ஆச்சரியமாக நடைபெறும். மறுநாள் முதல் மூன்றுநாட்கள் ஸந்நிதியுள்ளே துரைத்தோட்டத்தில் நவனவுத்ஸவம் பரமபோக்யமாக நடைபெறும்.

திருக்கச்சிநம்பிகளுத்ஸவம் :—இவ்வாசிரியருடைய வருஷோத்ஸவம் ஸகல திவ்ய தேசங்களிலும் நடைபெற்றாலும் இவருடைய திருவவதாரஸ்தலமான பூவிருந்தவல்லியில் 10-நாளும் திருவீதிப் புறப்பாடுடன் வெகு சிறப்பாக பக்தவர்க்கங்களால் நடத்திவைக்கப்படும். 21-2-36உ உத்ஸவாரம்பம். 1-3-36உ மிருகசீர்ஷத் திருநக்ஷத்திரத்தன்று (ஞாயிற்றுக்கிழமை) சாற்றுமுறை.

திருநாராயணபுரம்

இது மேலக்கோட்டை என்கிற திவ்யக்ஷேத்ரம். இந்த க்ஷேத்ரமானது க்ருதயுகத்தில் நாராயணாத்ரி என்றும் த்ரேதாயுகத்தில் வேதாத்ரி என்றும் த்வாபரயுகத்தில் யாதவாத்ரி என்றும் கலியுகத்தில் யதிஸார்வபௌமரான எம்பெருமானாரால் ஜீர்ணோத்தாரணம் பண்ணப்பட்டதால் யதிசைலமென்றும் சொல்லப்படுகின்றது. மேலும் இந்நகருக்கு உடையவர் திருநாராயணபுரம் என்று திருநாமம் சாத்தின படியால் திருநாராயணபுரமென்றும் எல்லோராலும் போற்றப்படும். பங்குனிமாதத்தில் ப்ரும்ஹோத்ஸவம் வயிரமுடி ஸேவை. 17-2-36 (மாசிமீ 5-உ) கேட்டை நக்ஷத்திரத்தில் டில்லியிலிருந்து உடையவர் செல்வப்பிள்ளையை எழுந்தருள்வித்துக் கொண்டு எழுந்தருளின தினயாத்ரையால் அன்று காலை ஸன்னிதியில் செல்வப்பிள்ளைக்குத் திருமஞ்சனம் மிக விமர்சையாய் நடைபெறும். உடனே உடையவருடன் தேசிகன் ஸன்னிதிக்கு எழுந்தருளி தளிகை முதலானதுகள் அமுது செய்து பல்லக்கில் செல்வப்பிள்ளையும் தோளுக்கினியானில் உடையவருமாக வீதி எழுந்தருளுகிற உத்ஸவம் மிகவும் அழகாக நடைபெறும்

திருவல்லிக்கேணி காலக்ஷேபங்கள்

ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி திவ்யாலயம், ஸ்ரீவேதவல்லித்தாயார் ஸந்நிதியில் ஸ்ரீமான் திவான் பஹதூர். M. O. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி சார்பு மூலமாய் சுமார் இருபது வருஷகாலமாய் உபயவேதாந்த ப்ரவர்த்தகரான திருமழிசை கோ. க. அ. ராமானுஜாசார்யஸ்வாமி அநேக ஸம்ப்ரதாயக்ரந்த காலக்ஷேபங்களை நடத்திக்கொண்டு வந்து, கொஞ்ச காலமாய் அந்தக் காலக்ஷேபங்களிலிருந்து நிவர்த்தராயிருக்கிறபடியால், ஷை தாயார் ஸந்நிதியில், அந்த ஸ்வாமியினுடைய அந்தே வாஸிகளான தி. ஆஸூரி, வெ. ஸ்ரீனிவாஸாச்சா[illegible] ஸ்வாமி' தி. ஆஸூரி, ரா. ரங்காச்சாரியர் ஸ்வாமி இவர்கள் மூலமாயே, ஹரிவம்சகாலக்ஷேபமும், பகவத்கீதா காலக்ஷேபமும் அந்[illegible]ந்த வாரங்களில் பகல் 3மணிக்கு நடத்திக்கொண்டு வருகிறார்கள். அநேகர் வந்து கேட்டுக்களிக்கின்றனர்.

திருவல்லிக்கேணி ஸ்ரீ வானமாமலை மடத்தில், காலை 7½மணிக்கு தி. ஆஸூரி, வெ. ஸ்ரீனிவாஸாச்சார்ஸ்வாமி 'தத்வத்ரயம்' பிரதி தினமும் நடத்திக்கொண்டுவருகிறார்.

மாம்பலம்.

திருக்கண்ணபுரம் ந்யாய வேதாந்த ப்ரவர்த்தகரான ஸ்ரீமான் வரதாசார்யஸ்வாமிகளால், மாம்பலம் ராமானுஜன் தெரு, ராமானுஜ நிலயத்தில் ப்ரதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு திருமந்த்ரார்த்தம் உபந்யஸிக்கப்படும்.

கோயில் மாசியுத்ஸவம்.

ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாளுக்கு தைமீ முதற்கொண்டு நான்கு மாதங்களிலும் நான்கு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறுவது வழக்கம். தையுத்ஸவம் வெகுவிபவமாக நடைபெற்றது. மாசி ப்ரம்மோத்ஸவம் நாளது மாசிமீ 13-ந் தேதி (25-2-36) முதல் நடைபெறும். முடிவில் தெப்பவுத்ஸவம் நடைபெறுவதால் இதற்கு மாசித் தெப்பத் திருநாள் என்கிற பெயரும் வழங்கிவருவதுண்டு.

திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவர்தெப்பம்.

22—2—36உ அமாவாஸ்யையன்று நடைபெறும்.

திருபுட்குழியில் தெப்பம்.

இந்த திவ்யதேசத்தில் ஸகலமான உத்ஸவங்களும் வெகு அழகாக நடந்துகொண்டிருந்தன. சில வருஷங்களாகப் பலவகை விவாதங்களினால் ஒரு உத்ஸவமும் நடைபெறாமல் நின்றிருந்த குறையை நீக்க, சென்ற தையமாவாஸ்யை முதலாக மூன்று நாள் தெப்பவுத்ஸவம் நடத்துவதாக ஆரம்பம் செய்து ஒருநாள் உத்ஸவம் நடத்தப்பட்டது. அவ்வளவிலேயே கலஹங்கள் ஏற்பட்டு உத்ஸவம் நிறுத்தப்பட்டுவிட்டது. பக்தர்களுக்கு விசாலஹ்ருதயமுண்டாகி நல்லவழி பிறக்கவேணும்.

திருக்கண்ணபுரம் மாசிமகம்.

இத்தலத்து எம்பெருமான் சௌரிராஜப் பெருமாளுக்கு மாசிமகோத்ஸவமென்கிற ஒரு ப்ரம்மோத்ஸவம் 28—2—36உ முதலாக நடைபெறும். 7—3—36 மக நக்ஷத்திரத்தன்று திருமலைராஜன் பட்டணத்திற் கெழுந்தருளிக் கடலில் தீர்த்தம் ஸாதிக்கிற அதிசயங்கள் வெகு அற்புதமானவை. இவ்வுத்ஸவம் ஸ்ரீபெரும்பூதூரிலும் ஐந்து நாள் நடைபெறும்.

திருவத்யயநோத்ஸவம்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார்

மாஸங்களிற் சிறந்தது மார்கழி மாதமென்பது, ஸ்ரீ கீதாசார்யாபிமதமன்றோ? தேவதைகளின் திநாரம்பமான தை மாஸத்துக்குப் பூர்வபாவியாய் ப்ரபாதஸமயமாயிருப்பதே, அப்படி அந்த மாஸம் கொண்டாடப் படுவதற்குக் காரணமாயிருக்கும். அந்த மாதத்திற் சுக்லபட்சவேகாதசி தொடங்கிப் பெரிய பெருமாள் வடமொழிவேதத்தைக் கேட்டுப்போருவது வழக்கமாயிருந்ததாம். அதற்கு அத்யயநோத்ஸவமென்று பெயராம். அப்படி நடந்து வரா நிற்கையில் திருவரங்கம் பெரிய கோயிலில் ப்ராகாராதி கைங்கர்யங்களைச் செய்தருளின திருமங்கைமன்னன் காலத்தில் அவ்வாழ்வாருக்குப் பெரிய பெருமாள் அருள்பாடிட்டு ஸம்ஸ்க்ருத வேத ஸாம்யம் தென்மொழிவேதமாகிய திருவாய்மொழிக்கு உண்டென்று தாம் திருவுள்ளம் பற்றியிருப்பதை ஸகலரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி திருவரங்கர் திருப்பதியினின்று திருக்கார்த்திகையானதும் ஆழ்வார்திருநகரிக்குப் பயணமாகி ஆழ்வாரை எழுந்தருளிப் பண்ணிக்கொண்டுவந்து திருவாய்மொழி பாராயணம் நடத்தும்படி நியமித்தருளினார். அப்படிப் பெரியபெருமாள் அநுக்ரஹித்த நியமனத்தை ஸிரஸாவஹித்துக் கலியனும் திருக்கார்த்திகையானதும் திருவரங்கத்திலுள்ள கோயில் பரிஜநங்களுடன் ஆழ்வார் திருநகரிக்குப் பயணமாகி அங்குநின்று ஆழ்வாரையெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து ப்ரதிஸம்வத்ஸரமும் சுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கித் தினம் ஒவ்வொரு பத்து வீதம் திருவாய்மொழி பத்து பத்தையும் பத்துநாள் உத்ஸவத்தில் வடமொழி வேதத்தோடுகேட்பித்தருளித் திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் பெருமாள் திருவுள்ளம் பற்றியிருப்பதை ப்ரகாசிப்பித்தருளினார். இப்படி நிகழ்ந்து வாராநின்றமேற்படி உத்ஸவம் பிறகு காலக்ரமத்தில் நடந்தேறாமல் நின்று விட, வெகுகாலத்திற்குப்பின் நம் தர்சநஸ்தாபகாசாரியரான எம்பெருமானார் "பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரின்" திருவுள்ளத்தை யடியொற்றித் திருவாய்மொழியோடு மற்ற முதலாயிரம் முதலிய பிரபந்தங்கட்கும் வேத

ஸாம்யமுண்டென்பது ப்ரகாசிக்குமாறு மார்கழிமாஸத்துச் சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு முன்பு பத்து நாள்களில் முதலிரண்டாயிரத்தையும் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி தொடங்கிப் பத்துநாள்களில் திருவாய் மொழியாயிரத்தையும் திருவாய்மொழி முடிந்த மறுநாள் இயற்பாவாயிரத்தையும் நம்பெருமாள் வடமொழி வேதத்தோடு திருச்செவிசாத்தும்படி ஏற்பாடு செய்தருளினார். அப்படியேற்பாடு செய்கையில் திருக்கார்த்திகையானதும் ஸ்ரீரங்கத்திலுள்ள பரிஜனம் பலவற்றோடும் ஆழ்வார்திருநகரிக்குப் பயணமாகி நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து கலியனையும் முன்னிட்டு உத்ஸவத்தை விமர்சையாக நடப்பிக்கலானார். திருக்கார்த்திகையானதும் ஆழ்வாரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து திவ்யப்ரபந்தங்களைப் பெரியபெருமாள் திருச்செவிசாத்தியருளுங் காலவெல்லையே இந்தத் தென்மொழி வேதத்துக்கு அத்யாயோத்ஸஜர்னகாலமாகும். முதற் பத்துநாள்களில் நடக்கும் உத்ஸவம் மத்தியான்ன காலத்திற்குள் திவ்யப்ரபந்தத்தைப் பெருமாள் திருச்செவி சாத்தும்படி இருப்பதால், அது பகர்பத்து என்னவும், பின்பு ஸ்ரீவைகுண்ட ஏகாதசி தொடங்கி நடக்கும் உத்ஸவத்தில் திருவாய்மொழிப்ரபந்தம் இராத்திரியில் திருச்செவி சாத்தும்படியிருந்ததால், அது இராப்பத்து என்றும் வழங்குவதாயிற்று. இந்த உத்ஸவங்களில் வடமொழி வேதத்தோடொப்ப திவ்யப்ரபந்தங்களும் சேவிக்கப்பட்டுப் பெரிய பெருமாளால் மிகவும் திருவுள்ளவுகப்போடு திருச்செவி சாத்தப்படுவதால் இந்த உத்ஸவம் திருவத்யயன உத்ஸவமென்று பெரியோர்களால் வழங்கப்படுவதாயிற்று. (அத்யயனமென்றால்—வேதமோதுதல்) இப்படி நடந்து வராநின்ற உத்ஸவம் கால கௌடில்யத்தால் ஆழ்வார் திருநகரியினின்று ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து நடத்துவது கஷ்டசாத்யமாய்விட பிற்காலத்துள்ள பெரியோர் திருவரங்கம் திருப்பதியில்தானே ஏறியருளப்பண்ணின நம்மாழ்வாரைக்கொண்டு மேற்படி உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தலானார்கள்.

தமிழ் மொழியில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்று வழங்குகிற மூவகைத்தமிழில் இயற்பா தவிர மற்றைமூவாயிரங்களும் இசைத்தமிழும் நாடகத்தமிழுமாகையால் அந்தப்ரபந்தங்களை அறையர், பண்ணிசையோடு சேவிப்பதும் அபிநயிப்பதும், மற்றையோராயிரமும் இயற்றமிழென்பதை யாவரும் அறியுமாறு முன்னையோர், இவற்றிற்கு இயற்பா (இயற்றமிழாலானபா) என்று நாமதேயமிட்டதற்கு ஏற்ப அவ்வாயிரத்தை அறையர் பண்ணிசையோடு சேவிப்பதில்லையாக, இதர ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருந்திரளாக இருந்து அநுசந்திக்க நம்பெருமாள் கட்டளையால் இன்னும் இருபத்தொருநாள்களில் திவ்யப்ரபந்தம் முழுவதையும் திருச்செவிசாத்துதல் நடந்துவருகின்றது.

இப்படி நடந்துவராநிற்கிற திருவத்யயனோத்ஸவத்தைத் திருவரங்கம் திருப்பதிக்குப்போய் சேவிக்கப்ராப்தியில்லாதவர்கள் அக்குறை யொருவாறு தீர மேற்படிஉத்ஸவம் பலதிவ்ய தேசங்களில் நடக்கின்றது. அந்த உத்ஸவம், ராஜதானியாய் ஸ்ரீகீதாசாரியன் எழுந்தருளிஇருக்கப்பெற்ற திருவல்லிக்கேணி என்ற ஸ்ரீகைரவிணீ க்ஷேத்திரத்தில் ப்ரதிஸம்வத்ஸரமும் தொண்டர்கள் கண்டு உகமகிழ்ந்துவாழுமாறு வெகு விமர்சையாக நடந்துவாரா நிற்கின்றது.

தையில் மகம்

திருமழிசை கோ. க. அப்பன் இராமாநுஜாசாரியார்

திருமழிசைப்பிரான் 'ததசத்வாதஶேமாஸே' என்றும் 'பன்னிருத்திங்கள் வயிற்றிற்கொண்ட' என்றும் சொல்லுகிறபடி ராமகிருஷ்ணர்களைப்போலே, பன்னிரண்டு மாதம் கர்ப்பவாஸம்பண்ணி அவதரித்தார். இதைப்பற்றியே, திருமழிசை, சதுஶ்ஶாஸ்த்ர ப்ரவீணரான அண்ணாவப்பங்கார்ஸ்வாமி,

மாஸேத்வாதசகே முநீந்த்ரக்ருஹிணீ ஸா த்வாபரே தைஷ்யகே
ஸித்தார்த்திந்யஹிமாம்ஶுவாரஸஹிதே தாரே மகாக்யாதரே
ராகாயா அபரேத்யுரஸ்யஜகத: க்ஷேமாய ஸௌதர்ஶநம்
ப்ராஸூதோல்பவிவேஷ்டநாவ்ருததநும் பிண்டம் ப்ரசண்டார்சிஷம்

என்றும் அருளிச்செய்தார். இந்தஸ்லோகத்தின் தாத்பர்யம், த்வாபரயுகம், ஸித்தார்த்திவருஷம், தைமாதம், ஞாயிற்றுக்கிழமை, ப்ரதமாதிதியோடுகூடிய மகாநக்ஷத்திரத்திலே, பார்க்கவமுநீந்த்ரருடையபத்நி, பன்னிரண்டுமாதம் கர்ப்பம்தரித்திருந்து, பூலோகத்தின் க்ஷேமார்த்த

மாக, சக்ராம்ஸமாய், தோல்லையால் மறைக்கப்பட்ட ஆகாரத்தோடு கூடிய, மஹா தேஜஸ்ஸையுடைய பிண்டாகாரமான ஆழ்வாரைப் பெற்றாள் என்பது. இவ்வாறு பிறப்பிலும், தேஜஸ்ஸிலும் ஸ்ரீராம க்ருஷ்ணர்களுக்கு ஒப்பான ஆழ்வார், துஷ்டநிக்ரஹசிஷ்ட பரிபால நம் பண்ணின அவர்களைப்போல், தாமும், பாஹ்யக்குருஷ்டி மதங் களை நிரஸித்து பரமஸாத்விகமான விசிஷ்டாத்வைத மதத்தை ப்ரவ்ருத்திப்பித்தார்.

நான் முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்கிற இரண்டு ப்ரபந்தங்களாலும், தத்வஹித புருஷார்த்தங்களைச் சேதநர்களுடைய உஜ்ஜீவனார்த்தமாக அருளிச்செய்து, நம்புவியில் நாலாயிரத் தெழுநூறு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து பிறகு பரமபதத்தை யடைந்தார். அநந்தரம், 'பின்னானார் வணங்குஞ் சோதி' என்கிற படியே, எம்பெருமான் விபவாவதாரத்திலே உதவப் பெறாதவர் களுக்காக அர்ச்சாவதாரமா யெழுந்தருளியிருக்குமாப்போலே, இவ்வாழ்வாரும் அர்ச்சாவதாரமாய் திருமழிசையில் எழுந்தருளி யிருக்கிறார். இவ்வாழ்வாருக்கு யுவஸூ தைமீ 17ம்உ (30-1-36) துடங்கி, பத்து தினங்கள் திவ்யோத்ஸவம் நடைபெற்று, தைமீ 26உ (8-2-36) தையில் மகத்தில், சாற்றுமுறை உத்ஸவம் மிகவும் விமர்சையாய் நடைபெற்றது.

தையில் மகம்.

பத்ராதிபர்.

தையில் மகத்தன்று இப்பத்ரிகை அவதரிக்கும்படி நேர்ந்தது ஒருபெரியபாக்யமே. அத்தினத்தைச் சிறிது ஆராய்வோமானால் அத்தினத்தில் அவதரித்த ஆழ்வாரின் பெருமையும் அவர் அவ தரித்த திவ்ய தேசத்தின் பெருமையும் நமது புத்திக்குத் தோன் றாமற் போகாது. ஏகஸம்பந்திஜ்ஞானம் அபரஸம்பந்திஸ்மாரக மிறே! மற்ற தினங்களைக்காட்டிலும் இந்தத்தையில் மகத்திற்குண் டான ஏற்றத்தை மஹாநுபாவரான மாமுனிகள் துய்யமதிபெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாளென்று பேசியிருப்பது நன்குணரற் பாற்று—மாமுனிகள் மற்ற ஆழ்வார்களுக்கு அடைமொழி அரு ளிச்செய்யுங்கால் எப்புவியும் பேசுபுகழ்ப்பொய்கை என்றும் நற் றமிழால் நூல்செய்து நாட்டையுய்த்த பெற்றிமையோர் என்றும்

வாய்த்தபுகழ் மங்கையர்கோன் என்றும் ஜன்னுபுகழ் மாமறை யோன் தொண்டரடிப்பொடி என்றும் அருளிச்செய்து இவ்வாழ் வாருக்கு அடைமொழி அருளிச்செய்யுமிடத்து துய்யமதிபெற்ற மழிசைப்பிரான் என்று அருளிச்செய்தமை ஆராயத்தகுந்ததே.

துய்யமதிஎன்பதை ஆராயுமிடத்து அதற்கு விருத்தமான மதிகள் சில உண்டென்பதும் அவைகளை நீக்கி துய்யமதியை இவ் வாழ்வார் பெற்றார் என்பதும் குறிக்கொள்ளத்தகுந்தது. இதை இவ்வாழ்வாரே * சாக்கியம் கற்றோம் சமணம் கற்றோமச்சங்கரனா ராக்கிய ஆகமநூலாராய்ந்தோம் பாக்கியத்தால் செங்கட்கரியானைச் சேர்ந்தியாம் தீதிலோமெங்கட்கரிய தொன்றில் * என்ற பாசுரத்தி னால் நன்கறிவித்திருக்கின்றார்.

தீயமதிகளை நன்கறிந்து அவற்றைக்கார்கடைக்கொண்டு துய்ய மதியைப்பெறுவதே பெருமையுடைத்து. அவ்வாறின்றி முதலடி யிலேயே உண்டாகும் தூயமதி அவ்வளவு சிறப்புடையதாகாது என்பது உற்றுணரத்தகும்.

மதியாவது மூன்று வகைப்படும். அதமம் மத்யமம் உத்தமம் என்று—அவைகளில் அதமமதியாவது தேவதாந்தரங்களுக்கு சேஷமென்றிருக்கை. மத்யமமதியாவது எல்லாம் அவன் மூர்த்தி யாகையால் எல்லாத்தெய்வங்களுக்கும் நாம் சேஷமென்றிருக்கை. உத்தம மதியாவது எம்பெருமானுக்கே சேஷமென்றிருக்கை. அதையே துய்யமதி என்று மாமுனிகள் அருளிச்செய்தது— அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதானம் என்றும் விரோதி போயனுபவிக்கவேண்டும் என்றும் உலகாரியன் உலகுய்ய உபகரித்த ஸ்ரீஸூக்திகள் உத்கோஷிக்கின்றதும் இவ்வர்த்தத்தையே. இவ் வாழ்வாரும் நான்முகனை நாராயணன் படைத்தான் என்றும் தெருங்கால் தேவன் ஒருவனே என்றும் மெய்ப்பொருளை யானறிந்த வாறு என்றும் உபக்ரமித்து வேறொருவரில்லாமை நின்றான் என்றும் மாதவனை ஏத்தாதார் ஈனவரே என்றும் உன்னையன்றியிலேன் கண்டாய் என்றும் கூரம்பனல்லால் குறை இலே—என்றும்—விண்ணவற்கு நற்பொருள் நாராயணன் என்றும் ஆதிநெடுமால் அணைப்பார் கருத்தனாவான் என்றும் காகுத்தனல்லால் ஒரு தெய்வம்யானிலேன் என்றும் திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் என்றும் பெருந்

குருந்தம் சாய்த்தவனே என்னெஞ்சமானவர் என்றும் விடையேற்றான் வெவ்வினைதீர்த்தாயானுக்கு ஆக்கினேன் அன்பு என்றும் கலிக்குநிறைபொருளாய் நின்றானை நேர்பட்டேன் பார்க்கில் மறைப்பொருளும் அத்தனையே என்றும் நால்வேதமாத்தவமும் நாரணனே என்றும் கழற்காலமன்னனையே கண்ணனையே தொழக்காதல்பூண்டேன் என்றும் சொல்லுகிற மதியே தூய்யமதி என்றும் சொல்லி அறியார் சமணர் அயர்த்தார் என்றும் ஏத்தாதார் ஈனவர் என்றும் மறந்தும் புறந்தொழாமாந்தர் என்றும் தேவதாந்த விஷயமான மதிகளைக்கழித்து இனி யறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் இனியறிந்தே னெம்பெருமானுன்னை இனியறிந்தேன் காரணன்நீ கற்றவை கற்பவைநீ நற்கிரிசை நாரணன்நீ நன்கறிந்தேன் நான் என்று முடித்திருக்கிற திவ்யப்ரபந்தத்தால் நன்கறிவித்திருக்கின்றனர்.

இது போலவே இவ்வாழ்வார் அவதரித்த திவ்யதேசத்தின் பெருமையும் உலகுமழிசையுமுள்ளுணர்ந்து என்கிற பாசுரத்தினால் நன்கு விளங்காநிற்கும் இவ்வாழ்வாரின் பெருமையையும் அவரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தின் பெருமையையும் அவரவதரித்த திவ்யக்ஷேத்ரத்தின் பெருமையையும் நாம் ஸ்மரிக்கும் படியாகச் செய்த இந்தத் தையில் மகத்தன்று இந்த இராமாநுஜஸித்தாந்த வைஜயந்தியின் மூன்றாவது ஸஞ்சிகை வெளிவந்தது மிகவும் போற்றற்குரியதே.

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தவைஜயந்தீக்ராஹக மஹாஶயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

இப்பத்ரிகையானது யதிஸார்வபௌமரான எம்பெருமானார்க்குப்பின் இரண்டு மாலைகளாகப் பிரிந்திருக்கின்ற உபயஸம்ப்ரதாயார்த்தங்களை நிஷ்பக்ஷபாதமாய் வெளியிட்டும் அவைகளுக்குண்டாயிருக்கும் ஐககண்ட்யத்தை யாவந்மதி தெரியப்படுத்தவும் உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள மஹாவித்வான்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களைச் சிரமேற்கொண்டு வெளியிடவும் அவ்வாறு வெளியிடுவதில் அதிவாதங்களில்லாமல் லோகோபகாரமான விஷயங்

களையே ப்ரசுரப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஸஞ்சிகைகள் வெளிவந்து இத்துடன் மூன்று ஸஞ்சிகைகள் ஆகின்றன; பத்ரிகையில் விஷயதானமருள வாக்களித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் ஸ்வாமிகள் ஸந்நிதியில் அடியேன் நேரில்சென்று அடிபணிந்து வேண்டிக்கொண்டிருக்கிறேன். அவர்களும் விஷயதானம் செய்வதாக வாக்களித்திருந்தாலும் இதுகாறும் ஷை ஸ்வாமிகள் ஒருவரும் ஒருவிஷயமும் அநுக்ரஹிக்கவில்லை. அதற்கு அந்த ஸ்வாமிகளிடத்தில் யாதொருகுறைகளையும் கூறுவதற்கு அவகாசலேசமும் கிடையாது.—மத்பாபமே வாத்ரநிமித்தம் என்றுதான் சொல்லவேண்டும். இனிமேலாவது ஷை ஸ்வாமிகள் அறிவொன்றுமில்லாவடியேனுடைய குறைகளைக் குறிக்கொள்ளாமல் குறையொன்றுமில்லாத தங்கள் நிறைவுகளையே நினைத்து விஷயமருள்புரிய வேண்டுமென்று ஸாஷ்டாங்கப்ரணதிபூர்வகம் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

இந்த நிலைமையில் பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமி பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அருளிச்செய்கிற விஷயங்களை மாத்திரமே அச்சிட்டு வருகிறேன் இவ்வாறு மற்றவர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களையும் அச்சிடும்பாக்யம் அடியேனுக்குண்டாகும்படி அருள்செய்யுமவர்கள் எவரேனும் அவர்திறத்து தலையல்லால் கைமாறிலேன்.

அவ்வாறு விஷயதானம் அருள் செய்யுமவர்கள் கடிதத்தில் ஒரு பக்கத்தில் ஸ்பஷ்டமாக எழுதி அநுக்ரஹித்தால் அப்படியே அச்சடிக்கக் கொடுக்கப்படும். அவர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களில் ஏதாவது ஏற்றத்தாழ்வுகளேற்பட்டால் அவை விஷயதானம் செய்தவர்களைச் சேர்ந்ததே ஆகும். அதற்குப் பத்ராதிபர் ஒருவிதத்தாலும் உத்தரவாதியாகமாட்டார்.

இங்ஙனம்: ஸ்ரீவைஷ்ணவதாஸ பாததூளி

வடகரை : இராமாநுஜாசாரி.

பத்ராதிபர் S. R. S. வைஜயந்தீ.

ஸ்ரீ

பாடப் பிறழ்வுகள்.

[பெருமாள் கோயில்
ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார்.]

ஸம்ஸாரிகளான நாம் உஜ்ஜீவிப்பதற்காக நமது பூர்வர்களான ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அருளிச்செய்துள்ள திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பல காரணங்களினால் பாடப் பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. திவ்யப்ரபந்த மூலம், ஸ்தோத்ர பாடங்கள், ரஹஸ்யங்கள் ரஹஸ்ய வ்யாக்யானங்கள், அருளிச்செயல் வியாக்கியானங்கள் முதலிய ஸகல க்ரந்தங்களிலும் பல விடங்களில் உண்மையான பாடம் தவறி வேறானபாடம் வந்துபுகுந்திருக்கின்றதென்பதை விவேகிகள் ஆராய்ந்து உணரவேண்டும்.

உண்மையான பாடம் பிறழ்ந்து போவதற்குப் பல காரணங்களுண்டு. ஞானமில்லாதவர்கள் தாங்கள் ஒருவிதமாக க்ரஹித்துப் பிறர்களுக்கும் அப்படியே சொல்லிவைப்பதனால் சில பிறழ்வுகள். ஞான முள்ளவர்களாகவே யிருந்தாலும் ஏதோ வொருவிதமாகத் தாங்கள் ப்ரமித்து ஒரு பாடத்தை ஆதரித்து அதையே ப்ரவசநம் செய்வதனால் சில பிறழ்வுகள். ஏடுபார்த்து எழுதுகிறவர்கள் 𑌭𑍍𑌰𑌮𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌦𑌿 (ப்ரம ப்ரமாதாதி)களாலே ஒருவிதமாக எழுதிவைத்துவிட அதனால் சில பிறழ்வுகள். அச்சிடுங் காலத்தில் சொற்கள் நிலை மாறுவதும் எழுத்துக்களும் பதங்களும் வாக்கியங்களும் விகாரப்படுவதும் விட்டுப்போவதும் ஆகிய இவற்றால் பல பிறழ்வுகள்.

ஆகவிப்படிப் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகள் ஆங்காங்குப் பிறழ்வெய்தி யிருப்பதானது விபரீதமான அர்த்தங்களைத் தருவதற்கும் ஹேதுவாகின்றமையால் ப்ராமாணிகர்களாயும் சிறந்த விவேகிகளாயுமுள்ள மஹான்களின் உதவியைக் கொண்டு பிழைதிருத்தங்களை ப்ரகாசப்படுத்திவைக்க வேண்டுமென்று நமக்குப் பெரிதும் ஆவலுள்ளது. 𑌭𑍍𑌰𑌮 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦 (ப்ரம ப்ரமாத)ங்கள் எல்லார்க்குமே ஸம்பா

விதமாதலால் க்ரமமாகவேயுள்ள பாடத்தையும் சிலர் திருத்திவிடக்கூடும்; ஆதலால் எதை உண்மையான பாடமென்று நம்புவது—என்று சிலர் கருதக்கூடும். மானிடராய்ப் பிறந்தாரெல்லார்க்கும் 𑌭𑍍𑌰𑌮 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦 (ப்ரம ப்ரமாத)ங்கள் ஸஹஜங்களே யென்பதில் ஆக்ஷேபமில்லை. நம்முடைய க்ஷுத்ரமான புத்தியைக் கொண்டு திருத்தவேணு மென்பது நமது அபிப்ராயமன்று. தகுந்த ஆதாரங்கள் கிடைத்தால் அவற்றில் ஔசித்யமும் தோன்றினால் திருத்துவது நலம் என்பதே நமது கருத்து.

திருக்கச்சி நம்பிகள் அருளிச் செய்த தேவராஜாஷ்டகத்தில் "ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ரபீஷணே। விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷாபாதப சாலிநி"॥ என்கிற ச்லோகத்தில் முதல் மூன்று பாதங்களினுடைய முடிவும் ஏகாரமாக விருப்பதால் கடைசிபாதமும் அப்படியேதானிருக்க வேண்டுமென்றெண்ணியோ? வேறு காரணத்தினாலோ "த்ருஷாபாதபசாலிநே" என்று பலரும் சொல்லிவருவது ப்ரஸித்தம். இப்படிப்பட்ட ச்லோகங்கள் மிக்க இளம் பிராயத்திலேயே கற்பிக்கப்படுவதால் ஈரமரத்தில் அடித்த ஆணிபோல் சிக்கன க்ரஹிக்கப்படுகிற பாடம் பாண்டித்யம் பெற்ற வளவிலும் மாறமாட்டாமல் நிற்கிறது. சிறந்த வித்வான்களாகவுள்ளவர்கள் அநுஸந்தித்தாலும் அதில் ஒரு ஆராய்ச்சியின்றியே பால்ய பாடப்படியே அநுஸந்தித்து வருவதைக் காணுகின்றோம். இது பிழையல்லவா? என்று உணர்த்தினால் ஆமாமென்று இசைகின்றார்கள். ஆனாலும் மறுபடியும் பழையபாடமே அவர்களுடைய வாக்கில் வந்துவிடும். இதை வாயிதா𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 (பாதிதாநுவ்ருத்தி) யென்பார்கள்.

மணவாளமாமுனிகளின் திநசர்யை, யதிராஜவிம்சதி முதலான ஸ்துதிகளும் இளம்பிராயத்திலேயே கற்பிக்கப்படுவதால் அவற்றிலும் எவ்வளவோ பாடப்பிறழ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. உத்தரதிநசரியையின் முடிவில்

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]॥"

ஸம்பத் ஸ்வரூபாநு குணைவயஸ்மிந்
ஸர்வோத்தரோயத்ர மந: ப்ரஸாத: ।
ஸத்பிஸ்ஸமம் தைவதமேவ தேஶம்
ப்ராப்தம் ப்ரபத்யே பவதங்க்ரிமூலம். ॥

என்கிற ஶ்லோகம் அநுஸந்திக்கப்பட்டு வருவது அனைவர்க்கும் தெரியும். இதற்கு என்ன அர்த்தமென்று நாம் பல பண்டிதர்களைக் கேட்பதுண்டு, இப்போதும் கேட்கிறோம். அதிலுள்ள பாடப்பிழையைத் திருத்தாமல் அர்த்தஞ் சொல்ல முடியுமா? என்று பாருங்கள். எத்தனையோ பதிப்புக்கள் அச்சாகி யிருக்கிறதே; ஒன்றிலாவது உண்மையான பாடம் காணப்படுகிறதாவென்றும் பாருங்கள். இது ஒரு சிறிய த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டது. இப்படியே ஆழ்வான் பட்டர் முதலானோர் அருளிய பஞ்சஸ்தவாதி(தி)களிலும் பல பிறழ்வுகள் நெடுநாளைக்கு முன்னமே நேர்ந்துவிட்டன என்பதும் க்ரமேண நிரூபிக்கப்படும்.

காலக்ஷேப க்ரந்தங்களாகவுள்ள வியாக்யான க்ரந்தங்களில் உள்ள பிறழ்வுகளை யெல்லாம் இந்தப் பத்ரிகை மூலமாகத் திருத்த வேணுமென்கிற நமது ஆவலைப் பல மஹான்கள் பூர்த்தி செய்வித்தருளவேணும். எல்லாம் திருத்தமாகவே அச்சிடப்பட்டிருக்கின்றதென்றும், புதிதாக யாதொரு திருத்தமும் செய்ய வேண்டியதில்லையென்றும் சொல்லுமவர்களைப்பற்றி நாம் யாதொன்றும் சொல்லுகின்றிலோம். அச்சுப் புத்தகங்களில் பல பாடப்பிழைகள் புகுந்துவிட்டன என்பதை இசைந்து அவற்றைத் திருத்திபருளத் திருவுள்ளம் பற்றியிருக்கும் மஹான்கள் தம்தமக்குத் தெரிந்த திருத்தங்களை உதவியருளவேணும்.

ஒரு அக்ஷரம் மாறிவிடுவதனால் மஹத்தான க்ஷோபம் உண்டாய்விடுகிறதென்பதை நாம் சொல்லவேணுமோ? சிறியவுதாஹரணமொன்று காண்மின்;—ஆசார்ய ஹ்ருதயத்தில் நாலைக்கு குருகுகளுக்கு ஸ்வாப தேச மருளிச்செய்கிற "ஆசநுதாவ் யென்னும்" என்கிற சூர்ணிகையின் ஜீயர் வியாக்கியானத்தில் "தாய் வாயிலுண்ணும் பிள்ளைக்கு இரைதேடி" என்ற வாக்கியத்திற்குப் பொருள் விவரிக்குமிடத்தில்

"தங்கள் வாக்கால் உபகரிக்கும் பகவத் விஷயத்தை உபஜீவித்திருக்கும் குழைச்சரக்சான சிஷ்யர்களுக்குபாயாநுகுணமாக ஸாத்ம்யமான பகவத் விஷயார்த்தங்களை சாஸ்த்ரங்களிலே ஆராய்ந்து உபகரித்து"

என்கிற ஸ்ரீஸூக்தியில் "சிஷ்யர்களுக்குபாயாநு குணமாக" என்கிற பங்திக்கு என்ன அர்த்தம் என்று ஆராய்ந்து பாருங்கள். பல ஸ்வாமிகளை அடியேன் கேட்டிருக்கிறேன்; 'உபாயாநு குணமாக' என்றது அந்வயியாதுதான், 'வயோநு குணமாக' என்றிருக்கும்—என்று சிலர் ஸாதித்தார்கள். எப்படியும் திருத்த வேண்டியது ஆவச்யகமே என்பதை அனைவரும் அங்கீகரிப்பார்கள். நம்முடைய புத்தியைக் கொண்டு நாம் ஸ்வதந்திரமாகத் திருத்துவதிற் காட்டிலும் ஓலை ஸ்ரீகோசத்தைக் கொண்டு திருத்தலாமென்று பார்த்தபோது, ஸாப்ரவஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி, ஓலை ஸ்ரீகோசத்திலிருந்து தாம் திருத்தியிருப்பதாக ஸாதித்து

யகாரஸ்தாநே ககாரஸ் ஸ்யாத்
யகாரஸ்தாநே ககாரபாட்ய:

என்றருளிச் செய்தார். அதாவது—"சிஷ்யர்களுக்கு பாயாநுகுணமாக" என்பதை "சிஷ்யர்களுக்கு பாகாநு குணமாக" என்று திருத்தவேணு மென்று ஸாதித்தபடி. இப்போது எவ்வளவு அழகாக அர்த்தமாகிறதென்று பாருங்கள். சிஷ்யர்களுடைய ஜ்ஞான பாகத்திற்குத் தகுந்தபடி ஆசார்யர்கள் ஆராய்ந்து உபதேசிப்பர்களென்று சொல்வது மிகவும் பொருத்தமானதன்றோ. ககாரத்தை யகாரமாக மாற்றிவிட்டதனால் உண்டான க்லேசம் எவ்வளவென்று பார்க்க.

திருப்பாவையின் வியாக்கியான அவதாரிகையில்—

"தானும் ப்ராப்த யௌவநனாய் அவர்களுக்கும் யௌவநம் வந்து தலைக்கட்டினவாறே"

என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. இப்படியே பல பதிப்புக்கள் வெளிவிட்டன. (ஆய்ச்சிகளுக்கு) யௌவநம் வந்து தலைக்கட்டினதாக இங்குக்காண்கிறது. இப்படியே காலக்ஷேபபரர்களான ஸ்வாமிகளும் ஸாதித்துவரக் காண்கிறோம். யௌவநம் வந்து தலைக்கட்டிற்

றென்றால் என்ன அர்த்தம் என்பதை ஆலோசியாமலும் அந்த ஸ்ரீஸூக்தியில் ஒரு விப்ரதிபத்தியுமில்லாமலும் இருந்து வருகிறோம். நம்பெருமாள் ஸந்நிதியில் அரையர் திருப்பாவை வியாக்கியானம் ஸேவிக்கும்போது குறிக்கொண்டு கேட்டிருக்கையில்

“யௌவநம் வந்து தலைகாட்டினவாறே”

என்று ஸேவிக்கக் கேட்டுப் பரமாநந்த மடைந்தோம் ஓலை ஸ்ரீகோசங்களில் கா என்னு மெழுத்தைக் கூட்டெழுத்தாக எழுதினால் க்க என்றும் வாசிக்க நேர்ந்துவிடுகிறது. அவ்விதமாக நேர்ந்த பிறழ்வே இது. இங்கு விபர்யயம் ஸ்வல்பமேயானாலும் ரஸபங்கம் வாசாமகோசரமன்றோ. இங்ஙனே காட்டக்கூடிய பிறழ்வுகள் பலபல இருப்பதனால் பெரியோர்களிடம் நாம் கேட்டவற்றை க்ரமேண எழுதிவருவோம்; இங்ஙனமே மற்றும் பல மஹான்களும் தாம்தாம் க்ரஹித்துள்ள திருத்தங்களை இப்பத்திரிகை வாயிலாக ரஸிகர்களுக்கு உபகரிக்கவேணும்.

T. S. ராமானுஜாசார்யர்

வடகரை இராமானுஜாசாரியாருக்கு எழுதிய பத்ரிகை.

13. ஆனைக்கட்டி வீதி,

சின்ன காஞ்சீபுரம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தாஸஸயாநந்த ப்ரணதி பூர்விகேயம் விஜ்ஞப்தி:

உபய குசலோபரி.

தேவரீர் அனுப்பிய மூன்று பத்திரிகையும் வந்து சேர்ந்தன. ரொம்பவும் ஸந்தோஷம். அதில் திருக்கோட்டியூர் ஸ்வாமியையும் விஷயதானம் செய்பவரில் ஒருவராக எழுதப்பட்டிருக்கிறது. அது ஸரியல்ல என்பதற்காகவே இப்பொழுது அடியேன் விஜ்ஞாபிப்பது. தேவரீர் இங்கு ஏள்ளியிருந்த ஸமயம் அந்த ஸ்வாமியின் திருமாளி

கைக்கு ஏள்ளி விஜ்ஞாபித்ததெல்லாம் ஞாபகமிருக்கலாம். இருந்தாலும் அடியேன் ஞாபகப்படுத்துகிறேன். அதாவது—அண்ணங்கராசார்ஸ்வாமி தேசிகஸூக்தி விஜயத்வஜமாலா என்று ஒரு பத்திரிகை பிரசுரித்து அதற்கு தேவரீரை காரியதரிசியாக ஏற்படுத்தியதாக தேவரீரிடத்தில் ஸாதித்ததாகவும் அதற்கு தேவரீர் இது சண்டைப் பத்திரிகைகளுக்கு நான் காரியதரிசியாக இருக்கமாட்டேன் ஆனால் சண்டையில்லாமல் ராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தி என்று ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்தலாமென்று சொன்னதாகவும் அவரும் அதற்கு ஸரி என்று ஆமோதித்ததாயும் ஆகலால் அப்பத்திரிகை நடத்தப்போவதாயும் அதற்கு ஏதாவது விஷயதானம் செய்ய வேண்டுமெனவும் பிரார்த்தித்தீர். ஆனால் அந்த ஸ்வாமி நான் ஒரு பத்திரிகைக்கும் விஷயம் எழுதுவதில்லை. எனக்கு கலஹங்களை பிடிப்பதில்லை. நான் எழுதினால் அதில் யாராவது தப்பு கண்டுபிடித்து புஸ்தகம் எழுதுவார்களென்றும் அப்புறம் பிரகிருதி வாஸனையால் எனக்கும் எழுதத்தோன்றும் ஆகலால் நான் எழுதுகிற வம்புக்கே போகமாட்டேன் என்னை வாயால் சொல்லச் சொன்னால் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லுகிறேன் என்று ஸாதித்தார். அதற்கு தேவரீரும் அதை ஒத்துக்கொண்டு இந்த சண்டைகளை எனக்கு பிடிப்பதில்லை. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமியையும் சண்டை வேண்டாமெனவும் தடுத்துவருவதாயும் சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டீர். இப்பொழுதோ என்றால் முதல் புஸ்தகம் அருணோதயத்திலேயே தேவரீரே சண்டைக்கிகச்சம் கட்டிவிட்டீர். அதுபோனாலும் பொது விஷயங்களையே அந்த பத்திரிகையில் பிரசுரிக்கப் போகிறேனென்று சொல்லிவிட்டு இப்பொழுது சண்டைக்கு விஷயமான வியாஸம் ஒன்று எழுதியிருக்கிறது. அதாவது ஒரு வியாஸத்தில் பகவானுடைய பாதாரவிந்தமடைவதற்கு ஸம்பந்த க்ஞானம் ஒன்றே போதும் வேறு ஒன்றும் வேண்டாமென்று எழுதியிருக்கிறது. இது கலஹாஸ்பதமே என்று தேவரீரே அரிந்திருக்கும். இப்பேர்பட்ட விஷயத்தை பிரசுரித்துவிட்டு விஷயதானம் செய்யமாட்டேனென்று ஸாதித்த ஸ்வாமி திருநாமத்தையும் விஷயதானம் செய்பவராக எழுதப்பட்டிருக்கிறது தேவரீர் ரொம்ப ஸாத்விகர் என்று எண்ணியிருந்தேன். ஆனால் ஸஹவாஸ தோஷம் தேவரீர் என்ன செய்யும் பாவம். தேவரீர் தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை பத்திரிகைக்கு

ஏதோ எழுதியிருந்ததாயும் அவர்கள் ஸரியாக பிரசுரிக்கவில்லையென்றும் எழுதியிருக்கிறது அவர்கள்மேல் குற்றம் சாட்டுவதால் தேவரீர் எந்த விஷயமாயிருந்தாலும் பிரசுரிக்குமென்று தோன்றுகிறது. ஆதலால் இதை அவசியம் தேவரீர் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
T. S. ராமாநுஜ:
காஞ்சீ.

சரியானப்ரதி.

வடகரை இராமாநுஜாசாரியார்

T. S. ராமாநுஜாசாரியாருக்கு எழுதிய பத்ரிகை.

25, ஆசாரப்பன் தெரு,
சென்னை.
6—2—36.

ஸ்ரீ
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அடியேன் வடகரை ராமாநுஜார்ய தாஸன் தாளுந்தடக்கையுங்கூப்பிப் பணிந்துசெய்யும் விண்ணப்பம். உபய க்ஷேமம். சிலமில்லாச் சிறியனை அடியேனைப் பொருளாக்கி அநுக்ரஹித்த திருமுகத்தைச் சிரஸால் வஹித்துப் பேரானந்த மடைந்தேன். அடியேன் பெருமாள் கோவிலுக்கு விடை கொண்டிருந்த காலத்தில் ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் பத்ரிகைக்கு விஷயதான மருள வேண்டும் என்று வேண்டிக்கொண்ட காலத்தில் ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நடந்த ஸல்லாபங்களில் சில விஷயங்கள் மாத்திரமே ஸ்வாமி திருமுகத்தில் அநுவதிக்கப்பட்டிருக்கிறது. அதைச்சிறிது ஆலோசித்தால் அத்திருமுகம் ஸ்ரீ ஸ்வாமியுடன் கலந்து அநுக்ரஹித்தாகக் காணப்படவில்லை. தேவரீரும் அன்று அவ்விடமிருந்ததாகவே நினைக்கின்றேன். அவ்வாறிருந்திருந்தால் இவ்வாறு அநுக்ரஹிக்க இயலாது. ஒருசமயம் மறந்திருக்கலாம் என்றும் எண்ணுவ

தற்கிடமாகின்றது. ஆதலால் அதுவிஷயத்தை "ஸ்மாரயேத்வாம் நசம்சஷயே." அதாவது ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதிக்கு அடியேன் விடைகொண்டிருந்த காலத்தில் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் மூலமந்த்ராதிகாரம் காலக்ஷேபம் நடந்துகொண்டிருந்ததாக ஞாபகம். அச்சமயம் தேவரீரும் இன்னும் 2, 3, திருநாமங்கள் எழுந்தருளியிருந்தார்கள். அவர்களை அடியேன் இன்னாரென்றறியேன். அதுசமயம் அடியேன் ஒரு விளம்பரப் பத்ரிகையையும் ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் ஸமர்ப்பித்து இப்பத்ரிகை ஸ்ரீ ஸ்வாமி அநுக்ரஹத்திற்கு பாத்ரமாம்படி க்ருபை பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி நான் ஒரு பத்ரிகைக்கும் விஷயதானம் செய்வதில்லை. இதற்கும் நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்றும் சொல்லிக்கடைசியாக திருக்குடந்தைக்கு எழுந்தருளியிருந்தகாலத்து நடந்ததொரு விருத்தாந்தத்தைச் சொல்லியருளி அவரவர்களுக்கு அவரவர்கள் ஸம்ப்ரதாயத்தில் அபிமாநமில்லாமற் போகாது. அப்படி ஏதாவது அவசயாய்ச் சொன்னாலும் அதையும் குற்றமாகக் கண்டிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு திரியுமவர்கள் சிலரிருக்க நீ ஏன் என்னை இவ்வாறு நிர்ப்பந்திக்கிறாய் என்று நியமித்தருளினார். அதற்கு அடியேன் அவ்வாறு பக்ஷபாதமிருப்பது ஆவஶ்யகமே. அதுவும் இப்பத்ரிகையில் வெளிவர வேண்டியதுதானே? என்று வேண்டிக்கொண்டேன். அதன்பேரில் ஸ்ரீஸ்வாமி அடியேனைப் பூர்ணமாகக் கடாக்ஷித்து நீ, நினைத்தபடி எல்லாம் உனக்குக் கைகூடும். இப்பத்ரிகையும் ஒழுங்காக நடைபெறும். நானும் எப்போதாவது பட்டணம் வருவேன். வந்த காலத்தில், உன் பத்ரிகைக்கு விஷயமும் தானம் செய்கிறேன் என்றும் அநுக்ரஹித்தருளினார். அவ்வார்த்தையை அடியேன். "மாயனன்று தெய்வத்தேரினில் செப்பிய மெய்ம்மைப் பெருவார்த்தை" போலவே நம்பி விடைகொண்டு வந்திருக்கின்றேனாதலால் பத்ரிகையிலும் ஸ்ரீ ஸ்வாமி திருநாமத்தைக் குறிப்பிடவும் நேரிட்டது. இது நிற்க, அருளேதயத்தில் ஸ்ரீ உ. வே. கோபாலாசார்ய ஸ்வாமிக்கும் அடியேனுக்கும் நடந்த வாதப்ரதிவாதமான பத்ரிகைகளை அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் அடியேன் சிற்றறிவிற்கு விஷயமான பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த அர்த்தங்களையே விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன் அதில் ஏதாவது விருத்தமாக ஸ்ரீ ஸ்வாமி திருவுள்ளம் பற்றினால் அதையும்

பத்ரிகை மூலம் ப்ரசாரம் செய்கிறேன். மேல் இரண்டு ஸஞ்சிகைகளிலும் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியார் அநுக்ரஹித்த விஷயங்களே. "அதில் பகவானுடைய பாதாரவிந்த மடைவதற்கு ஸம்பந்த ஜ்ஞாநம் ஒன்றே போதும். வேறு ஒன்றும் வேண்டாம்." என்று எழுதியிருக்கிறதாகவும் அது கலஹாஸ்பதமென்றும் ஸ்வாமி திருவுள்ளம் பற்றியிருப்பதாக அநுக்ரஹிக்கப் பட்டிருக்கிறது. அது ஸ்ரீ. அண்ணங்காசார்ய ஸ்வாமி அநுக்ரஹித்த விஷயமே. அடியேன் அறிந்ததும் அப்படியே. அது ஒன்று போதாது வேறும் சில வேண்டுமென்று தேவரீர் திருவுள்ளமானாலும் மிகவும் அழகியதே. பகவத்விஷயத்தில் நாம் எவ்வளவு செய்தாலும் அவன் செய்யும் உபகாரத்திற்கு போதுமென்று நினைப்பதும் பொருந்தாதே. ஆதலின் ஒரு அபிப்ராயத்தால் போதுமென்று நினைக்கவும் கூடும். மற்றொரு அபிப்ராயத்தால அது போதாது என்று நினைக்கவும் ப்ராப்தம். ஆதலின் இவ்விரண்டு அபிப்ராயங்களும் அழகியதாகவே அடியேனுக்குக் காணப்படுகின்றது, ஒருக்கால் ஸ்வாமி திருவுள்ளத்திற்குத் தவறாயிருந்தாலும் சரியானதொரு அர்த்தத்தை அநுக்ரஹித்தாலும் அதையும் வைஜயந்தியின் வாயிலாய் ப்ரசுரப்படுத்தி தந்யனாவேன். தேவரீர் அநுக்ரஹித்த திருமுகத்தையும் அடியேன் விண்ணப்பித்துக்கொண்ட இப்பத்ரிகையையும் இந்த மாதத்தில் தையில் மகத்தன்றே வைஜயந்தி ~~அகில ஸ்ரீ [illegible]~~ ப்ரசாரம் செய்ய ஆரம்பிக்கும். இவ்வாறு அடியேனுக்கு ஹிதமான அமுதமொழிகளை அடிக்கடி அநுக்ரஹிக்க வேண்டும்படி ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் அடியேனுக்காகத் தேவரீர் ப்ரார்த்திக்க வேண்டுகிறேன். வாலிகஜோஷா: க்ஷந்தவ்யா:.

இங்ஙனம் அடியேன் வடகரை,

ராமாநுஜாய தாஸ:

பத்ராதிபர். S. R. S. வைஜயந்தீ.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவாநமாமலை ராமாநுஜஸ்வாமி திருவடியான வடகரை இராமாநுஜாசார்யரால் எழுதப்பட்டது.

புருஷகாரவைபவம்.

நமஶ்ஶ்ரீரங்கநாயக்யை யத்ப்ரூவிப்ரமபேதத: ।
ஈஶேஶிதவ்யவைஷம்ய நிம்நோந்நதமிதம்ஜகத் ॥

புருஷகார ஶப்தார்த்தம்.

புருஷம், கரோதி இதிபுருஷகார: புருஷகாரஸ்ய வைபவம் புருஷகார வைபவம் என்று விரியும்.

பூர்ணத்வாத்புருஷ: என்கிற நிருக்தியினால் தயை, வாத்ஸல்யம் முதலான குணங்களால் பூர்ணன் புருஷஶப்தத்தால் சொல்லப் படுகிறான். ஆதலின் சேதனன் செய்த பாவங்களைப்பார்த்து ஸ்வதந்த்ரனை ஸர்வேஶ்வரன் ஒருக்கால் "க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவயோநிஷு" (அசுபமான கர்மங்களைச் செய்தவர்களை பாபயோநிகளில் தள்ளிவிடுவேன்) என்று சீற்றமுடையனாயிருந்தானேயாகில் அச்சீற்றத்தையும் அதற்கடியான ஸ்வாதந்த்ரியத்தையும் தலை சாயப்பண்ணி தயை முதலான குணங்களை தலையெடுக்கும்படி செய்கை புருஷகாரமாகும்.

அன்றிக்கே ப்ரு பாலநபூரணயோ: என்கிற தாதுவினாலுண்டான புருஷஶப்தமானது, ரக்ஷிக்கிறவனைச்சொல்லுகிறது. இதனால் மஹாபராதத்தைப் பண்ணின சேதனனை ஶிக்ஷித்தல்லது நிற்க ஒண்ணாதபடி கோபித்துத் தலையறுக்கத் தயாராயிருக்குமவனை "க்ருபயாபர்யபாலயத்" என்கிறபடி ரக்ஷகனாகப் பண்ணுகை புருஷகாரமென்று சொல்ல வடுக்கும்—இவ்விரண்டு வ்யுத்பத்திகளாலும் ஈஶ்வரன் விஷயத்தில் பண்ணும் புருஷகாரம் சொல்லிற்றாயிற்று.

புர அக்ரகமநே என்கிற தாதுவில் வ்யுத்பந்நமான புருஷஶப்தமானது அபிமுகமாகச் செல்பவனைச் சொல்லாநிற்கும். இதனால் ஏற்படும் அர்த்தம் யாதெனில்? பரமகாருணிகனான ஸர்வேஶ்வரன் நிர்ஹேதுகமான தன்னுடைய க்ருபையினால் சேதனனைப் பெற நினைக்கும்போது அநாதிகாலம் பண்ணிப்போந்த பாபவாஸனையால் அவனுடன் "த்வம்மேஹம்மே" (நீ எனக்கு சேஷபூதன் என்றால் நான் எனக்கு சேஷபூதன் என்று எதிரம்புகோத்து அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கும் எட்டாதபடி கைகழிய ஓடி விழுகனாய்த்திரியும்

சேதனனை உபதேஶாதிகளால் அவனுக்கு அபிமுகனாம்படி பண்ணுகை. இது சேதனன் விஷயத்தில் பண்ணும் புருஷகாரமாகும்.

இப்புருஷகாரத்தைச் செய்வதற்கு "தேவதேவோ ஹரி:பிதா" என்றும் "பூதாநாம் அவ்யய:பிதா" என்றும் சொல்லப்படுகிற ஜகத்பிதாவான ஸர்வேஶ்வரன் விஷயத்திலும், ப்ரஜைகளான சேதனர்கள் விஷயத்திலும் "த்வம்மாதா ஸர்வலோகாநாம்" என்கிறபடி ஸமஸ்தமான சேதனர்களுக்கும் தாயாய் "விஷ்ணுபத்நீ" என்கிறபடி அவனுக்குப் பத்நியாயுமிருக்கிற பெரியபிராட்டியாரே உரியவள்.

இவள் சேதனர்களுக்கு "த்வம்மாதா என்கிறபடி நிருபாதிக தாயாய் சேதநர்களுடைய க்லேஶம் பொறுக்க கில்லாதவளாய் ஸ்தநந்தயப்ரஜைக்குத்தான் மருந்துண்ணும் மாதாவைப்போலேயும் "கூபத்தில்வீழும் குழவியுடன் குதித்து அவ்வாபத்தைத்தீர்க்கும் அன்னைபோலேயும்" இவர்களுக்காகத்தான் நாட்டில் பிறந்து படாதன படும்படியான பரம தயையை யுடையவளாகையாலும் சேதனர்களுடைய 'நின்றவா நில்லாநெஞ்சில்' ஜந்மாந்தர ஸஹஸ்ரங்களில் இவன் புத்திபூர்வகமாகச் செய்யாததாயும் அவன் திருவுள்ளத்தால் நினைக்கப்பட்டதுமான யாத்ருச்சிக ஸுக்ருதவிஶேஷமடியாக பகவத்விஷயத்தில் அத்வேஷ ஆபிமுக்யங்களுண்டாய் ஆஶ்ரயிக்க இச்சையுண்டானால் அச்சமயம் இவள் ஸாந்நித்யம் உண்டோ? இல்லையோ? என்று ஶங்கிக்கவொண்ணாதபடி "அகலகில்லேன் இறையுமென்று" ஒருமாநொடியும் பிரியாமல் நித்யவாஸம் பண்ணுமவளாயும் "பித்தர் பனிமலர்மேல்பாவைக்கு" என்கிறபடி ஸ்வர்ணமயமான ம்ருகத்தை "ஆநயைநம் மஹாபாஹோ க்ரீடார்த்தம் நோ பவிஷ்யதி" (நீண்டகைகளையுடையாய் இம்மானைக்கொணர்ந்து தரக்கடவாய் நமக்கு லீலையின் பொருட்டு ஆகும்) என்று அவள்கேட்க இளையபெருமாள் இது மாயாம்ருகம் என்று தெரிவித்தாலும் தானும் இது மாயாம்ருகமென்று அறியும்படியான அறிவுடையவனாயிருக்கச்செய்தேயும், அவளுடைய "ஏவம் ப்ருவாணம் சாருத்ஸ்தம் ப்ரதிவார்ய ஶுசிஸ்மிதா" என்கிற மந்தஹாஸத்தில் மயங்கி அவள்சொன்னபடி செய்தல்லது நிற்கவொண்ணாதபடி இனிய விஷயமாயிருக்கையாலும் அவள்செய்யும் புருஷகாரமே கண்ணழிவற்ற புருஷகாரமாகும்.

இப்புருஷகாரத்திற்கு க்ருபை பாரதந்த்ரியம் அநந்யார்ஹத்வம் ஆகிய மூன்றுகுணங்கள் அத்யாவஶ்யகங்களாக ஆகும்.

க்ருபையாவது பரதுக்கத்தை ஸஹியாமல் மிகவும் வருந்துதல். அதாவது நிருபாதிகமாத்ருத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தத்தால் சேதனர்கள் படும் துக்கம் தன்னுடைய துக்கமாய் அத்துக்கம் இனியிதுக்கவ்வருகில்லை என்னும்படி ஸஹிக்கமாட்டாத தன்மையுடையளாயிருக்கை.

பாரதந்த்ரியமாவது பர: (இதர:) தந்த்ர: (ப்ரதாந:) யஸ்ய ஸ: பரதந்த்ர: (யாவனொருவனுக்கு ப்ரதானமானவன் அந்யனோ அவன் பரதந்த்ரன்) தஸ்ய (அவனுடைய) பாவ: (தன்மை) பாரதந்த்ரியம்: அதாவது தன்னபேக்ஷிதத்தை அவனைக்கொண்டே செய்துகொள்ள வேண்டும்படியாயுள்ள ஸ்வரூபத்தையுடையளாயிருக்கை.

அநந்யார்ஹத்வமாவது அ ந் ய ஸ் ய (வேறொருவனுக்கு) அர்ஹ: (போக்யனாயிருப்பவன்) அந்யார்ஹ: (மற்றொருவற்கு யோக்யமானவன்) அந்யார்ஹோநபவதி இதி (மற்றொருவற்கு யோக்யனாக ஆகாதவன்) அநந்யார்ஹ: (அநந்யார்ஹன்) அநந்யார்ஹஸ்ய பாவ: (அநந்யார்ஹனுடைய தன்மை) அநந்யார்ஹத்வம்—அதாவது அவனையல்லது மற்றொருவர்க்கு யோக்யமல்லாத தன்மையுடையளாயிருத்தல்.

க்ருபை சேதநர்களுடைய துக்கம் கண்டு பொருக்கமாட்டாத தன்மையளாய் ஈஶ்வரனோடு சேதனர்களைச் சேர்ப்பிக்கைக்கு உரியது.

க்ருபையுண்டானாலும் தான் ஸ்வதந்த்ரமாய் சேதநரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தியாமைக்கும் அவனை ப்ரவர்த்திப்பிக்கைக்கும் பாரதந்த்ரியம் வேணும்.

இவள் நம்மையல்லது மற்றொருவர்க்கு யோக்யை யல்லாதவளாகையால் இவள் அபேக்ஷிதத்தை தலைக்கட்டுவது நமக்கன்றோ கடமை என்று இவளபேக்ஷிதத்தைச் செய்கைக்கு அநந்யார்ஹத்வம் ஆவஶ்யகம்.

க்ருபை பரமகாருணிகனான ஸர்வேஶ்வரனிடத்திலுமுள்ளதேயாயினும் அவனுடைய க்ருபைக்கும் இவளுடைய க்ருபைக்கும் நெடுவாசியுண்டு.

ஈஶ்வரன் நிரங்குஶமான ஸ்வாதந்த்ரியமுடையனுப் சேதநர்
களுடைய புண்யபாபங்களைநிறுத்து நிக்ரஹாநுக்ரஹங்களைப் பண்ணக்
கடவனாயிருக்கையால் அவனுடைய க்ருபை ஸ்வாதந்த்ரியத்தால்
அமுக்குண்டு ஒரோர் சமயங்களில் தலைகாட்டுமதா யிருக்கும்.
இவள் "காருண்யரூபயா" என்கிறபடி காருண்யமே வடிவெடுத்து
வந்தாற்போலிருக்கையாலும் இவள் க்ருபையைத்தடுக்க வேறொன்று
மில்லாமையாலும் நிருபாதிகமாத்ருத்வப்ரயுக்தமாகையாலும் இவ
ளுடைய க்ருபை வாசாமகோசரமாயிருக்கும்.

இவ்விடத்தில் "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம்
கதஞ்சந தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்"
(மித்ரபாவத்தோடுவந்தடைந்தவனை வருந்தியும்விட சக்தனல்லேன்.
அவனிடத்தில் என்னுடைய புத்தியால் தோஷம் கிடையாது.
உங்கள் புத்தியால் தோஷமுண்டாயிருந்தாலும் வாத்ஸல்யாதி
குணங்களையுடைய எனக்கு அது போக்யமாயே இருக்கும்) என்
றும் "என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்"
என்றும் சொல்லும் ஸ்வபாவனை ஸர்வேஶ்வரனுடைய நாராயணத்
வப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்த ஜ்ஞாநமுடைய சேதநனுக்கு
ஸர்வேஶ்வரனை யாஶ்ரயிக்கும்போது புருஷகாரம் வேண்டு
வானேன்? என்று சங்கிக்கக்கூடும். அநாதிகாலம் அபாரதத்தைப்
பண்ணிப்போந்த இச்சேதநன் ஸர்வேஶ்வரனை [illegible]
போது அவனுடைய ஸ்வாமித்வ ஸௌலப்ய ஸௌஶீல்ய வாத்
ஸல்யாதிகுணங்களை ஶாஸ்த்ரமுகத்தாலும் ஆசார்யோபதேசாதி
களாலும் அறிந்திருக்கச்செய்தேயும் அவனுடைய நிரங்குஶ
ஸ்வாதந்த்ரியத்திற்கீடான புஸ்த்வப்ரயுக்தமான பித்ருத்வ ஸம்பந்
தத்தால், பரிபூர்ணமாக பாபத்தைச்செய்த சேதநன் விஷயத்தில்
ஒருக்கால் நீரிலேநெருப்புக்கிளருமாப்போலே குளிர்ந்த திரு
வுள்ளத்தில் சீற்றமுண்டாய் ஹிதரூபமான தண்டனையைச் செய்யவும்
கூடும் என்று அஞ்சி அவ்வபராதங்களை மறப்பித்து ஸ்வாதந்த்ரியம்
தலைசாய்ந்து வாத்ஸல்யாதிகுணங்கள் தலையெடுக்கும்படிசெய்து
அவனை வஶீகரிக்கைக்கு புருஷகாரம் அவஶ்யாபேக்ஷிதம்.

இவ்வாறு புருஷகாரம் அபேக்ஷிதமானாலும் "பிதாமஹம்
நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா" (என்
னுடைய வ்ருத்தத்தைச் சிந்திக்காமல் என்னுடையபிதாமஹரான

நாதமுனிகளைப்பார்த்து அநுக்ரஹிக்கவேண்டும்) என்று ஆள
வந்தாரும் "ராமாநுஜார்ய சரணோஸ்மி குலப்ரதீப: த்வாஸீத்ஸ
யாமுநமுநே: ஸசநாதவம்ஶ:—வம்ஶ: பராங்குஶமுநே: ஸச
ஸோபி தேவ்யா: தாஸஸ்தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய:"
(அடியேன் எம்பெருமானாருடைய திருவடியை ஆஶ்ரயித்தவன்.
ப்ரபந்நகுலவிளக்கான எம்பெருமானாரும் யமுனைத்துறைவரான
ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவடி ஆகாநின்றார். ஸ்ரீ ஆளவந்தாரும்
நாதமுனிகளின் வம்ஶத்தில் அவதரித்தவர். நாதமுனிகளும்
பராங்குஶரான நம்மாழ்வாரின் திருவடியை ஆஶ்ரயித்தவர். ஆழ்
வாரும் தேவரீருடைய திவ்யமஹிஷியான பெரியபிராட்டியாரின்
திருவடியை ஆஶ்ரயித்தவர். தேவரீர் ஆஶ்ரயித்தவர் அபேக்ஷிதங்
களை அளிப்பவர். ஆதலின் தேவரீருக்கு தாஸனென்று கடாக்ஷிக்கத்
தகுந்தவன்) என்று ஆழ்வானும் அருளிச்செய்திருக்கின்றமையாலும்.
"அந்தோநந்தக்ரஹணவஶகோ யாதி ரங்கேஶ யத்வத் - பங்குர்
நௌகா குஹர நிஹிதோ நீயதே நாவிகேந : புங்க்தே போகாந்
அவிதிதந்ருப: ஸேவகஸ்யார்ப்பகாதி:-த்வத் ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி
ததா தேஶிகோ மே தயாளு:" (கண்ணில்லாதவன் கண்ணுடையான்
கையைப்பற்றிக்கொண்டு எவ்வாறு செல்கிறானோ? ஓடக்காரனாலே
முடவன் ஓடத்தில் வைக்கப்பட்டவனாய் எவ்வாறு அடைவிக்க
படுகிறானோ? அரசனை யறியாத ராஜபுருஷனுடைய அர்ப்பகாதிகள்
போகங்களை எவ்வாறு அநுபவிக்கின்றனவோ? அவ்வாறே உன்னை
அடைவிப்பதில் பரம தயாளுவான என்னுடைய ஆசார்யன் சமர்த்
தனாகிறான்) என்று நம் நிகமாந்த மஹாதேசிகனும் அருளிச்செய்
திருக்கின்றமையாலும், பரமதயாளுவான ஆசார்யன் இச்சேதநனை
முதலடியிலேயே மதீயன் என்று அபிமாநித்து பரிபூர்ணமான
ஜ்ஞாநபக்த்யாதி குணங்களையுடையனாகையால் பகவானுக்கு அத்
யந்தம் அபிமத பூதனாய் "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" (ஜ்ஞாநீ
எனக்கு ஆத்மா) என்று அவன் வாயாலே சொல்லும்படியான
பெருமை வாய்ந்தவனாகையாலும் ஆசார்யனுக்கு சேதந ஈஶ்வரர்க
ளுடைய ஸம்பந்த முண்டாகையாலும் ஆசார்யனுக்கே புருஷகார
யோக்யத்வம் புஷ்கலமாகையால் வரணீயனான் ஸித்தோபாயத்திற்கு
விஶேஷணமான ஸ்ரீ ஶப்தத்தால் சொல்லப்பட்ட பெரியபிராட்டி
யாருக்கு ஶப்தஸித்தமான உபாயவிஶேஷணத்வ மொழிய புருஷ

காரத்வம் கொள்கிற வித்தால் ஒரு ப்ரயோஜநமுமில்லையே என்று ஶங்கிக்கக்கூடும்.

இவ்விடத்தில் ஶப்தஸ்வபாவத்தால் உபாயவிஶேஷணத்வமுண்டாயிருக்கச்செய்தேயும் விடவொண்ணாத ஸம்பந்தமான மாத்ருத்வப்ரயுக்த வாத்ஸல்யாதி குணாதிஶயத்தாலும் தன்னுடைய பூர்வாபராத நிமித்தமாய் ஈஶ்வரனுடைய குளிர்ந்ததிருவுள்ளத்தில் சீற்றமுண்டானால் அச்சீற்றத்தை ஆற்றுகைக்குறுப்பாய் அவனுக்கு அபிமதமாந ஸ்வரூப ரூப குண விபவாதி வைலக்ஷண்யத்தாலுண்டான வால்லப்யாதிஶயத்தாலும் பெரிய பிராட்டியாருடைய புருஷகாரமே கண்ணழிவற்ற புருஷகாரமாகும். மேலும் *ஆகிஞ்சந்யைகஶரணா: கேசித்பாக்யாதிகா: புந:। மத்பதாம்போருஹத்வந்த்வம் ப்ரபத்ய ப்ரீதமாநஸா:॥ லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருதவந்தோ வராநநே (தன்னிடம் கைமுதலொன்றுமில்லாததொன்றையே புகலாகவுடைய சிலபாக்கியவான்கள் என்னுடைய சரணசரோஜங்களிரண்டையும், லக்ஷ்மியைப் புருஷகாரமாகக்கொண்டு உபாயமாகப்பற்றி க்ருதார்த்தர்களாகிறார்கள்) என்றும் மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத:। லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:॥ மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்। அஹம் மத்ப்ராப்த்யுபாயோவை ஸாக்ஷால் லக்ஷ்மீபதி ஸ்வயம்॥ லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ। ஏதஸ்யாஶ்ச விஶேஷோயம் நிகமாந்தேஷு ஶப்த்யதே (ஸம்ஸாரத்தில் அழுந்தாநின்ற ஆத்மாக்கள் என்னைப் பெறுவதற்குப் பெரியபிராட்டியார் புருஷகாரமாக பரமருஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறாள். எனக்கு அபிமதமும் அதுவே. வேறுவிதமானவழி கிடையாது. என்னையடைவதற்கு உபாயம் லக்ஷ்மீபதியானநானே. எனக்கு வல்லபையான பெரியபிராட்டியாரே அடைவிப்பதற்கு யோக்யமானவள். இவ்வர்த்தம் வேதாந்தங்களால் கோஷிக்கப்படுகிறது.) என்று ஶாஸ்த்ரங்களிலும் ப்ரபதநாதிகாரியான சேதனன் பெரியபிராட்டியாரையே புருஷகாரமாகப்பற்றக்கடவன் என்று சொல்லியிருக்கின்றமையாலும் இவளையே புருஷகாரமாகப்பற்ற வடுக்கும்.

ஈஶ்வரன் புருஷோத்தமப்ரயுக்தமான நிரங்குஶ ஸ்வாதந்த்ரியத்தாலுண்டான கடினஸ்வபாவத்தால் நிருபாதிக ஸம்பந்த

முண்டாயிருக்கச்செய்தேயும் பிதாவைப்போலே நம்முடைய ஆஜ்ஞாரூபமான ஶாஸ்த்ரங்களை அதிக்ரமித்து அபராதங்களைச்செய்யாநின்ற சேதநர்களைக்குறித்து ஒருக்கால் திருவுள்ளம் கலங்கி *நமாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:। மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரீம் பாவமாஶ்ரிதா:॥ தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்। க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு॥ ஆஸுரீம் யோநி மாபந்நா: மூடா ஜந்மநி ஜந்மநி। மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் கதிம்॥ என்று பாபயோநிகளில் தள்ளி நரகாதிகளை அநுபவிக்கும்படி செய்வேன் என்று தன்வாயாலே சொல்லுகையாலே மிகவும் பீதரான சேதநர்களைத் தானே அங்கீகரித்து தன்னுடைய வால்லப்யாதிஶயத்தாலே ஸர்வேஶ்வரனை வஶீகரித்து அபராதங்களை க்ஷமிப்பித்து அங்கீகரிக்கும்படி பண்ணுவிற்கும்.

இவ்வளவாக புருஷகாரஶப்தார்த்தமும் அப்புருஷகாரத்தைச் செய்வதற்கு பெரியபிராட்டியாரே யோக்யமானவள் என்பதையும் அவள் சேதனன்விஷயத்திலும் பரமசேதநன் விஷயத்திலும் பண்ணும் புருஷகாரத்தின் படியையும் ஜீவேஶ்வரர்களிடத்தில் இவளுக்குண்டான ஸம்பந்தத்தையும் ஸர்வேஶ்வரன் இவள் விஷயத்தில் பண்ணும் ப்ரேமாதிஶயத்தையும் புருஷகாரத்திற்கு ஆவஶ்யகமான குணங்களையும் அக்குணங்களின் உபயோகத்தையும் ஸர்வேஶ்வரனுடைய க்ருபைக்கும் இவளுடைய க்ருபைக்குமுள்ள வாசியையும் இவளைப்புருஷகாரமாகப்பற்றுவிடில் நிரங்குஶ ஸ்வதந்த்ரனான ஸர்வேஶ்வரன் ரக்ஷிக்காமலிருப்பதுடன் ஶிக்ஷிக்கவும் கூடும் என்பதையும் ஆசார்யன் பண்ணும் புருஷகாரத்தைக் காட்டிலும் அவனுக்குப் பத்நியாய் வால்லப்யமுடையளாய் அவனோடு நித்யவாஸம் பண்ணுமவளாயிருக்கும் இவள் புருஷகாரமே கண்ணழிவற்ற புருஷகாரமென்பதையும் சொல்லித்தலைக்கட்டியிருக்கிறது.

இவ்வர்த்தங்களையெல்லாம் நாம் சாஸ்த்ர முகத்தாலே அறியப் பார்ப்போமானால் சாஸ்த்ரங்களில் வைத்துக்கொண்டு “வேதாச் சாஸ்த்திரம் பரம் நாஸ்தி” என்று சொல்லப்படுகிற அபௌருஷேயமான வேதமும் “அநந்தாவை வேதா:” என்கிறபடி

அநந்தங்களாய் அதிலும் அர்த்தம் அறியப்புகுமிடத்து அநேக ஶாஸ்த்ராபேக்ஷையுடையதாய் அல்ப அறிவுடையார்க்கு அறிய வரிதாய் மறைபட்டிருக்கும் ஸ்வயோக மஹிமையால் அவ்வேதார்த்தங்களை ஸாக்ஷாத்கரித்த பரம ருஷிகளால் அவ்வேதார்த்தப் ப்ரதிபாதகங்களாக அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களும் அவ்வோ அதிகாரிகளுக்கு அநுகுணமாகப் பல புருஷார்த்தங்களைப் பலவகைகளாகப் பேசுமவைகளாதலால் ஸாராஸார விவேகிகளுக்கல்லது அறிய வரிதாயிருக்கும்.

மேற்சொன்னவைகள் போலன்றிக்கே ஸம்ஸாரி சேதநர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாய் ஸர்வேச்வரன் தானே ஆசார்யனாய் நின்று ஸ்வஶிஷ்யனான நரனை வ்யாஜீகரித்து உபதேசித்த ஸகல வேதஸாரமான திருமந்த்ரமும் அஷ்டாக்ஷரமாய் 'அகாரத்திலே லக்ஷ்மீ ஸம்பந்தம் அநுஸந்தேயம்' என்றும், 'அவன் பார்வை விட்டுப்பிரியில் இவ்வுயிர் விட்டுப் பிரிவது' என்றும் சில யுக்திகளைக் கொண்டு அறிய வேண்டியபடியாயிருக்கும். ஸமஸ்த ஶாஸ்த்ர தாத்பர்யபூதமான அர்த்தம் அவ்வக்ஷர அகாரத்தில் ஆர்த்தமாகக் கிடந்து ஸ்ரீஸம்பந்தத்தைசாப்தமாகவும் நமச்சப்தத்தாலும் நாராயணபதத்தாலும் சொல்லப்பட்ட உபாயோபேயாம்சங்களை அழகாக அறிவிக்குமதாய் அதிலும் அவ்வர்த்தநிஷ்டர்களுடைய அநுஷ்டாநரூபமாயிருக்கும் தொன்றுகையால், அநந்தங்களாய் மறைகளாயிருக்கும் வேதங்களைக் காட்டிலும் பல புருஷார்த்தங்களையும் பலவாறாகக் கலசிப் பேசும்படியான இதிஹாஸாதிகளைக் காட்டிலும் அதி ஸுருக்கமாய் அர்த்தங்களைக்கொண்டு ஸங்க்ரஹித்தறியவேண்டிய திருமந்த்ரத்தைக் காட்டிலும் இதராபேக்ஷையின்றியில் சேதநோஜ்ஜீவனத்திற் குறுப்பான ஸகலார்த்தங்களையும் ஸம்யக்காக ஸங்க்ரஹிக்கும். மேலும் ஸகல ஶாஸ்த்ரங்களும் சேதநனுடைய விஶிஷ்ட வேஷத்திலே நோக்காய் ஸதாநாநுஷ்டாநம் பண்ணயோக்யமான தேகத்தாலேயே புருஷார்த்தஸித்தி என்றிருக்கும். திருமந்த்ரம் சேதநனுடைய நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்காய் சேதநன் ஸ்வரூபத்தில் நின்றும் ஸகலாங்கிகளையொழிய அகாரவாச்யனான ஸர்வேச்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாதாகையால் அவனுடைய ரக்ஷண ப்ரவ்ருத்திக்கு விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே பேறென்று சொல்லாநிற்கும்.

(தொடரும்)

ஏஜன்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

அதிருசிகரம்! அதிஸௌகர்யம்!

சமயலுக்கு இன்றியமையாத ஓர் புதிய பதார்த்தம்.

ஷட்விதபா கோபயோகி

என்கிற

இண்டியன் குக்கிங் பவுடர்.

INDIAN COOKING POWDER
V.R. GOPALA IYENGAR
GODHA VILASAM
25. ACHARAPPAN ST. G.T. MADRAS
REGISTERED TRADE MARK
SHADVITHA PACOPAYOGI
TRADE MARK
INDIAN COOKING POWDER
ACHARAPPAN ST. MADRAS
சட்விதபாகோபயோகி
V.R.கோபால அய்யங்கார்
கோதா விலாசம்
25 ஆச்சாரப்பன் வீதி ஜீடி மதறாஸ்

சென்னை கார்ப்ரேஷன் சுகாதார ஆபீஸர்களாலும் மற்றும் பல ஸாராஸார விவேகிகளாலும் பரீக்ஷித்து பாராட்டப்பெற்றது.

ரஸம் சாம்பார் முதலான பதார்த்தங்கள் புளி உப்பு மிளகாய் முதலானவைகளில்லாமலே அதி சுலபமாயும் அதி ருசிகரமாயும் அதி சீக்கிரத்தில் செய்து கொள்ள உபயோகமாயிருக்கும்.

(1) அப்படியே இட்லிமுதலானவைகளுக்கு உபயோகிக்கலாம்
(2) ஜலத்தில் கட்டியாய் கலந்தால் சட்னியாகும்.
(3) புளிப்பில்லாத்தயிரில் கலக்க தயிர்ப்பச்சடியாகும்..
(4) சாதத்தில் கடலைப்பருப்பும் முந்திரிப்பருப்பும் வறுத்துச் சேர்த்துப் பொடியைக்கலக்க புளியோதனமாகும்.
(5) சமையல் செய்த பருப்பில் சேர்த்தால் சாம்பாராகும்.
(6) கொதித்த ஜலத்தில் சேர்த்து விட்டால் ரஸமாகவேயிருக்கும்.

"கோதாவிலாசம்" 25, ஆசாரப்பன் தெரு, மதராஸ் } V. R. GOPALA AIYANGAR, Proprietor

Registered No. M. 3401

விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச்சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1-க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம்பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசுவளயல்களுக்கும் கேட்லாக்கு உண்டு அதைவாங்கி நெம்பரைக்குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்து கொடுக்கப்படும்.

பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Edited & Published by Vadakarai Ramanujachariar, 25, Acharappan St., and Printed at the Newman Press, 161, Broadway, Madras.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த
ஸம்ஸ்தாபன ஸபையின்
சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத்ஸம்ப்ரதாயார்த்தப்ரகாசனபத்ரிகை.

ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்காராசாரியார்.

[ஸம்புடம் 1.] யுவ(ஹு) கார்த்திகையில்கார்த்திகை [சஞ்சிகை 1.

ப்ரோப்ரைட்டர்: வடகரை இராமானுஜாசார்யர்
25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

1935 நவம்பர்.] [தனிப்ரதி விலை 0—3—0

விஷயஸூசிகை

விஷயம்	பக்கம்
1. பத்ராதிபரின் விஜ்ஞாபநம்.	1
2. எம்பெருமானார் ஸ்ரீஸூக்தம்.	5
3. நம்பெருமாளும் ஸ்ரீ...	7
4. தேசிகனும் திவ்யப்ரபந்தமும்.	11
5. ஸ்ரீலோகார்யர்.	15

புஸ்தகவிமர்சம்

1. ஶிஷ்டாசாரப்ரயோகஸங்க்ரஹம்.	20
2. ஸ்ரீதேசிகஸூக்தி ஸம்ரக்ஷிணீ.	23

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்காபந சபையின் சார்பாக இப்பத்ரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத் தென்னாசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்து அருமையான அர்த்தவிசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்தஸம்ப்ரதாயத்தைப் பற்றிலும் இழிவான வாசகம் எக்காரணத்தையிட்டும் இதில் பிரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது ப்ரொப்ரைட்டரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்டமுடையவர்கள் ப்ரவேசக்கட்டணமாக ரூ. 1–0–0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

சந்தா விபரம்

அங்கத்தினர்களுக்கு	வருஷச்சந்தா	....	1	8	0
” வெளியூர்	”	....	1	12	0
	தனிப்ரதி	....	0	8	0

வெளியூர் சந்தாதார்கள் சந்தாத்தொகையை முன்னதாக அனுப்பி சரியான விலாசத்தைத் தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விளம்பரம்

ராப்பர் முழுப்பக்கம் ஒருதடவைக்கு		....
” அரைப்பக்கம்	”	....
கால்பக்கம்	”	....

விண்ணப்பம்.

ஆசிரியர்கள் :

தற்காலம் ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமிக்கும் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமிக்கும் இடையே நடந்து வரும் வாதப்ரதிவாத ரூபமான பத்ரிகைகளை அனைவரும் அறிந்திருக்கக்கூடும். அவைகளை அடியேன் பார்த்து யதிசக்ரவர்த்தியான நம்மிராமாநுஜன் திருவடி சம்பந்தமுடைய நாமெல்லோரும் பரஸ்பரம் க்ரயவிக்ரயார்ஹர்களாகக் கூடியிருந்து குளிர்ந்து வாழவேண்டியிருக்க அத்தை யிழந்து அந்யோந்யம் த்வேஷமுடையவர்களாயிருப்பது ஸர்வவிதத்தாலும் ஸரியன்று என்று அவ்விரு ஸ்வாமிகள் ஸந்நிதியிலும் தெரிவித்துக்கொண்டேன். அது விஷயமாய் ஸ்ரீ கோபாலார்யருக்கும், அடியேனுக்கும் நடந்திருக்கும் வாதப்ரதிவாதங்கள் அருமையத்தில் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.

ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி அடியேன் விண்ணப்பித்துக் கொண்டதை அங்கீகரித்து, “அவ்வாறு நான் ஒன்றும் எழுதுவதில்லை என்றும் என்னால் ப்ரசுரிக்கப்படும் ஸ்ரீதேசிகஸூக்தி ஜயத்வஜமாலையில் அவ்வாறு யாதொரு தவறும் ஏற்படாதென் ... அதற்கு காரியதர்சியாக இருக்கவேண்டும்” என்று அடியேனைக் காரியதர்சியாக அநுக்ரஹித்தார். அதைக் கடாக்ஷிக்க ஸ்ரீகோபாலாசார்யர் அடியேன் எழுதிக்கொண்ட விஷயம் ... விசேஷமாகக் கண்டிப்பதாகத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீதேசிகஸூக்தி ஸம்ரக்ஷிணீ 3. 4. ஸஞ்சிகைகளில் கண்டனம் செய்து வருகிறார். அடியேன் எழுதிக்கொண்ட விஷயத்தைப் பூராவும் அப்பத்ரிகையில் ப்ரசுரப்படுத்த சம்மதிக்கவில்லை. அடியேன் ஸ்ரீகோபாலார்யர் ஸந்நிதிக்கு அனுப்பிய பத்திரிகையின் நகலைக்கடாக்ஷித்த யூ. பி. ஸ்ரீ கிருஷ்ணமாசார்யார் வேதாந்த தீபிகையில் இதை ப்ரசுரப்படுத்துப்படி செய்கிறேன் என்று பத்ரிகை ஒன்றை வேதாந்த தீபிகைக்கு அனுப்பினார். அதிலும் ப்ரசுரப்படுத்த அனுமதிக்கவில்லை. ஆதலால் இவ்வாறு பக்ஷபாத மன்றியில் உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள மஹானுபாவர்கள் அநுக்ரஹிக்கும் விஷயங்களைச் சிரமேற்கொண்டு ப்ரசுரப்படுத்த ஒரு பத்ரிகை ஆவஶ்யகமென்று நினைத்து ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியை ஆசிரியராயிருக்க

வேண்டுமென்று வேண்டிக்கொண்டது போலவே அடியில் குறிப்பிட்டிருக்கும் ஸ்வாமிகள் ஸன்னிதியிலும் அடிபணிந்து வேண்டிக் கொண்டிருக்கிறேன். அம்மஹாநு பாவர்களும் அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்திருக்கின்றனர்.

இங்ஙனம்

அடியேன் வடகரை இராமானுஜாசாரி,

ஸ்ரீவைஷ்ணவதாஸ பாததூளி:

விஷயதானம்செய்ய வாக்களித்திருக்கும் மஹாநுபாவர்கள்.

ஸ்ரீமான் கோயில் கந்தாடை வாதூல தேசிக அப்பன் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. கோவிந்தப்பங்கார் ஸ்வாமி திருநாராயணபுரம்
ஸ்ரீ உ. வே. தேசி வரதாசாரியார் காரப்பங்காடு
ஸ்ரீ உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணா சாரியார்
ஸ்ரீ உ. வே. A.V. கோபாலாசாரியார் பத்ராதிபர் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணீ
ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை அ. ராமானுஜாசாரியார் திருமழிசை
ஸ்ரீ உ. வே. மேலவாத்தியார் திருமலை அய்யங்கார் ஸ்ரீ வில்லிபுத்தூர்
ஸ்ரீ உ. வே. திருநாராயணய்யங்கார் பத்ராதிபர் தமிழ்ச்சங்கம் மதுரை

———:o:———

I perused Arunodaya completely and fe[illegible] through[illegible] as if my own mind in the matter of it was being most faithfully reflected. I firmly believe that the Journal, for which Arunodaya is a powerful advertisement and graceful specimen, must remove completely the unfortunate ill-feelings between the two sects of Sri Vaishnavaism. It must be the duty of every lover of Sri Vaishnavaism to do his best in aiding Sriman Vadakarai Ramanujachari to realise his laudable object.

U. P. KRISHNAMACHARYA,
Editor & Proprietor,
"The Sanatanist"

ஸ்ரீரங்கம்.

கோயில் திருமலை பெருமாள் கோவில் (ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம்) என்று சொல்லப்படுகிற முக்யமான வைஷ்ணவ க்ஷேத்ரங்களில் கோவில் என்கிற ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டமென்று போற்றப்படும்.

ஷை க்ஷேத்ரத்தில் நிகழும்,

டிசம்பர்	25௳	மார்கழி	10௳	திரு அமாவாஸை நெடுந்தாண்டகம்
,,	26	,,	11	அத்யயந உத்ஸவ ஆரம்பம் திருமொழித்
,,	29	,,	14	2-ம் ஸேவை கம்ஸவதம் (திருநாள்
ஜனவரி	1	,,	17	வாமனாவதாரம்
,,	2	,,	18	அம்ருதமதனம்
,,	3	,,	19	முத்துக்குறி
,,	4	,,	20	ராவணவதம், நாச்சியார் திருக்கோலம்
,,	5	,,	21	பரமபதஏகாதசி திருவாசல் திருவாய்மொழி
,,	8	,,	24	பெரியதிருவடி சந்த்ரக்ரஹணம் (திருநாள்
,,	11	,,	27	திருக்கைத்தலஸேவை
,,	12	,,	28	திருமங்கையாழ்வார் வேடுபரி குதிரை வாஹனம்
,,	14	தை	1	ஸங்கிராந்தி அத்யயந உத்ஸவசாத்துமுறை ஆழ்வார் திருவடி தொழுதல் உத்தராயண புண்யகாலம்.

ஆழ்வார் திருநகரி.

இது ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களில் கூடஸ்தரான நம்மாழ்வார் அவதரித்த திவ்யக்ஷேத்ரம்

அத்யயநஉத்ஸவம் இராப்பத்து மிகவும் விமர்சையாய் நடைபெறும்.

வானமாமலை.

இது நாங்குனேரிதாலூகா ஸ்ரீவைஷ்ண ஆசார்யர்களில் வரவர முனிகள் என்கிற மணவாளமாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ப்ரதாநரான தோதாத்ரிமடாதிபதி ஸ்ரீமத் பரமஹம் ஸெத்யாதி ஸ்ரீவானமாமலை ராமானுஜ ஸ்வாமிகள் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசம்.

அத்யயநஉத்ஸவம் மிகவும் சிறப்பாய் நடைபெறும் சன்னிதியில் வடபாகத்தில் சேற்றுத்தாமரை என்கிற ஒரு புண்ணியதீர்த்தம் உண்டு

திருக்குறுங்குடி.

இது ஒரு பெரிய திவ்யக்ஷேத்ரம் இந்த சன்னிதி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஜீயர்ஸ்வாமிகளின் ஆதிபத்யத்தின் கீழ் உத்ஸவங்கள் மிகவும் சிறப்பாய் நடைபெறுகின்றன. நம்பாடுவான் என்கிற ஒருபக்தசிகாமணி பகவத்பக்தியினால் கைசிக என்கிற பண்ணினால் பகவானைப்பாடி ஆனந்திப்பித்து முக்திபெற்ற திவ்யக்ஷேத்ரம்

ஸ்ரீவில்லிபுத்தூர்.

இது ஒரு வைஷ்ணவக்ஷேத்ரம் ஆழ்வார்கள் பதின்மர்களில் பெரியாழ்வார் என்று பெயர் பெற்றுப் பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரானவதரித்த திவ்யக்ஷேத்ரம்.

பெரியாழ்வார் பெண்பிள்ளையாயவதரித்துப் பெருமாளுக்குப் பூமாலை சூடிக்கொடுத்ததினால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று பெயர்பெற்று பாமாலைபாடி நமக்குபகரித்த ஆண்டாளவதரித்த திவ்யதேசமும் இதுவே.

இந்த க்ஷேத்ரத்தில் ஷை ஆண்டாளுக்கு மார்கழி மாதத்தில் நீராட்ட உத்ஸவம் ப்ரதிஸம்வத்ஸரமும் மிகவும் அழகாக நடைபெறும். நீராட்ட மண்டபத்திற்கு ஆண்டாள் எழுந்தருள்வதும் எண்ணெய்க்காப்பு அர்ச்சகர்கள் மிகவும் உபசாரத்துடன் சாற்றுவதும் பார்ப்போர் மனதைக்கவரும்படியிருக்கும்.

மதராஸ்.

தங்கசாலைத் தெரு. தொண்டைமண்டலம் ஹைஸ்கூலில் நிகழும் மார்கழிமீ 1உ முதல் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையான ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை அனேக விசேஷார்த்தங்களுடன் கேட்போர் மனமுகக்குமாறு பெருமாள் கோவில் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமிகளால் அழகாக உபந்யஸிக்கப்படும்.

எழுமபூர் ஜகன்னாதபக்த சபையின் சார்பாக ஸாகேதநிலயத்தில் மார்கழிமீ 1உ முதல் வடகலை ந்யாயவேதாந்தவித்வான் வெங்கடவரதாசார்யஸ்வாமிகளால் திருப்பாவைக்கும் திருமந்த்ரத்திற்குமுள்ள ஐகண்யத்தைப்பற்றி மிகவும் விரிவாக உபன்யஸிக்கப்படும்.

॥ श्रीरस्तु ॥

॥ श्रियः कान्ताय नमः ॥

॥ श्रीमते रामानुजाय नमः ॥

तस्मै रामानुजार्याय नमः परमयोगिने ।
यः श्रुतिस्मृतिसूत्राणामन्तर्ज्वरमशीशमत् ॥

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ.

(ஒரு மாதாந்தப் பத்திரிகை.)

—ஆசிரியர்—

காஞ்சீ ப்ரதிவாதிபயங்கர-அண்ணங்கராசாரியர்.

தொகுதி 1.] [பகுதி 1.

ஸ்ரீ:

பத்ராதிபரின் விஜ்ஞாபனம்.

ஸ்ரீராமாநுஜஸம்ப்ரதாயத்தைப் போற்றும் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களையும் அடிபணிந்து சீலமில்லாச் சிறியன் ஸ்ரீவைஷ்ணவதாஸன் கைகூப்பிச் செய்யும் விண்ணப்பம்.

மிக விசாலமான இந்நிலவுலகின்கண் பலபல சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனினும், ஸ்ரீராமாநுஜஸித்தாந்த மென்றும் எம்பெருமானார் தரிசன மென்றும் வழங்கப்பட்டுவருகின்ற ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயமானது பல்வகைகளிலும் சிறப்புடையதென்பது ப்ரஸித்தமே. இங்ஙனம் பரமபாவநமான ஸம்ப்ரதாயத்தை வழிபடுகின்றவர்கள் மற்றமதஸ்தர்களிற் காட்டிலும் மிகக்குறைவாகவே இவ்வுலகிலுள்ளார்க ளென்பதும் நாம் சொல்லாமலே விளங்கும். ஆனால் இது வியக்கத்தக்கவிஷயமன்று; ஸ்ரீமந்நிகமாந்த தேசிகன் ஸங்கல்பஸூர்யோதயத்தில் " **सर्वतः करवीरादीर् सूते सागरमेखला । मृतसंजीवनी यत्र मृग्यमाणदशां गता** - ஸர்வத: கர

விராநிந் ஸூதே ஸாகரமேகலா, ம்ருதஸஞ்ஜீவநீ யத்ர ம்ருக்யமாணதசாம் கதா† " என்றருளிச் செய்கிறார். அஸாரங்கள் மலிந்து ஸாரங்கள் மெலிந்திருப்பதே இவ்வுலகிற்கு இயற்கை என்பது மேற்குறித்த ஸ்ரீஸூக்தியின் முக்கியமான கருத்து. ஆதலால், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கின்றதே! என்கிற வருத்தத்தை நாம் கொள்ளாமல், உள்ளவர்களாவது பரஸ்பரமாத்ஸர்யமின்றியே ஒருநீராகக் கலந்து பரிமாறி வாழப்பெறில் இதனில் மிக்க மேம்பாடு வேறொன்றும் நம்முடைய ஸித்தாந்தத்திற்கு இல்லையாகும்.

நமக்கு * வைத்தமாநிதியாக நம் முன்னோர்கள் அருளியிருக்கின்ற திவ்யஸூக்திகளிலே இடையிடையில் திகழ்கின்ற உபதேச அமுதமொழிகளுள்

> "அவன் பக்கலிலே நிக்ஷிப்தபரராயிருக்கின்ற நீங்கள் நாலவிருவர் இங்கிருக்கிற நாலுநாளும் த்யாஜ்யமான அர்த்தகாமங்களைப்பற்றி 'சீறுபாறு' என்னாதே நம் பெரியகுழாத்திலே போய்ப்புகுமளவும் ஒருமிடறாய் அநுபவிக்கப் பாருங்கோள்."

என்கிறவொரு ஸ்ரீஸூக்திரத்நத்தை நோக்குங்கால், இத்தகைய விசாலமான திருவுள்ளம் பெற்ற ஆசாரியர்களின் ஸந்ததியிற் பிறந்த நாம் இருக்குமிருப்பு என்னே! என்று அந்தராத்மஸாக்ஷிகமாக அநுதபிக்கவேண்டியிருக்கின்றது. உண்மையில், பெறுதற்கு அரிதான மானிடப்பிறவியைப்பெற்று அதுதன்னிலும் எம்பெருமானார் திருவடிஸம்பந்திகளான மஹாசார்யர்களின் திருவம்சத்திலே ஜநிக்கப்பெற்று, "ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப்போலே, அவையுண்டானாலும் இழவுக்கு அவர்கள்பக்கல் அபசாரமே போதும்" என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியையும், "**समस्तवृजिनोदधिग्रसनडम्भकुम्भोद्भवं निवृत्तिमपि धर्ममत्यनघतत्त्वविन्निग्रहः** - ஸமஸ்த

† கரவீரமாவது - அலரி; அது உயிரை மாய்ப்பதாம். உயிரை வாழ்விக்கின்ற பொருள்கள் வருந்தித் தேடிப் பிடிக்க வேண்டியவையாயும் உயிரை மாய்க்கும் பொருள்கள் கண்டவிடமெங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடியவையாயும் இந்நிலத்திலுள்ளன வென்றவாறு.

வ்ருஜிநோததிக்ரஸநடம்பகும்போத்பவம் நிவ்ருத்திமபி தர்மமத்யநகதத்வவிந்நிக்ரஹ:$ " என்கிற ஸ்ரீதேசிகஸூக்தியையும் கற்கப்பெற்று மஹாபாக்யசாலிகளாக மகிழப்பிறந்த நாம் வாழவேண்டிய நிலைமை எத்தகையது? என்று ஆராயுமிடத்தில், "முன்னவராம் நம் குரவர் மொழிகள் உள்ளப்பெற்றோம் முழுதும் நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம், பின்னை யொன்றுதனில் நெஞ்சு செல்லாமற்பெற்றோம் பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும்பெற்றோமே" என்று மணவாளமாமுனிகள் அநுஸந்தித்தருளினபடியே வர்த்தித்தாலன்றி உய்வு பெறலாகாதென்பது உலகெலாம் இசையக்கூடியவிஷயமேயாகும்.

நம்முடைய குருபரம்பரையிலே நடுநாயகமாக எழுந்தருளியிருப்பவர் எம்பெருமானார். தேசிகன் யதிராஜஸப்ததியில் இவ்விஷயத்தை "**अमुना तपनातिशायिभूम्ना यतिराजेन निबद्धनायकश्रीः । महती गुरुपङ्क्तिहारयष्टिः विबुधानां हृदयङ्गमा विभाति** - அமுநா தபநாதிசாயிபூம்நா யதிராஜேந நிபத்தநாயகஸ்ரீ:, மஹதீ குருபங்க்திஹாரயஷ்டி: விபுதாநாம் ஹ்ருதயங்கமா விபாதி" என்ற ச்லோகத்தால் வெகு அழகாக அருளிச்செய்தனர். அங்ஙனம் நடுநாயகமான எம்பெருமானாருடைய திருவடிஸம்பந்திகளில், கூரத்தாழ்வான் எம்பார் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் திருவாய்மொழிப்பிள்ளை மணவாளமாமுனிகள் என்கிற ஒரு ஆசார்ய பரம்பரையும், திருக்குருகைப்பிரான் பிள்ளான், கிடாம்பியாச்சான், எங்களாழ்வான், நடாதூரம்மாள், கிடாம்பியப்புள்ளார், வேதாந்ததேசிகன் என்கிற ஒரு ஆசார்ய பரம்பரையும் ஏற்பட்டு இரண்டு வகுப்பிலுமுள்ள ஆசார்யர்களும் உபயவேதாந்த ப்ரவர்த்தகர்களாய் அற்புதமான ஸ்ரீஸூக்திரத்னங்களாலே இவ்விபூதியை இருள்தருமாஞாலமென்று பேசவொண்ணாதபடி ஆக்கியருளினவர்கள். அன்னவர்களது திவ்ய ஸூக்திகளில் சிற்சில விஷயங்களிலே அபிப்ராயபேதங்கள் இருப்பது உண்மையே. இருந்தாலும், அல்பஜ்ஞர்களான நாம் பாகவதா

$ ஸகலபாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாக ஏற்பட்டுள்ள சரணாகதி தர்மத்தையும் பாகவதாபசாரம் கபளீகரித்து விடுமென்றபடி.

பசாரங்களை வளர்த்திக்கொண்டு வாதக்ரந்தங்களை யெழுதி வெளியிட்டுக் கொண்டு பரஸ்பரம் இழிவுரைகளைப் பொழிந்து கொண்டு, ஆவச்யகமான லோகோபகாரங்களிற் செலவிடவுரிய அரிய அவகாசங்களைப் பழுதாக்கிக்கொண்டு கிடப்பதற்குப் போதுமான காரணம் சிறிதுமில்லையென்பது அடியேனுக்குப் போலவே மற்றுமுள்ள வாதக்ரந்தகாரர்களுக்கும் விமர்சதசையில் விளங்காமற் போகாது.

விஷயபேதேந அபிப்ராயபேதமிருப்பது உலகில் ஒவ்வொருவ்யக்தியிடத்திலும் காணக்கிடைக்கும். வைதிகர்களாயும் சாஸ்த்ரவிச்வாஸசாலிகளாயும் உள்ளவர்களுக்கு உண்டாகின்ற அபிப்ராயபேதங்கள் யதாகதஞ்சித் சாஸ்த்ராநுக்ருஹீதங்களாகவே ஆகக்கூடும். ஆகவே, அவரவர்களுடைய ஸம்ப்ரதாயங்களிலே ப்ராப்தமாகின்ற அர்த்தவிசேஷங்களை அவரவர்கள் இதரஸம்ப்ரதாய தூஷணலவலேசமுமின்றியே போற்றக் குறையில்லை. பரிமிதப்ரஜ்ஞர்களான நாம் ஆக்ரஹத்திற்கும் அஸூயைக்கும் ஆட்பட்டு எழுதுகின்றவற்றால் ஒரு ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்றமும் மற்றொருஸம்ப்ரதாயத்திற்குத் தாழ்வும் விளையமாட்டா. விவேகிகளுக்கு இவ்வளவு ஸம்க்ஷிப்தமான உக்தியே போதுமாதலால் இதில் இன்னமும் விவரணம் அநபேக்ஷிதமென்று கருதுகின்றேன்.

ஸாதாரணமாகக் கீழ்வகுப்பினர்களும் பலவகைகளிற் சிறப்புப் பெறுதற்குப் பெருமுயற்சிகள் செய்யும்படியான இக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்தினர்களான நாம் ஸ்வல்ப உட்பிரிவுகளைப் பற்றிய த்வேஷ புத்திகளை அறவேயொழித்து ஐகரஸ்யத்தை அழகாகக் காட்டி அதை அநுபவபர்யந்தமாகவும் ஆக்கி "ஸ்ரீவைஷ்ணவஸமுதாயத்திற்குள் எவ்வகையான வாதவிவாதமும் தலைகாட்ட மாட்டாதபடிக்கும் ஐகமத்யமே செழித்து ஓங்கும் படிக்கும் நாடுநகரமும் நன்கறிய ப்ரசாரஞ் செய்ய வேண்டியது அவசியம்" என்கிற ஊக்கத்தை ஏற்றுக்கொண்டு வியாபரிக்கக்கூடிய உத்தமாதிகாரிகளை நாடவேணுமென்று அடியேன் மநோரதித்திருக்கையில், தற்காலம் சென்னையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவேதாந்த. வடகரை ராமாநுஜாசார்யஸ்வாமி யென்பவர் அடியேனுடைய அபிஸந்திக்கு மிகவும் அநுகூலராக வாய்த்ததனால் அவருடைய சிறந்த குதூஹலங்களையும் உத்ஸாஹத்தையும் முக்கிய ஆதாரமாகக் கொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்களின் ஐகமத்யமே உலகமெங்கும் பரவிச் செல்லவேணுமென்று மேலே விவரித்த உத்தேச்யத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பாங்காக இப்பத்ரிகையின் பிரசாரம் தொடங்கப்படுகின்றது.

தேசக்ஷேமம் ஜாதிக்ஷேமம் முதலிய பலவகைப்பட்ட நல்ல நோக்கங்களுடன் இவ்வுலகில் வெளிவருகின்ற பல பத்ரிகைகளினிடையே 'ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயக்ஷேமம்' என்கிற நோக்கமொன்றையேகொண்டு வெளிவரப்புகுகின்ற இப்பத்ரிகையை உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் ஆதரித்து, அனைவரும் விரும்பிவாசிக்கக்கூடிய இன்சுவைமிக்க விஷயங்களை உபகரித்தும் இயன்றவாறு பொருளுதவி புரிந்தும் அநுக்ரஹிக்கவேணுமென்று பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ:

எம்பெருமானார் தர்சனம்.

நம்முடைய ஸம்ப்ரதாயமானது எம்பெருமானார் தர்சனமென்றும் ஸ்ரீராமாநுஜஸித்தாந்த மென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. 'ஸ்ரீராமாநுஜரால் புதிதாக ஏற்படுத்தப்பட்டமதம்' என்று இதைக்கொண்டு சிலர் சொல்லுவர்கள். உண்மையில் அங்ஙனமன்று; ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம் என்பதே இங்கு விவக்ஷிதம். இவ்வர்த்தத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில்

> "எம்பெருமானார் தரிசனமேன்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு
> நாட்டிவைத்தார்—அம்புவியோர், இந்தத் தரிசனத்தை யெம்
> பெருமானார் வளர்த்த, அந்தச் செயலறிகைக் கா."

என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினர். 'ஸ்ரீராமாநுஜமதம் நவீநம்' என்கிறவாதம் தேசிகனுடைய காலத்திலேயே தோன்றியதாகத் தெரிகின்றது. யதிராஜஸப்ததியில் "यतिक्ष्माभृद्दृष्टं मतमिह नवीनं तदपि किम् ? யதிக்ஷ்மாப்ருத்த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம்?" என்கிறச்லோகத்தில் அந்த வாதத்தை அநுவ

தித்து, பூர்வார்த்தத்தால் அதை அங்கீகரித்து ஸமாதானமும், உத்தரார்த்தத்தால் வஸ்துஸ்திதிஸமாதானமும் அருளிச் செய்யப் பட்டிருக்கிறது.

காளிதாஸர் "**पुराणमित्येव न साधु सर्वं न चापि काव्यं नवमित्यवद्यम् । सन्तः परीक्ष्यान्यतरद्भजन्ते मूढः परप्रत्ययनेयबुद्धिः** - புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் ந சாபி காவ்யம் நவமித்யவத்யம், ஸந்த: பரீக்ஷ்யாந்யதரத் பஜந்தே மூட: பரப்ரத்யயநேயபுத்தி:" என்று தமது நாடகமொன்றில் கூறியுள்ளார். ப்ராசீனமென்பது பற்றியே ஒன்றுக்கு ஏற்றமும் நவீனமென்பதுபற்றியே ஒன்றுக்குத் தாழ்வும் சொல்லப்போகாது; குணபுஷ்கலமாக இராவிடில் ப்ராசீநமாயிருந்தாலும் ஹேயமாகும்; குணபுஷ்கலமாகவுள்ளதாகில் நவீநமாயினும் உபாதேயமேயாகும். ஆகவே, குணமுடைமை பரிக்ராஹ்யத்வத்திற்கு ஹேதுவாகவும், குணமின்மை பரித்யாஜ்யத்வத்திற்கு ஹேதுவாகவும் தேறுமேயல்லது, ப்ராசீநத்வ நவீநத்வங்களைக்கொண்டு பரிக்ராஹ்யத்வ பரித்யாஜ்யத்வங்களை வ்யவஸ்தைபண்ணுவது புத்திமான்களின் பணியன்று என்பது மேற்குறித்த காளிதாஸச்லோகத்தின் தாற்பரியம். இந்த ரீதியைத் திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி தேசிகன் முந்துற ஒரு ஸமாதானமருளிச் செய்தார்.

மீமாம்ஸாபாதுகையிலும் "**किञ्चित् केनापि दृष्टम्** - கிஞ்சித் கேநாபி த்ருஷ்டம்" என்கிற எட்டாவது ச்லோகத்தில் "**प्रत्येतव्यं तदर्थं पटुतरमतिभिः प्राक्तनं नूतनं वा** - ப்ரத்யேதவ்யம் ததர்த்யம் படுதரமதிபி: ப்ராக்தநம் நூதநம் வா" என்ற நான்காவது பாதத்தினால் இந்தத் திருவுள்ளத்தைக் காட்டியருளினர்.

யாதவாப்யுதய மஹாகாவ்யத்திலும், "**तदात्वे नूतनं सर्वमायत्यां च पुरातनम् । न दोषायैतदुभयं न गुणाय च कल्पते** - ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம், ந தோஷாயைததுபயம் ந குணாய ச கல்பதே" என்றச்லோகத்தில் இத்திருவுள்ளமே பொலியும். இது ஸாமாந்ய ந்யாயசிக்ஷணமாதலால் இந்த நியாயத்தைத்தழுவி 'ஸ்ரீராமாநுஜமதம் நவீனமாகத்தான் இருக்கட்டுமே, இருந்தாலென்ன?' என்று அப்யுபகம்யவாத ப்ரணாளியிலே அருளிச் செய்து, உடனே "**निशामयन्तां यद्वा निजमतितिरस्कारविगमात् निरातङ्काः टङ्कद्रमिडगुहदेवप्रभृतयः**-நிசாமயந்தாம் யத்வா நிஜமதிதிரஸ்காரவிகமாத் நிராதங்கா: டங்கத்ரமிடகுஹதேவப்ரப்ருதய:" [யதிராஜஸப்ததி-57.] என்று வஸ்துஸ்திதிஸமாதாநத்தையும் அருளிச் செய்தார். இந்த ஸ்ரீராமாநுஜமதத்தை ப்ரவர்த்தநம் செய்தவர்கள் இதரமதப்ரவர்த்தகர்களிற் காட்டிலும் மிக முற்பட்டவர்கள் என்று இதனால் காட்டப்பட்டது.

ஸம்ப்ரதாய பரிசுத்தி என்கிற ரஹஸ்யத்தின் உபக்ரமத்திலும்

"ஸர்வலோகஹிதமான அத்யாத்மசாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன். மற்றுள்ளாரெல்லாரும் அவன்தன்னாலே யாதல் சேதநாந்தரமுகத்தாலேயாதல் மயர்வற மதிநலமருளப் பெற்று ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள். இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்"

என்று ஸ்வாமி அருளிச் செய்தவை இங்கு ஸ்மரிக்கத்தக்கன. எம்பெருமானார் தாமும் ஸ்ரீபாஷ்யத்தின் உபக்ரமத்திலே,

"**भगवद्बोधायनकृतां विस्तीर्णां ब्रह्मसूत्रवृत्तिं पूर्वाचार्याः संचिक्षिपुः ; तन्मतानुसारेण सूत्राक्षराणि व्याख्यास्यन्ते ।**"

[போதாயநமஹர்ஷியினால் செய்யப்பட்ட விரிவான ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திக்ரந்தத்தைப் பூருவர்கள் சுருக்கியருளினார்கள்; அவர்களது கொள்கையைப் பின்பற்றி ப்ரஹ்மஸூத்ர வியாக்கியானம் செய்யப்புகுவோம்] என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கையாலும் இது அநாதிமதமேயன்றி நவீநமதமன்று என்பது தெற்றென விளங்கும்.

ஸ்ரீராமாநுஜபாஷ்யத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மேற்றிசையாரும் ஸ்ரீராமாநுஜருடைய கொள்கையே மிகவும் ஏற்புடையது என்பதை நிரூபித்துள்ளாரென்று கேள்விப்படுகிறோம். அத்வைதம் த்வைதம் என்கிற மற்ற இரண்டு தரிசனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைததர்சனத்தின் வைலக்ஷண்யத்தை அறிந்து கொண்டால் இதுவே புராதனமாகஇருக்கக்கூடியதென்றும், இதுவே உலக அநுபவத்திற்கு இணங்கியதென்றும் யாவரும் இசையத்தக்கதாகும். அதனை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

ஸ்ரீ:.

எம்பெருமானும் நாமும்.

சேதநர்களையும் அசேதநங்களையும் சரீரமாகக்கொண்டவன் எம்பெருமான். அவன் பெருமையில் தலைநின்றவன்; நாம் சிறுமையில் தலைநிற்பவர்கள். நாம் அப்பெருமானை வழிபடுதற்கு உரியோம். அவன்திறத்து நாம் செய்யக்கூடிய வழிபாடுகள் பலவகைப்பட்டிருக்கும். அவற்றைப்பற்றின விரிவுகள் சாஸ்த்ரங்களில் விசதமாகக் காணக்கிடைக்கும். நாமும் அவற்றை அடைவே விவரிக்க ப்ராப்தமாகும். அந்த வழிபாடுகளெல்லாம் ஒரு புறமிருக்கட்டும். அவாப்தஸமஸ்தகாமனான பெருமானுக்கு நாம் செய்யும் வழிபாடுகள் என்னபயனைத் தரப்போகின்றன! நம்முடைய ஸ்வரூபம் கடைத்தேறுவதற்காகவே நாம் வழிபடுவோமத்தனை.

எம்பெருமான் அல்பஸந்துஷ்டன். அநாதிகாலமாக அவனோடு எதிரம்பு கோக்கின்ற (அதாவது விவாதப்படுகின்ற) கொடிய ஸம்ஸாரிகள் நாம். அந்த நிலைமையில் நின்றும் நாம் நீங்கி, அவனோடு நமக்குண்டான ஒழிக்கவொழியாதவுறவைத் தெரிந்து கொண்டோமாயின் இதுவே பரம பூஜையாகும். ஸம்பந்தஜ்ஞான மாத்திரமே நமக்கு மேலான நன்மைகளுக்கு எல்லை. அஃது உண்டானால் நாம் எம்பெருமானோடு விவாதப்படமாட்டோம். விவாதம் தொலைந்ததென்னில், எவ்விதப் பணிவிடைகளும் நாம் செய்தோமாவோம்.

மநுஸ்ம்ருதியில் [8-92.] यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः । तेन चेदविवादस्ते मा गंगां मा कुरून् गमः - யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித:, தேந சேதவிவாதஸ் தே மா கங்காம் மா குரூந் கம:" என்று சொல்லிற்று. இதன் கருத்தாவது ஸர்வநியாமகனையும் தண்டதரனையும் (அல்லது ஸௌர்யவம்சத்திற் பிறந்தவனையும் அல்லது ஆதித்யமண்டல வாஸியாயும்) எல்லார்க்கும் இனியனையுமிருக்கிற எம்பெருமான் உனது உள்ளத்தினுள்ளேயுளன்; அவனோடுவிவாதம் நெடுநாளாக அநுவர்த்தித்துக்

கொண்டு வருகிறது; அதாவது இந்த ஆத்மவஸ்துவை அவன் தன்னுடையதாக அபிமானித்தால் அதற்கு இசையாதே ‘இது என்னுடையதுதான்’ என்று செருக்கியிருப்பதுவே விவாதம். இது தொலைந்தொழியுமாகில், கங்கை முதலிய புண்யதீர்த்தங்களில் குடைந்தாடப் போகவும் வேண்டா; குருக்ஷேத்ரம் முதலிய புண்யக்ஷேத்ரங்களை ஸேவிக்கப் போகவும் வேண்டா. அஹங்காரமமகாரங்களை உள்ளே வைத்துக்கொண்டு பிராயச்சித்தம் பண்ணுகையாவது ஒரு பாத்திரத்தினுள்ளே அசுத்த வஸ்துவையிட்டுவைத்து மேலே பளபளவென்று சுத்திசெய்வது போலாதலால், உள்ளே எம்பெருமானோடு விவாதத்தை வைத்துக்கொண்டே க்ஷேத்ரதீர்த்தஸஞ்சாரம் செய்வது ஏதுக்கு? அந்த விவாதம் தீர்ந்துவிட்டால் இருந்த இடத்திலேயே பரமசுத்தியுண்டாதலால் ஒருக்ஷேத்ரத்தையும் ஒருதீர்த்தத்தையும் தேடிப்போகவேண்டா என்றபடி. ஆகவே விவாதம் நீங்குமளவே வேண்டுவது.

ஸம்பந்தவுணர்ச்சி உறைப்பாக உண்டானாலொழிய விவாத சாந்தி விளையமாட்டாது. ஸம்பந்தஜ்ஞானமுண்டானவளவிலே நாம் வாழ்ச்சிபெற்றோராவோம். இதுபற்றி ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் [1-2-7] ஒரு இதிஹாஸம் காட்டப்பட்டுள்ளது; அதனை விவரித்துரைப்போம்; ஒரு நகரத்தில் ஒரு வணிகர்தலைவனிருந்தனன்; அவன் வெளிநாடுகளில் நீண்டகாலம் வஸித்து வர்த்தகஞ்செய்து விசேஷமாகப் பொருள் படைக்க விரும்பி த்வீபாந்தர யாத்திரைசெய்யமுயன்றான். அத்தருணம் அவனது மனைவி கருவுற்றிருந்தாள். அப்போதே அவன் புறப்பட்டு த்வீபாந்தரம் போய்ச் சேர்ந்தான். பிறகு இரண்டொரு மாதங் கடந்தபின் அவனது மனைவி ஊரில் ஒரு புதல்வனை யீன்றாள். அம்மகன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகச் சுக்கிலபக்ஷச்சந்திரன் போன்று வளர்ந்துவருகின்றான். த்வீபாந்தரத்தில் வர்த்தகஞ்செய்து வாழ்ந்துகொண்டிருக்கும் அவ்வணிகன் மகப்பேறுஉண்டான செய்தியையறிந்து பெருமகிழ்ச்சிகொண்டு விரைவிலேயே ஊர்வந்து சேர்தற்குப் பெருமுயற்சி செய்தும், மேன்மேலும் வர்த்தகத்தில் மீதூர்ந்துசென்ற மிலைப்பினால் கடுக மீண்டுவரமுடியாமல் நெடுங்காலம் அங்கேயேதங்கிவிட்டான். மகன்தானும் உரியவயதுவாய்த்தவள

வில் தனது குலத்தொழிலாகிய வர்த்தகத்தையே கைப்பற்றி வந்தான்; வயது முதிர்ந்தவளவிலும் இவனது தகப்பன் த்வீபாந்தரத்திலேயே வாழ்கிறான். பின்பொருநாள் அவ்வணிகன்மகன் தொழில்முறையில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்து பலசரக்குக்களுடன் கடல்வழியாய் ஊர்த்துறைமுகம் வந்து சேர்ந்தான்; அவன் வந்த கப்பலிலேயே அவனது தந்தையும் த்வீபாந்தரத்திலிருந்து பல மூட்டைகளுடன் ஊர்வந்தனன். அந்தக்கப்பல் துறைமுகஞ் சேர்ந்தவுடனே குமாரன் தனது மூட்டைகளை இறக்குவதாக உத்தேசித்த ஓர் இடத்திலேயே தகப்பனும் தான் கொணர்ந்த மூட்டைகளை இறக்கநினைத்தனன். இவ்விருவரும் தங்களுக்குள்ள பித்ரு புத்ரபாவ ஸம்பந்தத்தை அறியாதவர்கள். ‘இவன் நம்மகன்’ என்று தந்தையறியான். இவர் நம் தகப்பனார் என்று மகனுமறியான். உண்மையில் இவர்கட்கு இவ்வுறவுமுறை தெரிவதற்கு ப்ரஸக்தியில்லையே; இக் குமாரன் பிறப்பதற்கு முன்னமேயன்றோ அவ்வணிகன் வெளிநாடு சென்றிட்டான். ஆகவே ‘இவன் யாரோ வெளிநாட்டு வர்த்தகன்’ என்று பாவிக்கலானான்; தந்தையும் மகனை அங்ஙனமே பாவித்தான். இறக்குமதியிடத்தைப்பற்றிய விவாதம் இவர்களுக்கு முற்றிவிட்டது. ‘இவ்விடத்தை நானே முதலில் உத்தேசித்தேன்’ என்று இருவரும் நெடும்போதாக வாதாடுகின்றனர். அப்போது இவ்விருவருடையவும் உறவுமுறையை உணர்ந்திருப்பாரொருகிழவன் கண்டு ‘அந்தோ! உறவறியாமல் இது என்ன விவாதம்!’ எனவருந்தி ‘இவன் உன் தந்தை; நீ அவனது மகன்; இவன் உன்மகன்; நீ இவனுடைய தந்தை; ஆயிருக்க எதுக்கு இங்ஙனே வீண் விவாதம்?’ என்று அறிவித்தனன். அதன் பிறகு அங்கு என்ன நடந்திருக்கவேணும். ஸம்பந்தவுணர்ச்சி உண்டானவுடனே கிழிழந்த நாளைக்குச் சோகித்து இருவர் சரக்கும் ஒருசரக்காய், தந்தை ரக்ஷகனாய் மகன் ரக்ஷ்யனாய் விவாதம் தொலைந்து பரமரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டவாறு பேச்சுக்கு நிலமாமோ?

அதுபோலவே நாமும் நிருபாதிகபிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய “உன்றன்னோடுறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது” என்னும்படியான உறவின் உறுதியை உற்றுநோக்கி, ஈச்வ

ரன் “த்வம் மே” [நீ எனக்கு அடியன்] என்றால் “அஹம் மே” [நான்எனக்கே உரியேன்] என்னும்விவாதத்தை விட்டொழித்தால் “பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ” என்னும்படியாக உபயவிபூதியும் நாம் தாராளமாக அநுபவிக்கும் செல்வமாகுமன்றோ.

மாலைப் பொழுதில் விஹாரார்த்தமாக வெளியே சென்ற ராஜகுமாரன் அழகியதொரு தோட்டத்தைக்கண்டு உள்ளே புகுந்து திளைக்கநினைத்தும் கட்டுங்காவலுமாயிருந்ததுகண்டு அஞ்சி நிற்குமளவில் ‘இஃது உன்தகப்பனாருடைய தோட்டங்காண்’ என்னவே பிறகு தேங்காதே புக்கிருந்து திளைக்கலாயிற்று என்றவொரு கதையையுங் காட்டுவர்கள்.

எம்பெருமானுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தம் ஒன்றன்று, இரண்டன்று; ஒன்பது வகையான ஸம்பந்தங்கள் திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்திலிருந்துகிடைக்கின்றன. அவற்றை மேல் ஸஞ்சிகைகளில் விவரிப்போம்.

ஸ்ரீ:

தேசிகனும் திவ்யப்ரபந்தமும்.

ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் தமிழ்ப்பாஷையிலே அவதரித்திருக்கின்றமையால் வடமொழியில் பரிசயமில்லாதவர்கள்மாத்திரமே ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களைக் கொண்டு போதுபோக்கவேணுமென்றும், ஸம்ஸ்க்ருதவித்வான்களாகவுள்ளவர்கள் உபநிஷத்துக்கள் முதலானவற்றைக்கொண்டே போதுபோக்கவேணுமென்றும் சிலர் வரம்பிட்டுப் பேசுவர்கள். இவ்விஷயத்தில் ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றி இங்குச் சிறிது ஆராய்வோம்.

வடமொழிப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்தவர் நம்முடைய தேசிகன். இவரைப்போன்ற ஸம்ஸ்க்ருத வித்வான் * ந பூதோ ந பவிஷ்யதி * என்றால் மிகையாகாது. ஸம்ஸ்க்ருதவேதாந்தத்திற்கு உபப்ரும்ஹணங்களாகவுள்ள இதிஹாஸபுராணாதிகள் இவர்க்கு வாசோவிதேயங்கள் ஸஹகாரிஸாமக்ரிகளானந்யாயு

மீமாம்ஸைகளும் இவர் திருவுள்ளத்தைப் பின் செல்லுமவை. இங்ஙனே திருநாவீறுடைய பிரானுகியவிவர் பேசியிருக்கிற ஒரு பாசுரத்தைக் காணுங்கோள்;

“ பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
  பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம்பாணநாதன்
  தொண்டரடிப்பொடி மழிசைவந்தசோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
  மங்கையர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம்தெளிய வோதித்
  தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே. ”

இது தேசிகப்பிரபந்தங்களுள் ஒன்றான அதிகாரஸங்க்ரஹத்தின் முதற் செய்யுள். ஸம்ஸ்க்ருதவேத வேதாந்தங்களில் எவ்வளவு பரிச்ரமப்பட்டாலும் கலங்கின ஞானமே அவற்றால் உண்டாகுமென்றும், ஆழ்வாரருளிச்செயல்களைக் கொண்டுதான் தெளிவு பெறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் இதனால் காட்டினாராயிற்று. இங்கு ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களைப்பற்றிச் சொல்லுகையில் ※ தெளியாத மறைநிலங்கள் ※ என்று அருளிச்செய்தமை நோக்கத்தக்கது.

இதிஹாஸ புராணுதிகளைக் கொண்டு உபநிஷத்துக்களின் தாற்பரியத்தை அறிவதைக்காட்டிலும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு அறிவதே மிகச் சிறந்தது என்கிறதிருவுள்ளத்தை த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளியிலும் நிரூபித்தருளியுள்ளார்; அதில் நான்காவது ச்லோகத்தில் **यत्तत्कृत्यं श्रुतीनां मुनिगणविहितैस्सेतिहासैः पुराणैस्तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनेः संहिता सार्वभौमी** - [யத் தத் க்ருத்யம் ச்ருதீநாம் முநிகணவிஹிதைஸ் ஸேதிஹாஸை: புராணை: தத்ராஸௌ ஸத்வஸீம்நச் சடமதநமுநேஸ் ஸம்ஹிதா ஸார்வபௌமீ.] என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. (இங்கு அடியேனுடைய வியாக்கியானம் வருமாறு:) வேதங்களுக்கு உபப்ருஹ்மணமாக மஹர்ஷிகள் இயற்றிய இதிஹாஸ புராணங்களைக் கொண்டு நாம் யாதொரு உபயோகமடைகின்றோமோ அந்தவுப

யோகமே திருவாய்மொழியினாலுமுள்ளது. ஆனால் அந்தப் புராணுதிகள் ராஜஸங்களென்றும் தாமஸங்களென்றும் த்யாஜ்யங்களாகவுமாகின்றன; இங்கு அப்படியில்லை; ஸத்வகுணத்திற்கு எல்லைநிலமான ஆழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாகையாலே கேவலம் ஸாத்விகமாயிருக்கின்ற இத்திருவாய்மொழியாகிற த்ராவிடப்ரஹ்மஸம்ஹிதையானது வேதோபப்ரும்ஹணங்களில் தலைமை பெற்றதாகும்.

ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் மாதாபிதாயுவதய: என்கிற ச்லோகத்தினால் ஆழ்வாரை இறைஞ்சினார். அங்குஸ்தோத்ரபாஷ்யத்தில் ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்துள்ள அவதாரிகா ஸ்ரீஸூக்திகள் ஆஸ்திகர்களுக்குக் கண்டபாடம் செய்யத்தக்கவை.

“ अथ पराशरप्रबन्धादपि वेदान्तरहस्यवैशद्यातिशयहेतुभूतैः सद्यः परमात्मनि चित्तरञ्जकतमैः सर्वोपजीव्यैः उपबृंहणैः मधुरकविप्रभृति संप्रदायपरम्परया नाथमुनेरप्युपकर्तारं कालविप्रकर्षेपि परमपुरुषसंकल्पात् कदाचित् प्रादुर्भूय साक्षादपि सर्वोपनिषत्सारोपदेष्टारं पराङ्कुशमुनिं ※ मातापिताभ्रातेत्याद्युपनिषत्प्रसिद्धभगवत्स्वभावदृष्ट्या प्रणमति—मातेति॥

என்பவை அங்குள்ள ஸ்ரீஸூக்திகள். பராசரமஹர்ஷிபணித்த ஸ்ரீவிஷ்ணுபுராணத்திற்காட்டிலும் வேதாந்தரஹஸ்யார்த்தங்களை மிகத் தெளிவாகக் காட்டுகின்றவை ஆழ்வாரருளிச் செயல்கள் என்பது இங்குஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ள விஷயம்.

யதிராஜஸப்ததியில் நம்மாழ்வாரைப்பற்றி ஒரு ச்லோகமருளிச் செய்கிறார் காண்மின்; “**यस्य सारस्वतं स्रोतो वकुलामोदवासितम्। श्रुतीनां विश्रमायालं शठारिं तमुपास्महे॥**” [யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம், ச்ருதீநாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே] என்பதாமது. இதில் பிற்பாதியின் தாற்பரியம் யாதெனில்; ஸம்ஸ்க்ருத வேதங்கள் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிய வெளியிடவேணுமென்று மிகவும் ச்ரமப்பட்டன; ஆனால் ச்ரமத்திற்குத் தகுதியான பலன்கிடைக்கவில்லை. ‘ அந்தோ! நமக்கு ச்ரமமே மிக்கதே! ’ என்று அந்த வேதங்கள் விடாய்த்தனவாம்; அந்த நிலைமையில் மகிழ்மாலை மார்பினரான ஆழ்வார் திருவவத

ரித்து ஈரச்சொற்களாலே வேதங்களுக்கு உத்தேச்யமான பொருள்களைத் தெளிய வெளியிட்டருளினமையால், வேதங்களுக்கு உண்டாயிருந்த விடாய் தொலைந்ததாம் என்பதே. அன்றி, 'பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை ப்ரதிபாதிக்கும் விஷயத்தில் வேதங்களே நீங்கள் ஏன் வீணுக ச்ரமப்படுகின்றீர்கள்? அந்தத் தொழிலை நான் வஹிக்கக்கடவேன்; நீங்கள் இளைப்பாறலாம்' என்று சொல்லி ஆழ்வார் திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்வாராயினர் என்பதும் கருத்தாகும். அதிகம்பீரமான தேசிக திவ்யஸூக்திகளிலே இன்னமும் எவ்வளவோ விசேஷதாத்பர்யங்களை ஊஹித்துரைக்கலாம்.

இனி, பாதுகாஸஹஸ்ரத்தில் ஆழ்வார் விஷயமாக அருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளை ஆராயப்புகுந்தாலோ ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்தவாயினால் மற்றொரு ஸரஸ்வதியைப் பேசவும் கூசவேண்டும்படி அருளிச் செயல்களுக்கு அத்தனை பெருமை அருளிச் செய்யப்பட்டுளது. அதைப்பற்றி மற்றொருகால் பேசுவோம்.

திவ்யப்ரபந்தங்களின் பெருமை தேசிகனுடைய திருவுள்ளத்தில் இடைவிடாது குடிகொண்டிருந்ததென்று நன்கு புலப்படுகிறது. அம்ருதாஸ்வாதினீ யென்னும் தேசிகப்ரபந்தத்திலுள்ள "அந்தமிலாப் பேரின்பமறிந்தபேர்க்கும் அடியோமை யறிவுடனே யென்றுங்காத்து, முந்தைவினை நிரைவழியிலொழுகா தெம்மை முன்னிலையாந் தேசிகர்தம் முன்னே சேர்த்து, மந்திரமும் மந்திரத்தின்வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேற்றியடிமைகொள்ளத், தந்தையென நின்றதனித்திருமால்தாளில் தலைவைத்தோஞ் சடகோபனருளினாலே" (28) என்ற ஒருபாசுரமே போதும். ஆங்காங்கு ஊடே அருளிச்செய்துள்ள (1) "அணிகுருகை நகர்முனிவர் நாவுக்கு அமைந்தன......விடலரிய பெரிய பெருமாள் மெய்ப்பதங்களே" (2) "குருகையில் வந்து கொழுப்படக்கிய குலபதிதந்த குறிப்பில்வைத்தனர்" இத்யாதிபாசுரங்கள் ஆழ்வாரிடத்திலும் அருளிச்செயல்களிடத்திலுமுள்ள பக்தியே வடிவெடுத்து தேசிகனுகத் திருவவதரித்ததோ! என்னலாம் படியிருக்கின்றதேயன்றி

(1) அதிகாரஸங்க்ரஹம்—51. (2) பரமதபங்கம்—2.

வேறொன்றுஞ் சொல்லப்போகாது. ஸ்வாமி தம்மை விசேஷித்துக் கொள்ளுமிடத்தும் (1) "சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு" என்று த்ராவிடப்ரஹ்மஸம்ஹிதைக்கே தாம் இட்டுப்பிறந்தவராக அருளிச் செய்கிறார். ஸ்வாமியை வாழ்த்துகின்றவர்களும் "செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே" என்கிறார்கள். ஸ்வாமி தாம் மங்களாசாஸனம் செய்தருள்வதும் (2) "தொண்டைமண்டலவேதியர் வாழவே தூய தேன் மறைவல்லவர் வாழவே" என்று தமிழ்வேதமறிந்த பகவர்களுக்கேயாயிற்று.

இப்படிப்பட்ட அபிநிவேசம் தேசிகனுக்கு உண்டானது இரண்டு காரணத்தினால். ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான பூருவாசாரியர்களெல்லாரும் ஒருமிடருக ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையே சேமநிதியாகக் கொண்டிருந்தார்களென்பது ஒருகாரணம். அவற்றில் தாம் கண்ட ஒப்புயர்வற்ற குணாதிசயங்கள் மற்றொரு காரணம். "**प्रिया तु सीता रामस्य दाराः पितृकृता इति । गुणाद्रूपगुणाच्चापि प्रीतिर्भूयोऽभ्यवर्धत** - ப்ரியா து ஸீதா ராமஸ்ய தாரா: பித்ருக்ருதா இதி, குணாத் ரூபகுணாச்சாபி ப்ரீதிர் பூயோப்யவர்த்தத." என்னுமாபோலே.

இப்படிப்பட்ட மஹாசார்யர்பக்கலில் நாம் ஹார்த்தமான பக்தியை வஹிப்பதற்கு லக்ஷணம் அருளிச் செயல்களை வரியடைவே கற்றுவல்லாராவதே. மற்றும் பலவகைகளாலும் நாம் ஆசார்யபக்தியைக் காட்டலாமாயினும் இவ்வழியிலே காட்டுவது மிகச் சிறந்ததாகும்.

ஸ்ரீ:

ஸ்ரீலோகாசார்யர்.

ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்திற்குப் பிள்ளைலோகாசார்யர் சிறந்த மஹோபகாரகர். "**परिवर्तिनि संसारे मृतः को वा न जायते । स जातो येन जातेन याति वंशस्समुन्नतिम्** - பரிவர்த்திநி ஸம்ஸாரே ம்ருத: கோ வா ந ஜாயதே, ஸ ஜாதோ யேந ஜாதேந யாதி வம்சஸ்ஸமுந்

(1) பிரபந்தஸாரம்—18. (2) ஹஸ்திகிரிமாஹாத்மியம்—27.

நதிம்." என்றார் பர்த்ருஹரியென்கிற கவிவரர். அங்ஙனம் ஸ்ரீவைஷ்ணவகுலமெல்லாம் தெய்வமாகக் கொண்டு தொழத் திருவவதரித்தருளின மஹாநுபாவர் இவர்.

எம்பெருமானாருடைய நியமனத்தாலே ஸித்தாந்தஸ்தாபகராக எழுந்தருளியிருந்த ஸ்ரீபராசரபட்டருடைய திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர் நஞ்சீயர். அவருடைய திருவடிகளில் வாழ்ந்தவர் நம்பிள்ளை. இவ்வாசிரியர் இவ்வுலகில் தோன்றிய ஒரு விலக்ஷணஸூர்யன் என்னலாமத்தனையன்றி வேறொன்றுஞ் சொல்லவொண்ணாது. இவருடைய அமுதப்பெருக்கான திவ்யஸூக்திகளைப் பெரும்பாலும் பட்டோலை கொள்வதையே போதுபோக்காகக் கொண்டு இவர்க்கு நிழலும் அடிதாறும்போலே வாழ்ந்துவந்த வடக்குத்திருவீதிப்பிள்ளையின் மூத்ததிருக்குமாரர் பிள்ளைலோகாசார்யர். இளையதிருக்குமாரர் அழகிய மணவாளப்பெருமாள்நாயனார். [இவர், ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம், திருப்பாவை ஆறாயிரப்படி வியாக்யானம், அமலனாதிபிரான் வியாக்யானம் முதலான திவ்யக்ரந்தங்களை அருளிச் செய்தவர்.]

இவ்விரண்டு திருக்குமாரர்களும் நம்பிள்ளை திருவருளாலேயே திருவவதரித்தவர்கள். 'லோகாசார்யர்' என்கிற திருநாமம் முதலில் நம்பிள்ளைக்கு இருந்தது. அதுவே வடக்குத்திருவீதிப்பிள்ளையினால் தமது ஜ்யேஷ்ட புத்ரர்க்கு இடப்பட்டது. இவ்விஷயம் உபதேசரத்தினமாலையில் "துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் உகப்பால், என்னவுலகாரியனோ வென்றுரைக்கப், பின்னை உலகாரியனெனும்பேர் நம்பிள்ளைக்கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்." "பின்னைவடக்குத் திருவீதிப்பிள்ளையன்பால், அன்ன திருநாமத்தையாதரித்து—மன்னுபுகழ், மைந்தருக்குச் சாத்துகையால் வந்து பரந்ததெங்கும், இந்தத்திருநாமமிங்கு" என்ற பாசுரங்களினால் விளங்கும்.

முமுக்ஷுக்கள் அறிந்து உஜ்ஜீவிக்கவேண்டிய அர்த்தவிசேஷங்களை மணிப்ரவாளநடையில் இவ்வுலகுக்கு உபகரிக்கத் தொடங்கின ஆசார்யர்களுள் திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதல்வர். "தெள்ளாருஞானத் திருக்குருகைப்பிரான் பிள்ளானெதிராசர் பேரருளால், உள்ளாருமன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்தது, இன்பமிகு மாறாயிரம்" என்ற உபதேசரத்தினமாலைப்படியே திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹ வியாக்யானமாகத் திருவவதரித்த ஆறாயிரப்படிக்கு முன்னே ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களில் மணிப்ரவாள நடையில் க்ரந்தமியற்றினாருமிலர். அதற்குப் பிறகு ஒன்பதினாயிரப்படி, இருபத்தினாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி முதலிய திவ்யக்ரந்தங்கள் அந்த நடையில் அவதரித்தன. இவை பகவத்குணாநுபவக்ரந்தங்கள். இவற்றில் கூடேயூடே சாஸ்த்ரார்த்த நிரூபணங்களும் பலபல இருந்தாலும் அவை குணாநுபவத்திற்கே ஐகாந்திகங்களான க்ரந்தங்களாகும். அங்ஙனன்றிக்கே சாஸ்த்ரார்த்தங்களைத் தொகுத்துத் தெரிவிக்கவல்ல திவ்யக்ரந்தங்களைப் பிள்ளை லோகாசார்யரென்னும் இவ்வாசிரியரே தமது பேரருளால் க்யாதிலாப பூஜாபேக்ஷைகளின்றியே முதன் முதலாக உலகுக்கு உபகரித்தருளினவர். உபயவேதாந்த ரஹஸ்யார்த்தங்களெல்லாம் இவருடைய க்ரந்தங்களில் அழகாகவும் அற்புதமாகவும் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. "श्रुतप्रकाशिका यस्मै संप्रदर्श्य विशुद्धताम् । नीता सुदर्शनार्येण लोकाचार्यं तमाश्रये - ச்ருதப்ரகாசிகா யஸ்மை ஸம்ப்ரதர்ச்ய விசுத்ததாம், நீதா ஸுதர்சநார்யேண லோகாசார்யம் தமாச்ரயே' என்கிற ஸ்ரீபாஷ்யபரம்பரைத் தனியன்படியே ஸ்ரீஸுதர்சநபட்டர் ஸ்ரீபாஷ்யவியாக்யானமாகத் தாம் ஏறியருளப்பண்ணின ச்ருதப்ரகாசிகையை இவ்வாசிரியர் ஸந்நிதியிலே கொணர்ந்து கடாக்ஷிப்பித்துப் பரிஷ்கரிப்பித்துக்கொண்டார் என்று விளங்குகின்றது. இவருடைய திவ்யக்ரந்தங்களே வேதாந்த ப்ரஸ்தாநத்தில் பின்புள்ள முதலிகளுக்கும் வழிகாட்டியாயிருக்கும். ஸ்ரீபாஷ்யார்த்தங்களோ ரஹஸ்யார்த்தங்களோ எல்லாம் இவ்வாசிரியருடைய திவ்யக்ரந்தங்களில் தான் மூன்றுமுன்னம் கையிலங்கு நெல்லிக்கனியாக எடுத்துக்காட்டப்பட்டன. தத்வசேகரம் முதலியன காண்க.

இவருடைய ஸ்ரீஸூக்திகள் அஷ்டாதசரஹஸ்யங்களென்று ப்ரஸித்தம். அவற்றில் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம் என்கிற மூன்று ரஹஸ்ய க்ரந்தங்கள் மிகச் சிறந்தவை, இவற்றின் அமைப்பை ஆழ்ந்து நோக்குமிடத்து இவை அபௌ

ருஷேயமாயிருக்கலாமே யல்லது புருஷ ப்ரணீதமென்று சொல்வதற்கு ஒருபடியாலும் இயலாது என்றே ப்ராமாணிகர்கள் அறுதியிடலாயிருக்கும். ஸ்ரீபாஷ்யத்தின் பெருமைக்குத் தக்கவாறு ச்ருதப்ரகாசிகை அதற்கு வியாக்கியானமாக அமைந்ததுபோல் இந்த மூன்று ரஹஸ்யக்ரந்தங்களின் பெருமைக்குப் பொருந்த விசதவாக் சிகாமணியான மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் இவற்றுக்கு அமைந்தது 'சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்ததாம்' என்கிற பழமொழியையே நினைப்பூட்டும். "**नामूलमुच्यते किञ्चिन्नानपेक्षितमुच्यते** - நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷிதமுச்யதே" என்கிறபடியே பொருத்தமுள்ள வியாக்கியானம் மணவாளமாமுனிகள் தவிர மற்று எவராலும் இயற்றமுடியாதென்பது அநுபவரஸிகர்களான ஆநஸூயுக்களின் ஸித்தாந்தம். பூர்வோத்தரஸங்கதிகளைக்காட்டி அவதாரிகையிடுந்திறனும், மயங்கவைத்தல் விரியவுரைத்தல் சுருங்கச் சொல்லல் என்னுங் குற்றங்களுக்கு அணுவளவும் இடமின்றியே மூலத்தை விவரிக்குமழகும், பிண்டிதார்த்தத்தை ஆங்காங்கு உபஸம்ஹரித்துக் காட்டும் நேர்த்தியும், ப்ராமாணிக பத்ததியிலிருந்து இறையும் வழுவாத ஆர்ஜவமும், "**अनाघ्रातत्वं बहुगुणपरीणाहि मनसा दुहानं सौहार्दं परिचितमिवाथापि गहनम् । पदानां सौभ्रात्रादनिमिषनिषेव्यं श्रवणयोः—वाणीविलसितम्** - அநாக்ராதத்வம் பஹுகுணபரீணாஹி மநஸா துஹாநம் ஸௌஹார்த்தம் பரிசிதமிவாதாபி கஹநம். பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:—வாணீவிலஸிதம்" என்று ஸ்ரீகுணரத்நகோசத்தில் பட்டர் அருளிச்செய்தபடியே அந்த லக்ஷணங்களின் பரிபூர்த்தி பொருந்திய அழகொழுகுகின்ற அத்புதபங்க்திகளை எழுதியருளும் இயல்வும், அதிகஹந சாஸ்த்ரார்த்தங்களையும் எளிய தெளிய மொழிகளாலே ஸுலபப்படுத்தும் ஸாரஸ்யமும் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலன்றி மற்று எதிலும் காணக்கிடைக்கமாட்டா. இப்படிப்பட்ட மஹநீயருடைய வ்யாக்யானம் பிள்ளைலோகாசார்யருடைய மூன்று ரஹஸ்யரத்னங்களுக்கும் ஆசார்யஹ்ருதயத்திற்கும் அமைந்திலதென்றால், அந்த மூலக்ரந்தங்கள் அவதரித்தும் ஒரு பேறும் பெற்றிலோமாவோம். நமது வாசாமகோசரபரமபாக்

யத்தினால் மாமுனிகளின் வியாக்கியானங்கள் அவற்றிற்கு அமைந்தன. இந்த ஸம்ஸாரமண்டலத்தில் அடிக்கொதிப்பு ஒரு புறமிருக்கச் செய்தேயும் "எம்மாவீட்டுத்திறமும் செப்பம்" என்றும் "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் "**भावो नान्यत्र गच्छति** - பாவோ நாந்யத்ர கச்சதி" என்றும் "**वैकुण्ठवासेपि न मेभिलाषः** - வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:" என்றும் மஹான்கள் பேசினதுபோல் அடியேனும் பரமபதத்தை வெறுத்து இவ்விபூதியில் நியதவாஸஞ்செய்யக் குதூஹலிப்பதுண்டு; அந்தக் குதூஹலத்திற்கு முக்கியகாரணம் யாதெனில்; இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை அநுபவிக்குமானந்தம் பரமபதத்திலும் நமக்குக் கிடைக்கமாட்டாதே; இப்போது நமக்குக்கிடைத்திருக்கும் பாக்கியம் மறுபிறப்பிலும் இங்ஙனமே கிடைக்குமென்றும் நிச்சயிக்கவழியில்லையே; ஆதலால் இந்த திவ்யஸூக்திகளின் அநுபவானந்தம் இடையறாது செல்லுதற்குப்பாங்கான இச்சன்மமே நீடூழி வாழ்க! வாழ்க !! என்னவேண்டியிருத்தலால், இங்ஙனம் பாவியேனுடைய நெஞ்சையும் பதஞ்செய்விக்கவல்ல மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிலுள்ள அநுபுபூஷையே காரணமென்க.

இத்தகைய வியாக்கியானத்தோடு கூடிய ஸ்ரீலோகாசார்ய திவ்யக்ரந்தங்களை ஸேவித்து ஸ்ரீவைஷ்ணவகுலமத்தனையும் இன்புறவேணும். இவ்விபூதியில் நாம் ஆனந்திக்க வேறு வழியில்லை.

இவ்வுலகாசிரியர் நைஷ்டிகப்ரஹ்மசாரியாகவே யெழுந்தருளியிருந்தவரென்று பெரியார்பணிப்பர். இவரது அமுதமொழிகளின் இனிமையையும் பெருமையையும் பற்றிப் பிறகு விரிவாகப் பேசுவோம்.

लोकाचार्याय गुरवे कृष्णपादस्य सूनवे ।
संसारभोगिसंदष्टजीवजीवातवे नमः ॥

ஸ்ரீ:

புஸ்தகவிமர்சம்.

(1)

சிஷ்டப்ரயோக ஸங்க்ரஹ:—இப்பெயர் பூண்ட வொரு ஸம்ஸ்க்ருதக்ரந்தம் (60 பக்கங்கள் கொண்டது) அபிப்ராய ப்ரகாசநார்த்தமாக நம்மிடம் அனுப்பப்பட்டு வந்திருக்கின்றது. திருவல்லிக்கேணியிலெழுந்தருளியிருக்கும் வ்யாகரண வித்வாந். ஸ்ரீமது பயவே. திருமங்கலம் நடாதூர் நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமியால் இப்புத்தகம் இயற்றப்பட்டு தேவநாகராக்ஷரத்தில் அச்சிடப்பட்டுளது. ஸம்ஸ்க்ருத பாஷாமயங்களான முன்னோருடைய சில க்ரந்தங்களில் உள்ள அருமையான சில பிரயோகங்களுக்கு வியாகரண சாஸ்த்ரப்படி உபபத்திகள் காட்டுவதற்கும் தவறுதலான பாடங்களைப் பரிஹரித்து ஸபாடங்களை வெளியிடுவதற்கும் முயற்சிகொண்டு இப்புத்தகமெழுதியிருப்பதாக உபோத்காதத்திற் காண்கிறது. இவ்வாசிரியர் வியாகரணசாஸ்த்ரத்தில் நல்ல வல்லவர் என்பதும், சென்னைப் பிரஸிடென்ஸிகாலேஜில் ஸம்ஸ்க்ருத பண்டிதராக எழுந்தருளியிருந்தவரென்பதும் பலர்க்குத் தெரிந்திருக்கும். இவருடைய இப்புத்தகத்தில் நமக்குத் தோன்றின ஸந்தேஹங்களைக் கீழே விவரிக்கின்றோம். அந்த ஸ்வாமியே ஸமாதானம் எழுதி அநுக்ரஹிப்பாராயின் அதனையும் இப்பத்ரிகையிலேயே வெளியிடுவோம். வியாகரணசாஸ்த்ரீய விஷயமாதலால் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே எழுதலாகிறது.

श्रीकैरविणीक्षेत्रवास्तव्यैः पण्डितैः तिरुमङ्गलम् नडादूर् नरसिंहाचार्यैः प्रणोय प्रकाशिते शिष्टप्रयोगसंग्रहनाम्नि लघीयसि ग्रन्थे दृष्टिं प्रसारितवतामस्माकं प्रादुर्बभूवुस्सुबहवस्संदेहाः । सर्वानपि तान् न वयमिदानीं प्रकाशयामः । अपि तु त्रिचतुरानेव विशयान् संप्रति विज्ञापयामः । परान् परस्तात् ।

तत्र ४२ तमे पृष्ठे—"तत्त्वमुक्ताकलापे पु १९७ गृहीतम् 'एतं सेतुं तीर्त्वा' इति च उपनिषद्वाक्यम् । अत्र ※ आगमशास्त्रमनित्यम् ※ इति परिभा-

षैव गतिः" इति विलिखितमवलोक्यते । **तीर्त्वा** इत्यस्मिन् प्रयोगे विचिकित्साया अवकाशलेशोपि नास्ति । **तारित्वा** इति भवितव्यमिति विदुषामेषां मनीषा कथन्नाम साधीयसी? **तारितुम्** इतिवत् तरित्वेति हि युक्तमिति व्याकरणशास्त्रपरिचितिनः कथमहो कथयितुमर्हन्ति? * तीर्त्वा भूतेशमौलिस्रजममरधुनीम् ※ इति भट्टमुरारिरपि प्रायुङ्क्त । एवं सुसंप्रतिपन्नाः प्रयोगा जाग्रति शतशः । वस्तुतः शाब्दिको निष्पत्तिरप्येवमेव । न पुन स्तरित्वेति । तदत्र अपशब्दत्वशङ्का कथम् । **आगमशास्त्रमनित्य**मिति परिभाषया समाहितिप्रकाशनं च कथंतरां युज्यते? परिभाषेन्दुशेखरे ※ संज्ञापूर्वकविधेरनित्यत्वम् ※ आगमशास्त्रमनित्यम् ※ इत्यादि परिभाषावष्टम्भतः ※ सागरं **तर्तुकामस्ये**त्यादिप्रयोगान् समाहितवतां केषाञ्चिदुक्तिमनूद्य "तन्न ; भाष्ये अदर्शनात्" इति प्रत्याख्यातं खलु । तदुपरि यत्किञ्चिद्विलेखनं किमनावश्यकम् । परिभाषैव गतिरिति केवलं विलिख्य विरतिः कथमुपपद्यताम् । वस्तुतः परिभाषैव गतिरिति वयमपि (रूपान्तरविषये) व्याख्यासु व्यलिखाम । परिभाषेन्दुशेखरोपरि च किमप्यलिखाम । तथा वा अन्यथा वा? महामतिभिरमीभिः कुतो नु न किमप्यलिख्यत ? तीर्त्वेत्यस्य कथमपशब्दत्वशङ्का ! इत्येवात्र नः प्रबलो विशयः ॥

अथ ४३ तमे पुटे —※ उदधिगमन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसेन्दिराहसुधसुन्दरदोःपरिघम् ※ इति सुन्दरबाहुस्तवीयसूक्तिमुपादाय, "अत्र 'सुध' इति अमृतपर्यायतया कूरेशः प्रायुङ्क्त । तत्र सुधा इति स्त्रीलिङ्गत्वात् इन्दिराहा या सुधा तस्याः सुन्दरदोरेव परिघः–अर्गलः–रक्षकः यस्य तथाभूतमित्यर्थः । तथा च सुधाशब्दस्यात्र छन्दोभङ्गावहत्वात् 'सुध' इति अप्रयोज्यत्वात् 'सुधि' इति प्रयुक्तं भवेत् । ※ उपसर्गे घोः किः ※ इति कर्मणि किप्रत्ययान्तः पुंलिङ्ग इति ज्ञेयम् । विधिः निधिः इत्यादिवत् । अतः 'सुध' इत्यपपाठः ।" इति सहसा व्यलेखि । मूलस्य अयमर्थ इत्यनवबुद्ध्यैव अस्थाने चोद्यावतारणं पण्डितानां कच्चिद्युज्यते? **'हारिमहमद्राक्षम्'** इति श्रवणमात्रे स्त्रीलिङ्गस्य द्राक्षाशब्दस्य कथं द्राक्षमिति क्लीबनिर्देश इति चोद्यमुपक्षिपन्तं प्रति "ज्ञान-

शब्दस्य क्लीबत्वेपि ज्ञानानन्दमयमित्यत्र 'ज्ञाना' इति यथा स्त्रीलिङ्गनिर्देशस्तथैव न दुष्यतीति भाव्यम्" इति प्रत्युत्तरप्रदानवत् हंहो! कोयमाक्षेपः! कोयं तन्निरासक्रम इति चित्रीयामहे। "மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ் சாறுகொண்ட சுந்தரத்தோளுடையான்" इत्येषा गोदासूक्तिः श्रीवत्साङ्कमिश्रैः ※ उदधिगमन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसेन्दिराह्वसुधसुन्दरदोःपरिघम् ※ इत्येवं विवर्तिता। अत्र इन्दिराह्वा सुधा येन लब्धा—इति बहुव्रीहिविवक्षया सुधेत्यस्य भाषितपुंस्कतामनवधाय विचिकित्साप्रकटनम् अथ अपहास्यसमाहितिप्रकाशनं च कथं नु भोः! पूर्णप्रज्ञानां कृत्यं भवति?

अथ ४१ तमे पुटे—※नित्यं काम्यं परमपि कतिचित् त्वय्यध्यात्मस्वमतिभिरममाः ※ इति श्रीरङ्गराजस्तव—उत्तरशतकस्थश्लोकरत्नमुपादाय, "अत्र 'त्वय्यध्यात्म' इत्यत्र **त्रय्यध्यात्म** इति भाव्यम्। अममाः इत्यत्र **अमथाः** इति च भाव्यम्। अन्यथा नान्वेति। 'मनु अवबोधने' इत्यस्मात् ....अमथाः इति रूपं भवति। किञ्च एतत्पूर्वपद्ये च 'ज्ञानं त्वमून् सममथास्सममत्युदारान्' इति इदमेव क्रियापदं प्रायोजि। तस्मात् अमथा इत्येव भाव्यम्। अममा इति अशुद्धं लेखकप्रमादागतमेव। तथा 'त्वयि' इत्यपि प्रामादिकमेव" इति अत्यन्तसाहसिकत्वपिशुनमस्ति लिखितम्। वस्तुतस्सुपाठानामप्यपपाठत्वेन विदूषणे को लाभ एतेषां मनीषिणाम्? अग्निना सिञ्चतीतिवाक्यवदपि कञ्चिदप्यर्थमप्रयच्छतोऽपपाठस्य स्वतन्त्रतया प्रकल्पने किं बीजम्? **अममाः**—ममकाररहितास्सन्तः, **त्वयि**—श्रीरङ्गनाथे भगवति, **न्यस्य**—निक्षिप्य. इत्यर्थविवक्षया भट्टपादैर्यथाऽनुगृहीतम् तथैव कोशेषु पाठो विराजते। व्याख्यायि चैवमेव प्राचीनैरपि प्राज्ञपुङ्गवैः। असावेव गुरुवरोऽष्टश्लोक्यां यथा [※ नित्यं त्वहं निर्ममः ※ इति]ममकाररहित इत्यर्थे निर्मम इति प्रायुङ्क्त, यथा च वेदान्तदेशिकोऽप्यच्युतशतकादिषु प्रयुङ्क्ते स्म, तथाऽत्रापि तादृशार्थविवक्षयैव अममशब्दमप्यन्वग्रहीत्। **अमथा** इति तिङन्तपदस्य कास्विदत्र प्रसक्तिः? पूर्वश्लोके तादृशं रूपं प्रयुक्तमिति प्रदर्शनं च कस्मै फलाय? 'त्रय्यध्यात्म' इति

भाव्यमिति लिखताममीषां मनसि कोऽर्थोभिसंहित इति न विद्मः। व्याकरणग्रन्थं पठन् कोपि विद्यार्थी **एकाज्ग्रहण**मिति पदं पठितवान्। तदाकर्ण्य गुरुः 'रे मूढ! एकादशीग्रहणमिति परिष्कृत्य पठ' इत्यादिदेश। अथ 'एकादश्यां चन्द्रस्य सूर्यस्य वा ग्रहणम् [उपरागः] नास्ति किल' इति विद्यार्थिनाऽनुबोधितस्सः 'सत्यं सत्यम्, **राकाशशिग्रहण**मिति परिशोध्य पठ' इत्यनुशास्तिस्मेति कथामिमां स्मृतिपथमधिरोहन्तीं प्रयत्नेनापि न वयं निगूहयितुं प्रभवामः। "अन्यथा नान्वेति" इति लिखन्त एते महामतयः स्वाविष्कृते पाठे कीदृगर्थान्वयमवधारयामासुरिति परं जिज्ञासितं नः।

अद्य प्रस्तुतानामेतेषां विषयाणां समाहितिमुपलभ्य, अथावशिष्टानपि विशयान् विवरीतुमुत्सहेमहीत्यखिलमवदातम्॥

---

(2)

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ:—இதன் மூன்றாவது ஸஞ்சிகை (சென்ற ஆவணிமாதத்தில் வெளிவந்தது) வரப்பெற்றோம். இதன் கீழ்ஸஞ்சிகைகளிலுள்ள விஷயங்களைப்பற்றி விரிவானவிமர்சம் ஏற்கனவே வெளியிட்டிருக்கின்றோம். ஸ்ரீதேசிகனுடைய திவ்யஸூக்திகளுக்கு அரிய பெரிய வியாக்கியானங்களை வெளியிடுவதிலேயே செலவிடவுரிய அவகாசத்தை ஸுதராம் அநாவச்யகங்களான விஷயங்களின் விசாரங்களில் செலவிடாமலிருப்பது நன்று என்று இப்பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமதுபய வே. (திருச்சி) ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமி ஸந்நிதிக்குச் சிலவிண்ணப்பங்கள் எழுதிக்கொண்டோம். மிகவிரிவாக எழுதத் தொடங்கிய மறுப்பு நூலை இடையில் நிறுத்தமுடியாதென்று அந்தஸ்வாமி பதில் திருமுகமருளியுள்ளார். ஆனாலும் ※ ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான பேரருளாளன் திருவடி வாரத்திலே அந்தகரணசுத்தியுடன் அடியோம் செய்யும் பிரார்த்தனை யாதெனில்; "பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்றும் "ஊமனார்கண்ட கனவிலும் பழுதாயொழிந்தன கழிந்தவந்நாள்கள்"

என்றும் ஆழ்வார்கள் அநுஸந்தித்த பாசுரங்கள் நமக்காகவேயாகும். அங்ஙனம் நமக்குப் பலநாட்கள் பாழாய்ப்போயினவாயினும் இனிக் கழியுங்காலமாவது க்ஷேமமாகக்கழியவேணும்: ஸ்ரீகோபாலாசார்யஸ்வாமி போல்வார்களும் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய ப்ரவ்ருத்திகளையே மேற்கொள்ளவேணும்; இங்ஙனே கடாக்ஷித்தருளவேணும்—என்பதே.

ப்ராக்ருதஸஞ்சிகையில் பாதுகாஸஹஸ்ராவதார தத்வவிமர்சம் என்பது 16 பக்கம் வெளிவந்திருக்கிறது. இதில் ஆறுவிஷயங்கள் ஸ்ரீகோபாலாசார்யஸ்வாமியால் விரிவாக விசாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் எமது அபிப்ராயம் அதிஸம்க்ஷேபமாக இங்கு வெளியிடப்படுகின்றது. „ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ! முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ - ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ!, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ” என்கிற ஸ்ரீராமாயணச்லோகத்தின் அந்வயவிஷயமான சர்ச்சைக்குச் சொல்லவேண்டியவை வ்யாமோஹப்ரசமௌஷத முதற் பகுதியில் (பக்கம் 39 ல்) சுருங்கச் சொல்லப்பட்டுள்ளன. இதில் ஸாரமான விஷயம் யாதெனில்; இது ஆர்ஷப்ரயோகம். இப்படிப்பட்ட ப்ரயோகம் லௌகிககவிகளின் வாக்குக்களில் தேடினாலும் கிடைக்கமாட்டாது. „ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் ந லோபோ நாசுபா மதி: । பவந்தி - ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் ந லோபோ நாசுபா மதி:, பவந்தி” என்பதும் இப்படிப்பட்டதே. இதில் நக்ரோத:, நலோப: இத்தியாதிகளை ஏகபதமாகவே கொண்டு சிலர் நிர்வஹிக்கும் புடைகளையும் நாமறிவோம். ஆனால் ஆர்ஷமென்று சொல்லிப்போருவதே நன்று என்றும், வருந்தி யோஜிக்கும் வழிகள் ரமணீயமல்லவென்றும் பெரியோர்கள் பணிப்பர். க்ரியாபதத்தை ஆவ்ருத்திபண்ணிக்கொள்ள முடியாதவிடங்களில் காணப்படும் நஞ்பாஹுள்யம் ஆர்ஷத்வேந ஸஹ்யம் என்பது சிறந்த ஸமாதானம். * ந ச ஸீதா த்வயா ஹீநா * என்ற ப்ராக்ருதஸ்தலத்திலும் இங்ஙனமே சொல்லலாமாயிருக்கச்செய்தேயும், வருந்தாமலும் ஸ்வாரஸ்யப்ரசுரமாகவும் ஒரு யோஜனை பண்ணிப் பொருந்தவிடலாமென்று நம்பிள்ளைக்குத் தோன்றவே ஈட்டில் அப்படிப்பட்டயோஜனை அருளிச்செய்யப்பட்டது. „ஸாஹசர்யேண வாக்யஸ்யைகஸ்ய ந யுஜ்யதே - ஸம்பவத்யேகவாக்யத்வே வாக்யபேதோ ந யுஜ்யதே” என்கிற நிபந்தனை ஆர்த்தஸ்வாரஸ்யமுள்ள விடங்களிலே குறுக்கிடாதென்பது பூருவர்களின் திருவுள்ளம். „தஸ்யைகாக்ர்யாதிமோஷ்யம் ஸஜதாம் ஸஹஸ்ரதிம் தாவகீ ஸ்வாவலோகி - தர்க்கைகாலம்பிகோஷ்ட்யாம் பஜது பஹுமதிம் தாவகீ லாகவோக்தி:” என்றருளிச்செய்த தேசிகன் திருவுள்ளமும் இதற்கிணங்கியதே. * காவலிற் புலனைவைத்து * என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்துள்ள ஒரு ஸ்ரீஸூக்தியும் இதனை வற்புறுத்தும். ஆகவே நம்பிள்ளையின் யோஜனையில் ஸ்வாரஸ்யாதிசயமுள்ளதுபற்றி ஒரு அவத்யமும் சொல்லப்போகாது. ஆர்ஷமாகையாலே இரண்டு நஞ் இருப்பதில் குறையொன்றுமில்லையென்று திருவுள்ளம்பற்றியருளின தேசிகனுடைய ஸ்ரீஸூக்தியும் அநவத்யம். மற்றைப்படியுள்ள வாக்ராசிகள் உபேக்ஷிக்கத்தக்கவை.

2. „பரிபந்தி - பரிபந்தி” சப்தம் அஸாதுவென்று ப்ரஸங்கமேகிடையாது. இது சாந்தஸபதமா? லௌகிகபதமா? என்பதே விசாரம். எத்தனையோ சாந்தஸபதங்களை மஹாகவிகள் தாங்கள் ப்ரயோகித்து வருகிறார்களென்பது அபலபிக்கவொண்ணாத விஷயம். சாந்தஸமென்றபோதே அஸாதுவென்றதாக ஆகமாட்டாது. திருவையாற்றில் ஒரு வித்வச்சிரோமணிஸ்வாமி பரிபந்தி சப்தம் லௌகிகமாகவொன்றும் சாந்தஸமாகவொன்றும் உண்டென்று ஸஞ்சிகையெழுதினார். அதற்குமேல் பரிபந்திபஞ்சபங்கீ [பரிபந்திபஞ்சபங்கீ] என்கிற விரிவான க்ரந்தம் வடமொழியில் எம்மால் மூன்று வருஷங்களுக்கு முன் பிரசுரஞ் செய்யப்பட்டுளது. அந்த பதத்திற்கு சாந்தஸத்வமேதான் வடிவு. அது லோகவேதஸாதாரணமன்று என்பது ஸகலவையாகரணர்களின் ஸித்தாந்தமென்று அதில் பரக்கநிரூபித்திருக்கிறோம். அவ்வளவோடு விவாதசாந்தியாயிருக்கிறது. அந்த க்ரந்தத்தை நமது நண்பர் கடாக்ஷித்தருளவேணுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

3. யதிராஜஸப்ததியில் "ரஸபரிஜமுஷாவாவொஷ ஷாடதாடவொநம் முவணவணிஜ: கவபூராவம் கிமி த்ஷிஜநதெ - ரஸபரியளச்லாகாகோஷஸ்புடத் புடபேதகம் லவணவணிஜ: கர்ப்பூரார்க்கம் கிமித்யபிமந்வதே" என்றவிடத்தில் விசாரம் வெகுநாளாக நடைபெற்று வருகிறது. ஸ்வாமி தேசிகன் தவறுதலாகக் கவநம் பண்ணிவிட்டாரென்று ஒருமூடனும் சொல்லமாட்டான். பலபல ஸ்ரீஸூக்திகளில் பலஹேதுக்களாலே பாடஸ்காலித்யம் விளைந்திருப்பதுபோல் இங்கும் விளைந்திருப்பதாகவே நாம் கூறியிருப்பது. அப்படிப்பட்ட ஸ்காலித்யம் யாதொன்றுமில்லையென்றும் உள்ள பாடத்தில் யாதொரு அநுபபத்தியும் இல்லையென்றும் சில வித்வான்கள் எழுதினார்கள். ஸ்ரீகோபாலாசார்யஸ்வாமியும் அங்ஙனமே யெழுதுகிறார். புடபேதநே என்று ஏழாம் வேற்றுமையாகப் பாடமிருக்கலாமென்றும் அப்போது ஆக்ஷேப ப்ரஸக்தியே யில்லையென்றும் எழுதுகிறார். ஆக்ஷேபம் செய்ய ஆருக்கதிகாரம்? ஒருவன் ஆக்ஷேபித்ததாகவே கொண்டாலும் ஸர்வஜ்ஞரான ஸ்வாமியின் ஸூக்தியில் அஜ்ஞனொருவன் செய்த ஆக்ஷேபத்தைப் பொருள்படுத்திப் பலமஹான்கள் திரண்டுருண்டு விடையளிக்க என்ன ஆவச்யகதை? சுத்தபாடத்தை நாம் ஸேவிக்கப்பெறுவதற்கு முன் எல்லாரும் ஓதுகிற பாடத்தையே தான் நாமும் நெட்டுருப் போட்டு ஓதிவந்தோம். அப்போது ஒரு அநுபபத்தியும் நமக்குத் தோன்றாமலே யிருந்தது. ப்ராசீநரான ஒரு ஆசிரியர் [அஸ்மத்குலீநர்] வியாக்கியானித்தபாடத்தை உணரப்பெற்ற பின்பு அதில் அதிகஸ்வாரஸ்யம் தோன்றிற்று. உள்ள பாடத்தில் அநுபபத்தியும் புலனாயிற்று. ப்ராமாணிகர்களான வித்வான்களும் எம்முடைய உபபாதநங்களைக்கேட்டு உவந்தனர்.

யாம்கண்ட சுத்தபாடம் யாதெனில், கவபூரொதுகு - [கர்ப்பூரோத்கம்] என்பதே. அமரகோசத்தில் * மதல்லிகாமசர்ச்சிகா ப்ரகாண்டமுத்கதல்லஜேள ப்ரசஸ்தவாசகாந்யமூநி. * என்றுள்ளது ப்ரஸித்தமே. * ஸஜொதுளா மணஷாஸம்ஸயொ: - ஸங்கோத்கேள கணப்ரசம்ஸயோ: * என்று வியாகரணஸூத்ரமுமுண்டு. பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வசதகத்தில் (102) * கநாஜணிஜகரொதுளா - அநுமணிமகரோத்கேள * என்று

ப்ரயோகித்திருக்கிறார். அந்த உது சப்தமே தேசிகனாலும் கர்ப்பூர பதத்தோடு சேர்த்து ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பூரச்ரேஷ்ட மென்றபடி. அடுத்துள்ள "அலிஜநதெ - அபிமந்வதே" என்கிற க்ரியாபதத்தை ஆழ்ந்து நோக்கினால் முன்னே கவபூவசம் இருக்கத் தகுதியில்லையென்பது விவேசநவிசாரதர்கட்கு விளங்கும். கவபூராவம் என்று ஸ்வாமி ஸாதித்திருந்தால் அதற்குச்சேர 'கயாநா விஜாநதெ' என்றே மேல்வாக்கியம் ஸாதிக்கப்பட்டிருக்கும். 'கருப்பூரத்தின்விலையை என்ன வென்று அபிமானிக்கிறார்கள்' என்கிற வாக்கியம் ஒழுங்குபட்டிருக்கிறதா வென்று புத்திமான்கள் பரிசீலிக்கவேண்டும். கருப்பூரத்தின் விலையை எங்ஙனம் தெரிந்துகொள்வார்கள்? என்றால்: இது வார்த்தைப் பாடாகும். கிமிதஷிஜநதெ என்பதற்கு இதுதான் பொருள் என்னில், அதற்கு நாம் என்ன சொல்லப்போகிறோம்? ப்ராமாணிகர்கள் அங்ஙனம் சொல்லார்கள் என்போமத்தனை. 'உப்பு வாணியர்கள் கர்ப்பூர ச்ரேஷ்டத்தை என்னவென்று மதிப்பிடுவார்கள்' என்பது ஒழுங்குபாடான வார்த்தையாதலால் அங்ஙனமே ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது: மூன்றாவது பாதமாகிய விசேஷணம் எங்கு அந்வயிக்கிறது? என்கிற விசாரம் ஒருபுறமிருக்கட்டும். நான்காவது பாதத்தின் முடிவில் வார்த்தையே ஒட்டவில்லையே. 'நன்றாக ஒட்டுகிறது, ஒரு குறையுமில்லை' என்பவர்கள் தமக்கு இஷ்டமான பாடத்தையே தாராளமாக ஆதரித்திடுக. விஷய ஸ்வாரஸ்யம் நெஞ்சுக்கு விஷயமான பின்பும் ஆத்மாவை வஞ்சிக்குமவர்களைப் பற்ற நாம் என் சொல்வோம்!. இந்த யதிராஜஸப்ததியிலேயே * மூலே நிவிச்ய மஹதாம் நிகமத்ருமாணாம் * என்றவிடத்து நிவிச்ய என்பதே சுத்தபாடமென்று நாம் உணர்த்த உணர்ந்துவைத்தும் நிவேச்ய என்றே சொல்வோமென்று ஆக்ரஹிப்பார் திறத்திலே நாமென் செய்தோம்? யாதவாப்யுதயம் நான்காவது ஸர்க்கத்தில் (87) *நிவிச்ய மூலேஷு வநத்ருமாணாம் என்றவிடத்துங்கூட நிவேச்ய என்று திருத்தினாலும் நாம் செய்யலாவதொன்றில்லையே. வெய்யிலிற் செல்வாரை நிழலுக்கழைக்கலாம்; வெய்யிலே எமக்கு இனிதென்பாரை வலிப்பாரார்?

ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி (பக்கம் 44ல்)—"விசேஷணத்தோடு கூடிய விசிஷ்டத்திற்குச் சொல்லியது விசேஷ்யத்தில் ஓட்டாமல் வாயிருமானால் விசேஷணத்தில் ஓட்டும் என்றும் ஒரு நியாயம். ரஸபரிமளாதிகள் விசேஷ்யமான விலையில் ஓட்டக் கூடாததால் விசேஷணமான கர்ப்பூரத்தில் ஓட்ட என்ன தடை?" என்கிறார். இந்த ஸ்வாமியின் திருவுள்ளத்தினால் „ [illegible] " [உமாஸுதம் சோகவிநாச காரணம் நமாமி விக்நேச்வர பாத பங்கஜம்] என்பது போன்ற கவிதைகளும் சாஸ்த்ர ஸம்மதங்களே போலும். உமாஸுதமென்ற விசேஷணம் பாதபங்கஜத்தில் ஓட்டக்கூடாததால் விக்நேச்வரனில் ஓட்ட என்ன தடை? என்று ஸாதிக்க ப்ராப்தமேயன்றோ. * [illegible] * இத்யாதிகள் பிசகு என்று நிஷ்கர்ஷித்த வ்யுத்பத்திவாதம் முதலிய க்ரந்தங்களுக்கும் ஜலாஞ்ஜலிபோலும்.

கர்ப்பூரத்தின் விலையில் ரஸபரிமளங்களை ஆரோபிக்கலாமென்று சொல்லி, "என்ன மலிவான விலை? இத்தனை ரஸபரிமளத்திற்கு இத்தனை மலிவான விலையோ என்று ச்லாகாகோஷம்" என்று முடித்திருக்கின்றார். தமிழ் ரீதி வேறு, ஸம்ஸ்க்ருத ரீதி வேறு. 'நீங்கள் சொல்லவேணும்' என்பதற்குச் சரியாக '[illegible]' என்னலாகுமோ? "[illegible]" என்று சொல்லப் பொருந்துமா என்று பாருங்கள். பொருந்துமென்று தோன்றினால் [illegible]மென்கிற பாடத்தையே ஆதரிக்க. இனிமேல் இதில் விசாரம் விரும்பத்தக்கதன்று.

4. பகவத் த்யாந ஸோபாந ஸ்துதியில் „[illegible]" [வலதி புஜயோ:] என்றவிடத்து வலதி என்ற பரஸ்மைபதம் அஸாது என்று நாம் பணித்ததாக எழுதியுள்ளார். பட்டருடைய ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் "[illegible]" என்றவிடத்து [illegible] என்ற ஆத்மநேபதம் அஸாது என்று ஒரு வித்வான் ஆக்ஷேபிக்க, அதற்கு விடையாக 'அப்படியானால் வலதி என்று பரஸ்மைபதியாக ப்ரயோகித்ததும் அஸாதுவென்ன

வேணும்-என்று ப்ரதிபந்தியாக உபந்யஸித்தோம். தேசிக திவ்ய ஸூக்திகளுள் எதில் என்ன தோஷம் நாம் காட்டியிருந்தாலும் அது ப்ரதிபந்தியாகவே காட்டப்பட்டிருக்குமென்பது ஸத்யம். 'அங்கு எப்படி ஸமாதானமுறையுண்டோ அப்படியேதான் இங்கும்' என்று தூஷகர்களுக்கு வாக்பந்தநம் பண்ணுகிற புடையிலே உபந்யஸிக்கப்பட்டவற்றை மஹான்கள் பற்றிக்கொண்டு பாரதம் பண்ணுவது பாங்கன்று. மணவாள மாமுனிகள் முதலிய பேராசிரியர்களின் அநவத்ய திவ்ய ஸூக்திகளிலே தூஷணவர்ஷணங்களைப் பண்ணினார்க்கு விடையளிக்குங்கால் உபந்யஸித்தவற்றுக்கு என்ன தாற்பரியமென்று அறிவது அறிஞர்கட்கு எளிதேயன்றோ? ஆழ்ந்து பாராமல் தூஷிப்பதென்று புகுந்தால் தேசிக திவ்ய ஸூக்திகளிலும் இங்ஙனே ஆபாத தூஷணங்கள் பல பேசலாமன்றோ என்று காட்டுவது குற்றமாமோ ?

வியாகரண சாஸ்த்ரத்தில் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமியின் நிரூபணத்தினால் தெளிவுபெறத் தக்கவர்களாக நாம் இருக்கவுமில்லை. அந்த ஸ்வாமி வெளியிட்டுள்ள சில ஸ்தோத்ர வியாக்கியானங்களில் [illegible]கள் உச்சாவசமாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதை நாம் நட்பு முறையில் அந்த ஸ்வாமிக்குப் பல தடவை உணர்த்தியிருக்கிறோம். சப்த சாஸ்த்ரம் பயிலாத குறையினால் அப்பிழைகள் நேர்ந்து விட்டதாகவும் இனிமேல் அவஹிதரா யிருக்கப் போகிறதாகவும் ஸ்ரீமுகமருளியுள்ளார். தசாவதார ஸ்தோத்ரத்தில் * [illegible] * என்ற ச்லோகத்தின் வியாக்கியானத்தில் „([illegible]) [illegible]?" „[illegible]" இத்யாதி ப்ரயோகங்கள் நமது நண்பர் செய்துள்ளவை. [illegible]. இவற்றை நாம் எடுத்து உணர்த்தியிருக்கிறோமென்பதையும் இந்த ஸ்வாமியே தமது ஸஞ்சிகையில் எழுதியுள்ளார்.

5. ப்ரபோத சந்த்ரோதய நாடகத்திலுள்ள ஸாரமான ச்லோக ரத்னங்களைத் தனியே யெடுத்துப் பதிப்பித்தவொரு மஹநீயர் „[illegible]" [குரோரப்யவலிப்தஸ்ய]

என்கிற (மத்யே உதாஹ்ருதமா யிருந்த) ஆர்ஷ ச்லோகத்தையும் அந்த நாடகத்தின் ச்லோகமாக மயங்கி அவற்றோடு சேர்த்துப் பதிப்பித்துவிட்டார்—என்கிறவொரு வழுவை ஒரு புத்தகத்தில் நாம் குறிப்பிட வேண்டி நேர்ந்தது; குறிப்பிட்டிருந்தோம். அவ் விஷயத்தை யெடுத்துக்கொண்டு "அண்ணா இங்கு ஏமாந்தே போனார்; ஆத்மாதான் தாஷிதமாயிற்று" இத்யாதிகளான சிறிய வார்த்தைகளை இப்பெரியார் வரைந்துள்ளார். விஷயத்திற்கு மாத்திரம் விடை யளிக்கின்றோ மிங்கு. குரோரப்யவலிப்தஸ்ய என்கிற ச்லோகம் ஸ்ரீராமாயணத்திலுள்ளதே யன்றி நாடகத்த தன்று என்பது நாமெழுதி யிருந்தது. 'அது ஸ்ரீராமாயணத்த தன்று, தர்ம சாஸ்த்ரத்திலிருந்து ஸ்ரீராமாயணத்தில் உபாத்தம்' என்கிறார் நண்பர். கோவிந்தராஜீயம் முதலிய வியாக்கியானங் களில் அங்ஙனம் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுளதாம். நான்காவது பாதம் * காய—ம் ஹவதி ஶாவஹ நழ * என்றுதான் ஸ்ரீராமாய ணத்திலுள்ளதாம். *வரிதூமொ வியீயதெ * என்று நாட கத்திலுள்ளபடி மஹா பாரதத்தில் காணப்படுகிறதாம். ஆகவே மஹா பாரதத்திலிருந்துதான் நாடகக்காரர் எடுத்திருக்கக்கூடு மாம். ஸுதொவதெ ॥ ஸ்ரீராமாயணம் பம்பாய்ப் பதிப்பிலும் காசிப்பதிப்பிலும் (பாடபேதங்களில்) காய—ம் ஹவதி ஶாவஹ நழ, வரிதூமொ(ஹி)வியீயதெ, வஜூஹூமொ(ஹி)வியீயதெ என ஐந்து வகைப் பாடங்கள் காணப்படுகின்றன. பல்லாயிரம் பாடபேதங்களுள்ள ஸ்ரீராமாயணத்தில் இது வியப்பன்று. இது நிற்க. தர்ம சாஸ்த்ரங்களிலிருந்து உதாஹரிப்பதாக ஸ்ரீராமாய ணத்தில் மற்றும் பல ச்லோகங்களுமுண்டு, அப்படிப்பட்ட சில ச்லோகங்கள் மநுஸ்ம்ருதி முதலியவற்றில் பல வேறுபாடுகளுடன் காணப்படுவதுமுண்டு; ஆகரம் கிடைக்கப் பெறாதவைகளுமுண்டு. பெரும்பாலும் அர்த்தாநுவாதமே செய்யப்படுவதாக ஸித்தாந் தம். இதைப்பற்றின விரிவு வேண்டும்போது வெளிவரும். தர்ம சாஸ்த்ரங்கள், ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் இத்யாதிகளை யெடுத் துக்கொண்டு, எது முற்பட்டது, எது பிற்பட்டது என்று பௌர் வாபர்ய வ்யவஸ்தையை ஸப்ரமாணமாகச் செய்து தலைக்கட்டிவிட் டால் "அண்ணா இங்கு ஏமாந்தே போனார்" என்கிற ஸ்ரீஸூக்தி

அழகியதேயாகும். நாடகத்தினுடையதல்லாதவொரு ச்லோ கத்தை நாடகத்தினுடையதாக எழுதினவொருவரும், அப்படி யெழுதுவது ஓர் குற்றமாகாது என்று ஸமர்த்தநம் பண்ணப் புகுந்த விந்த ஸ்வாமியும் ஏமாந்தவர்களென்பது திண்ணம்.

இது சந்த்ரோதய கவியின் ச்லோகமன்று, மஹர்ஷியின் ச்லோகந்தான், உதாஹ்ருதந்தான்—என்பதை அங்கீகரித்தான பின்பு என்ன விவாதம்? அது எந்த மஹர்ஷியின் க்ரந்தஸ்தமானு லென்ன? பிறவிடங்களிலிருந்து உதாஹரிக்கப்பட்ட ச்லோகங்களை யும் க்ரந்தஸ்த ச்லோகங்களோடு சேர்த்துக் கணக்கிடலாமென் கிற வார்த்தையை நமது நண்பரொருவர்தாமே உரைக்க வல்லார்.

> நிமஶாஜவஹ-ஐரிவஉவஉவஜுரெ
> ஶாஈஹாவஜெதூ ஶுவஹதொ ஊ ஷுதிழ ।
> வரிஹாவஹ ஶிஹி—ரவஜாநதவஹூ-
> தவரவஹூ வாவஹூ கயஉவஹ ஜிஷதா ? ॥

6. எமது ப்ரணவாதிகார தத்வக்ரந்தம் "ஜேஜேது ஸம்ஸ் தாபிதம்" என்று ஸமாப்தி செய்யப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்தாபித மென்றால் கொல்லப்பட்டது என்று பொருளாகையாலே அச்லீல மான முடிவு என்று ஒரு ஸ்வாமி எழுதி யிருந்தார். அப்படியா னால், "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" என்று பகவான் பணிக்கின்றானே, தர்மத்தைக் கொல்லுவதற்காகத்தான் பகவதவதாரமோ? என்று ஒருவர் கேட்டிருந்தார். இதன்மேல் நமது நண்பர் விஷயஞ் சொல்ல வருகிறார். என்ன சொல்லுகிறா ரென்னில், அங்கு ஸம்ஸ்தாபநாய என்னாமல் அர்த்தாய என்று கூடச் சேர்த்துச் சொல்லி யிருப்பதால் வாரணம் வந்து விட்டது என்கி றார். இந்த வாரணம் எந்த தேசத்திலிருந்து வந்ததோ அறிகின்றி லோம். வெகு அற்புதமான வாரணமாயிரா நின்றது. இந்த வாரணத்தின் ரஸத்தை க்ரஹிக்க நமக்கு சக்தியில்லை. வெறும் ஸம்ஸ்தாபநமாயிருந்தால் கொலைதான் அர்த்தமாகுமென்றும், அர்த்த சப்தம் உடன் சேர்ந்து விட்டால் அந்த அர்த்தம் மாறிவிடு மென்றும் இந்த ஸ்வாமி ஸாதிக்கிறார். இஃது ஒரு அபூர்வ சிக்ஷ ணம். இது இவருடைய அற்புதமான ஆகாசப் பந்தல்.

அச்யுத சதகத்தில் ஸ்வாமிதேசிகன் (ச்லோகம் 9-ல்) ,, வஸம் ஹாவகு ஸாவதுவெ - ஸம்ஸ்தாப்யஸே" என்றும், (ச்லோ 31-ல்) ,, ஸாவிதவாரஉயஉ-ரா: - ஸம்ஸ்தாபித பரமதர்மா:" என்றும் அருளிச் செய்துள்ளார். இங்கு சுயஉ-ரஷவம் உடன் கூடாமையால் கொலைதான் அர்த்தமென்று நண்பர் ஸித்தாந்தப் படுத்தினராகிறார். ஸித்த தர்மத்திற்கும் ஸாத்ய தர்மங்களுக்கும் அந்தோ! கொலை நேர்ந்து விட்டது!. காப்பாராரே? எமக்கு ரக்ஷகமான ஸித்த தர்மமும் பிறர்க்கு ரக்ஷகமான ஸாத்ய தர்மங்களும் கொலையுண்டுபோயினவே! ,, யஉ-ரா ரக்ஷதி ரக்ஷித:" என்று ஆவலிப்பதற்கு இடமில்லையாயிற்றே. துயர் நீங்கி வாழ்க வாழ்க

‚வஹெ' ஐதுக்ஷராதெசுவ வாரஉதிவஉாஜுதா ।
ஐதீஉம ஹிதயம கிம ஹெ வாரணம ஸாயயிஷுதி ॥

ஸாஷிதஸுவஸு யயா
கொஸெஷ ஊதாய-ரொதாஜிதா ந தயா ॥
ஷுஸதஸுவஸொாக்தும்
ஊாரிதவாஷிக்வஉிதி விஸாவயத ॥

ந தஷு நாயதஸிஹி நி-யதா விஉஷாம உதா ।
ராஜஸஸா நிதுக்தெ கொஷி ராஜேூா ஊதிம வஷெக்ஷ ॥
ஜொகொவகாரஜவஜெஸ விஷீநவாவா
ஸஜெஉ-ரநவ-ஊவகாஸஉதீவ ஸொவு ।
கூய-ராஹ ஹி துஹிதி ந: ஷுணதாதி-ஹைெ-
ஷெ-வஸு வாஉகஉஜெ ஷுணிவது யாவெ ॥

21893

ஏஜன்டுகள் தேவை.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

அதிருசிகரம்! அதிஸௌகர்யம்!

சமயலுக்கு இன்றியமையாத

ஓர் புதிய பதார்த்தம்.

ஷட்விதபா கோபயோகி

என்கிற

இண்டியன் குக்கிங் பவுடர்.

INDIAN COOKING POWDER
V. R. GOPALA IYENGAR
GODHA VILASAM
25. ACHARAPPAN ST. G. T. MADRAS
REGISTERED TRADE MARK
SHADVITHA PACOPAYOGI
TRADE MARK
25. ACHARAPPAN ST. MADRAS.
INDIAN COOKING POWDER
சட் வித பாகோபயோகி
V. R. கோபால அய்யங்கார்
கோதாவிலாசம்
25 ஆச்சாரப்பன் வீதி ஜீடி மதராஸ்

சென்னை கார்ப்பரேஷன் சுகாதார ஆபீஸர்களாலும் மற்றும் பல ஸாராஸார விவேகிகளாலும் பரீக்ஷித்து பாராட்டப்பெற்றது.

ரஸம் சாம்பார் முதலான பதார்த்தங்கள் புளி உப்பு மிளகாய் முதலானவைக ளில்லாமலே அதி சுலபமாயும் அதி ருசிகரமாயும் அதி சீக்கிரத்தில் செய்து கொள்ள உபயோகமாயிருக்கும்.

(1) அப்படியே இட்லி முதலானவைகளுக்கு உபயோகிக்கலாம்
(2) ஜலத்தில் கட்டியாய் கலந்தால் சட்னியாகும்.
(3) புளிப்பில்லாத் தயிரில் கலக்க தயிர்ப்பச்சடியாகும்.
(4) சாதத்தில் கடலைப்பருப்பும் முந்திரிப்பருப்பும் வறுத்துச் சேர்த்துப் பொடியைக்கலக்க புளியோதனமாகும்.
(5) சமையல் செய்த பருப்பில் சேர்த்தால் சாம்பாராகும்.
(6) கொதித்த ஜலத்தில் சேர்த்து விட்டால ரஸமாகவேயிருக்கும்.

"கோதா விலாஸம்" ஆசாரப்பன் தெரு, மதராஸ் } V. R. GOPALA AIYANGAR

Registered No. M.

விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப் பட்ட நகைகளும், வெள்ளிச்சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1-க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம்பொன்னுக்கு உத்சரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசுவளயல்களுக்கும் கேட்லாக்கு உண்டு அவைகளின் நெம்பரைக்குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்து கொடுக்கப்படும்.

பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Edited & Published by Vadakarai Ramanujachariar, 25, Acharappan St., and Printed at the Newman Press, 161, Broadway, Madras.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த [illegible]

OFFICE OF THE [illegible]
27 JAN 1936

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த
ஸம்ஸ்தாபன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவரும்
ஸத்ஸம்ப்ரதாயார்த்தப்ரகாசனபத்ரிகை.

[illegible] புடம் 1.] யுவஹு மார்கழியில் கேட்டை [சஞ்சிகை 2.

ஆசிரியர்

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியார்.

ப்ரோப்ரைட்டர் : வடகரை இராமானுஜாசார்யர்

25, ஆசாரப்பன் தெரு, ஜி. டி. மதராஸ்.

1935 டிசம்பர்.] [தனிப்ரதி விலை 0—3—0

விஷய அட்டவணை.

1. பத்ராதிபரின் பரிசீலனைகள்.
    - (1) ஸ்ரீராமாநுஜ தர்சனம்.
    - (2) எம்பெருமானோடுள்ள உறவுகள்.
    - (3) க்ஷத்ரபந்துவின் உபாக்கியானம்.
    - (4) புஸ்தகவிமர்சம்.
2. திருப்புட்குழிஸ்வாமி வைபவ பரிஷ்கார பரிசிஷ்டம்.
3. வர்த்தமானங்கள்.

நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப்பத்ரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்தவிசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்தசம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தையிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது ப்ரொப்ரைட்டரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்டமுடையவர்கள் ப்ரவேசக்கட்டணமாக ரூ. 1-0-0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.

சந்தா விபரம்

அங்கத்தினர்களுக்கு வருஷச்சந்தா	....	1	8	0
,, வெளியூர் ,,	....	1	12	0
தனிப்ரதி	....	0	8	0

வெளியூர் சந்தாதார்கள் சந்தாத்தொகையை முன்னதாக அனுப்பி சரியான விலாசத்தைத் தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விளம்பரம்

ராப்பர் முழுப்பக்கம் ஒருதடவைக்கு	....	5	0	0
,, அரைப்பக்கம் ,,	....	3	0	0
,, கால்பக்கம் ,,	....	2	0	0

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ ஹயக்ரீவாய நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே

ய: ச்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் ॥

ஸ்ரீராமாநுஜஸித்தாந்தவைஜயந்தீ.

(ஒரு மாதாந்தப் பத்திரிகை.)

—ஆசிரியர்—

காஞ்சீ ப்ரதிவாதிபயங்கர-அண்ணங்கராசாரியர்

தொகுதி 1.] [பகுதி 2.

ஸ்ரீ:.

பத்ராதிபரின் பரிசீலனைகள்.

(1)

ஸ்ரீராமாநுஜதர்சனம்.

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவதர்சநமானது எம்பெருமானார்தர்சனமென்று வழங்கப்படுவதற்குக் காரணமும், இந்ததர்சனம் அநாதியென்பதும் முன்ஸஞ்சிகையில் நிரூபிக்கப்பட்டன. அத்வைதம் த்வைதம் என்கிற மற்ற இரண்டு தரிசனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைத தர்சனத்தின் வைலக்ஷண்யம் இப்போது சுருக்கமாக நிரூபிக்கப்படுகிறது.

உபநிஷத்துக்களில் சிலவாக்கியங்கள்—ஒரு தத்துவமே உள்ளதாகவும் பலதத்துவங்கள் கிடையாதென்பதாகவும் பேசுகின்றன. „நேஹ நாநாஸ்தி கிஞ்சந” [நேஹ நாநாஸ்தி கிஞ்சந] என்றிது முதலான வாக்கியங்களினால் பலதத்துவங்கள் கிடையாதென்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. „ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம” [ஏகமேவஅத்விதீயம் ப்ரஹ்ம] „ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம” [ஸர்வம்

கல்விதம் ப்ரஹ்ம] "𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" [ஐததாத்ம்யமிதம் ஸர்வம்] என்றிவை முதலான வாக்கியங்களினால் ஒரே தத்துவமுள்ளதாகக் காட்டப்படுகிறது.

இப்படிப்பட்ட வாக்கியங்களுள்ள உபநிஷத்துக்களிலேயே பலதத்துவங்களுண்டென்பதைக் காட்டுகின்ற வாக்கியங்களும் ஓதப்பட்டிருக்கின்றன. "𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃 𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃" "𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑍌 𑌦𑍍𑌵𑌾𑌵𑌜𑌾𑌵𑍀𑌶𑌨𑍀𑌶𑍌" "𑌦𑍍𑌵𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 𑌸𑌯𑍁𑌜𑌾 𑌸𑌖𑌾𑌯𑌾 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇 । 𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 ॥" என்றிவை முதலான வாக்கியங்களால்—சித்து அசித்து ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்கள் தனித்தனியே உள்ளனவாக ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. ஒன்றுதான் தத்துவம் என்று சொல்லிவிட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது. பல தத்துவங்களுண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது. யதார்த்தவாதிகளான உபநிஷத்துக்கள் அஸங்கதமாகச் சொல்லமாட்டாதாகையால் இவற்றை முரண்பாடு சிறிதுமின்றியே ஸங்கதமாகப் பொருந்தவிடுகிற வழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும்.

ஒரு தத்துவமே உள்ளதென்று ஓதுகின்ற உபநிஷத்வாக்யங்கள் அத்வைதச்ருதி (அல்லது) அபேதச்ருதி என்று வழங்கப்படும். பலதத்துவங்களுண்டென்று ஓதுகின்ற உபநிஷத்வாக்கியங்கள் த்வைதச்ருதி (அல்லது) பேதச்ருதி என்று வழங்கப்படும்.

ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் மேற்குறித்த அத்வைதச்ருதிகளை முக்கியமாகக்கொண்டு ஒன்றேதான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள். த்வைதச்ருதிகளான பேதச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்றும் கருதினார்கள். சேதனப்பொருள்களும் அசேதனப்பொருள்களும் உள்ளனவாகத் தோற்றுவது மாயையின் தோற்றமேயாதலால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேதச்ருதிகளை நிர்வஹித்துவிடலாமென்பது இவர்களின் கருத்து. ஆகவே, த்வைதச்ருதிகளைத் தள்ளி அத்வைதச்ருதிகளையே முக்கியமாகக் கொண்டாடியால் இவர்கள் அத்வைதிகள் என்று வழங்கப்படுகின்றார்கள்.

ஸ்ரீமத் ஆநந்ததீர்த்தஸ்வாமிகள் த்வைதச்ருதிகளான பேதச்ருதிகளை முக்கியமாகக்கொண்டு அத்வைதச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றார்களாதலால் அவர்கள் [மத்வாசார்யஸம்ப்ரதாயஸ்தர்கள்] த்வைதிகள் என்று வழங்கப்படுகின்றார்கள்.

ஆக மேற்கூறிய இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் ஒருவகையான ச்ருதிவாக்யங்கள் ஒதுக்கப்பட்டு ஒருவகையான ச்ருதிவாக்யங்களே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன என்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்கள் ஸத்யமாகவுள்ளன என்கிற அர்த்தம் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று. ஒரே தத்துவம் என்கிற அர்த்தம் ஸ்ரீமத்வாசார்யஸ்வாமிகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று.

உபநிஷத் வாக்கியங்களெல்லாவற்றையுமே ஸமரஸப்படுத்தி ஒன்றையும் ஒதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினர் நம் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள். எங்ஙனே யென்னில்; உலகத்தில் ஒருவஸ்துவைப் பலவென்றும் ஒன்றேயென்றும் சொல்லுவதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரணமாக ஒரு கடியாரத்தை எடுத்துக்கொள்வோம். அஃது ஒன்றா? பலவா? என்று கேட்டால் ஒன்று என்றே சொல்வோம். ஆனால் அதை நாம் ஊன்றிப்பார்க்குங்கால் அதில் பல பலவஸ்துக்கள் அவயவங்களாகச் சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல அவயவங்களோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமேயல்லது வேறுவிதமாக ஏற்படாது. இங்ஙனமே பல பலவஸ்துக்களையும் நாம் உதாஹரணமாகக் கொண்டு பார்க்கலாம். படுக்கை தலையணை, வண்டி, வீடு முதலான ஒவ்வொரு வஸ்துவும் ஒருவிதத்தில் ஒரேவஸ்துவாகவும் மற்றொருவிதத்தில் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவஸித்தம்.

நம்மையே எடுத்துக்கொள்வோம்; ராமாநுஜன் என்பவன் ஒருவன் என்று சொல்லுகிறோம். பல உறுப்புகளோடு கூடின

ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன் என்றதாகுமேயன்றி, அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை யென்றதாக லக்ஷிக்க மாட்டாதன்றோ? ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறனென்று சொல்லும்போது அவனுடைய தேஹம் அர்த்தமாகிறது. ராமாநுஜன் மேதாவி என்று சொல்லும்போது ஆத்மா அர்த்தமாகிறது. ஏன்? சிவப்புநிறம் தேஹத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது தேஹத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சிலஸமயங்களில் உடம்பைக்குறிப்பதாயும் தேறுகின்றதென்பது மறைக்கமுடியாது.

இனி, முற்காட்டிய பேதச்ருதிகளையும் அபேதச்ருதிகளையும் எடுத்துக்கொள்வோம். சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லுகிற வாக்கியங்கள் வாஸ்தவமாக அப்படிப்பட்ட மூன்று பொருள்கள் இருப்பதைச் சொல்லுகின்றனவாதலால் பொருந்தும். ஒன்றே என்று சொல்லுகிற வாக்கியங்கள் சேதனப்பொருள்களையும் அசேதனப்பொருள்களையும் சரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே என்கிற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும்; இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதே நம் ஸித்தாந்தத்தின் முழுமுதற்கொள்கை. இதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் முதற்பதிகத்தில் "உடன்மிசை உயிரென" என்ற அருமருந்தன்ன ஸ்ரீஸூக்தியினால் காட்டியருளினார். அதை நிதியாகக் கொண்டு ஆளவந்தார் எம்பெருமானார் முதலிய ஆசார்ய சிகாமணிகள் உபபாதநம் செய்தருளின விசேஷங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

---o---

(2)

எம்பெருமானோடு நமக்குள்ள உறவுகள்.

திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் நமக்கு மங்கல ஸூத்ரம் போன்றது என்று ஆசார்யர்கள் அருளிச்செய்கிறார்கள். உலகில் ஒரு கன்னிகையின் கழுத்தில் தாலி ஏறினவாறே தம்பதிகளுக்கு "பர்த்ரு பார்யா ஸம்பந்தம்" என்ற ஒரு உறவு ஏற்பட்டதாகும். திருமந்திரமாகிற தாலி நமது கழுத்தில் ஏறினவாறே ஒரு உறவு அல்ல, ஒன்பது உறவுகள் ஏற்பட்டனவாகும். எங்ஙனேயென்னில்; அதில்

முதல் பதம் ப்ரணவம். அது அகாரமென்றும் உகாரமென்றும் மகாரமென்றும் [மூன்றக்ஷரமான] மூன்று பதங்கள் கொண்டது.

முதற் பதமான அகாரத்தில் மூன்று உறவுகள் தோன்றும். (1) பித்ரு புத்ரபாவம், (2) ரக்ஷ்யரக்ஷகபாவம். (3) சேஷசேஷி பாவம். அந்த ஒரு அக்ஷரத்தில் இந்த மூன்று உறவுகள் எங்ஙனே தோன்றுகின்றனவென்னில்; அகாரத்திற்கு ப்ரக்ருதி சக்தியென்றும் யாதுஸித்தி (தாதுசக்தி) யென்றும் இரண்டுவகையான சக்திகளுண்டு. "அகாரோ வை ஸர்வா வாக்" என்றும் "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்றும் சொல்லுகிறபடியே அகாரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாயிருந்துகொண்டு, தனக்கு அர்த்தமான எம்பெருமான் உலகுக்கெல்லாம் முதல்வன் என்று காட்டுவதாகிய இது ப்ராக்ருதி சக்தி எனப்படும். "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்ற குறளும் இதனையே காட்டிற்றாகும். ஆகவே அகாரத்தில் ப்ராக்ருதி சக்தியினால் ஏற்பட்ட வுறவு கார்ய காரணபாவம் (அல்லது) ஜந்ய ஜநகபாவம் அல்லது பித்ருபுத்ரபாவம்.

அந்த அகாரமானது "அவ ரக்ஷணே" என்கிற தாதுவிலிருந்து தேறினதாகையாலே எம்பெருமான் ஸர்வரக்ஷகன் என்றதாகும். இதனால் (2) ரக்ஷ்யரக்ஷகபாவமாகிற உறவு தேறிற்றாகிறது. இதுதான் யாதுஸித்தமெனப்படும்.

இந்த அகாரத்தின்மேல் வ்யாகரண சாஸ்த்ரப்படி சதுர்த்தீ விபக்தி யேறியிருந்து லோபித்ததாகக் கொள்ளப்படுகிறது. இல்லாவிடில் [illegible]க்கவேமாட்டாது. அந்த விபக்தியானது 'அவனுக்கு சேஷப்பட்டது' என்கிற பொருளைக் காட்டுதலால் (3) சேஷசேஷிபாவம் என்கிற உறவு தேறிற்று.

இனி அடுத்துள்ள உகாரமானது அவதாரணப் பொருளதாய் எம்பெருமானுக்கே சேஷப்பட்டது என்று காட்டுதலால் "கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள்போல்" என்றபடி (4) பதிபத்நீபாவமென்கிற உறவு தேறிற்று.

அதற்கு அடுத்துள்ள மகாரமானது "மந ஜ்ஞாநே" "மந அவபோதநே" என்கிற தாதுக்களிலிருந்து நிஷ்பந்நமாகி ஜ்ஞாதாவான ஆத்மாவைச் சொல்லுதலால் (5) ஜ்ஞாத்ரு ஜ்ஞேயபாவ

மென்கிற உறவு தேறிற்று. அதற்குப் பிறகு உள்ள நம: பதத்தினால், தன்னை ரக்ஷித்துக்கொள்வதில் தனக்கு எவ்விதமான உரிமையும் இல்லையென்று காட்டுகிற முகத்தினால் ஆத்ம வர்க்கமெல்லாம் **எம்பெருமானுடைய ஸொத்து என்று காட்டுதலால் (6) ஸ்வஸ்வாமிபாவம் என்கிற உறவு தேறிற்று.**

இனி நாராயணபதத்தை யெடுத்துக்கொண்டால் இதற்குத் தத்புருஷஸமாஸமென்றும் பஹுவ்ரீஹிஸமாஸமென்றும் இரு வகையான வ்யுத்பத்திமார்க்கங்கள் கொள்ளப்பட்டு, நாரபதார்த்தமான ஸகலவஸ்துக்களுக்கும் எம்பெருமான் ஆதாரமென்றும், அந்த ஸகலவஸ்துக்களையும் ஆதாரமாக வுடையவனென்றும் தெரிந்துகொள்ளுகிறோம். ஆதலால் "நாராணாமயநம்" மென்கிற தத்புருஷனால் (7) ஆதாராதேயபாவ மென்கிற உறவு தேறுகிறது. நாரா யஸ்யாயநம் ஸ: என்கிற பஹுவ்ரீஹியால் (8) சரீரசரீரிபாவ மென்கிற உறவு தேறுகின்றது. நாரங்கள் இவனிடத்திலே இருக்கின்றன என்பது தத்புருஷஸித்தம். நாரங்களிலே இவனிருக்கிறானென்பது பஹுவ்ரீஹிஸித்தம். அவற்றிலே இவனிருப்பதாவது அவற்றை உடலாகக்கொண்டு தான் அவற்றுக்கு உயிராக இருப்பதேயாதலால் இதனால் சரீராத்மபாவம் ஸித்தித்ததென்னக் குறையில்லை.

அந்த நாராயண பதத்தின் மீதுள்ள சதுர்த்தீவிபக்தியானது காகாக்ஷிந்யாயத்தாலே தன்னிடத்திலும் அந்வயிக்கின்ற நமஸ்ஸினால் பரிஷ்காரம் பெற்று, நாராயணனுக்குச் செய்யப்படுகிற கைங்கர்யத்தின் போகமும் அவனுக்கேயன்றி இந்த ஜீவனுக்கில்லையென்று நிஷ்கர்ஷித்துக் காட்டுதலால் (9) போக்த்ருபோக்யபாவம் என்கிற உறவைத் தெரிவிக்கின்றது. ஆகத் திருமந்திரத்தினால் நவவித ஸம்பந்தங்கள் தெரியவந்தன.

இவற்றைச் சிந்தையில் பதியவைத்துக்கொள்வதற்காக

"𑌪𑌿𑌤𑌾 𑌚 𑌰𑌕𑍍𑌷𑌕𑌃 𑌶𑍇𑌷𑍀 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌰𑌮𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌧𑌾𑌰𑍋 𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌚𑌾𑌦𑍍𑌯𑌮𑌨𑍂𑌦𑌿𑌤𑌃 ॥"

[பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:
ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:]

என்கிற ஒரு ச்லோகரத்நத்தைக் காட்டியுள்ளார்கள்.

---

(3)

க்ஷத்ரபந்துவின் உபாக்கியானம்.

இன்று *மன்னியசீர் மார்கழியில் கேட்டை. இது, துன்னு புகழ் மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால் நான்மறையோர் கொண்டாடும்நாள் என்பது உலகமறிந்ததே. அவ்வாழ்வார் பேரருள்கொண்டு நமக்கு ஊட்டிய அர்த்த விசேஷங்களுள் ஏதேனுமொன்றை இன்று நாம் அநுஸந்திப்பது நன்று.

அவ்வாழ்வாரருளிய திருமாலையின் சிறப்பை, "திருமாலையறியாதவன் பெருமாளையறியான்" என்னும் முதுமொழியே விளங்கக் காட்டும். அத்தகைய பெருமைவாய்ந்த அத் திவ்யப் பிரபந்தத்தில் "மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால், கத்திரபந்துமன்றே பராங்கதி கண்டுகொண்டான்" என்ற பாசுரத்தில் எடுத்தாளப்பட்டுள்ள க்ஷத்ரபந்துவின் சரிதை நாம் அவசியம் அறியத்தக்கது. இது ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில தொண்ணூற்றேழாவது அத்தியாயத்தில் பரக்கக்கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு:—

மிகக்கொடிய நடத்தைகளையுடையனாய், பல்வகைப் பாவங்களும் உருவெடுத்துவந்தன வென்னும்படி மஹாபாபியான க்ஷத்ரபந்து என்பானொருவன் இருந்தான்; அவன் தனது கொடுமையினால் தாய் தந்தை மக்கள் மித்திரர் அனைவராலும் கைவிடப்பட்டவனாய், காட்டிலே திரிந்துகொண்டு ஜீவஹிம்ஸையினால் வயிறுவளர்த்து வந்தான். இங்ஙனம் நெடுநாள் சென்றவளவில், ஒருநாள் ஒரு மாமுனிவர் கொடிய வெய்யில்வேளையில் வழிபோகா நிற்கையில் வழி தப்பி, இப்பாவி திரியுங் கானகத்திலே புகுந்து இவனது கண்ணுக்கு இலக்காயினர். அவரைக் கண்டதும் அவருடைய பரிதாபத்தைக் கண்ட இவனுக்குத் தன்னையுமறியாமல் அம்முனிவர் விஷயத்தில் காருண்யமுண்டாகி, 'மாமுனிவரே! இஃது உம்முடைய வழியன்றே;. வழிதப்பி வந்தீர்போலும்; உற்றுநோக்கிப் பாரும்' என்று முனிவரை நோக்கிக்கூற, அவரும் உணர்ந்து, பொறுக்க முடியாத தாஹத்தையுடையவராய் ஒரு தடாகத்தைத் தேடிச் செல்லுகையில் அருகே ஒரு அழகிய பொய்கையைக்கண்டு, தாப மிகுதியால் சடக்கென அக் குளத்திற்போய் விழுந்திட்டார். அப்போது அங்கிருந்த க்ஷத்ரபந்து தனது கையிலிருந்த வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு, அம்முனிவரைப் பிடித்துத் தூக்கித் தேற்றித் தாமரைக்கிழங்குகளை உணவாகக்கொடுத்து

விடாயைப்போக்கி மகிழ்வித்தான். பிறகு அவர் கரைமீதேறி ஒரு மரத்தடியில் உட்கார அவரது கால்களின் நோவுதீர நன்றாகப் பிடித்து உபசாரங்களைச்செய்த க்ஷத்ரபந்துவை நோக்கி அம்முனிவர், 'பேருபகாரம்புரிந்த பெரியோனே! யாருடைய சிறந்த குலத்திற் பிறந்தவன் நீ? உனது வரலாறுகளைக் கேட்க விரும்புகிறேன்' என்ன, அதுகேட்ட அவனும் 'முனிவர் கோமானே! நான் ஸூர்யவம்சத்தில் விஶ்வரதன் என்பவற்கு மகனாய்த் தோன்றியவன்' என்று தொடங்கித் தனது கொடுமைகளையெல்லாம் ஒன்றும் ஒளிக்காமல் உள்ளபடி சொல்ல; அவற்றைச் செவியுற்ற முனிவர் இவனை நல்வழியிற் செலுத்தவேணுமென்ற கருத்துக்கொண்டு 'அப்பா! இனி இத் தீய குணங்களையெல்லாம் விட்டிட்டு ஜீவகாருண்யத்தையே பரம தர்மமாகக் கடைப்பிடிக்க உன்னாலாகாதோ?' என்று கேட்க; அதற்கு அவன் 'காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் தீக்குணங்கட்குப் பிறப்பிடமான நான் அவற்றைவிட்டுப் பிரிந்து ஒரு க்ஷணகாலமும் இருக்ககில்லேன்; என்மனம் என்வசமன்று; இது தவிர வேறு நியமநமுண்டாகில் சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன்' என்ன; எப்படியாவது இவனை வழிபடுத்தவேணுமென்னும் பேரவாக்கொண்ட முனிவர் 'இது மாட்டாயாகில், எப்போதும் **கோவிந்த! கோவிந்த!** என்று சொல்லிக்கொண்டிருக்கவாவது உன்னால் முடியுமோ? இருமினாலும் தும்மினாலும் **கோவிந்த!** என்றே சொல்லிக்கொண்டிருப்பாயாகில் உனக்கு மிக்க நன்மையுண்டாம்' என்று சொல்லிவிட்டுப் போயினர். அது முதலாக க்ஷத்ரபந்து கோவிந்த நாமத்தை இடைவிடாது ஸங்கீர்த்தநம் பண்ணிக்கொண்டிருந்தான். சிலகாலங் கழித்து அவன் மரணமடைந்து அந்தணர்குலத்தில் பூர்வஜந்ம ஸ்மரணத்துடன் பிறந்தான். உடனே அவனுக்கு இக் கொடிய ஸம்ஸாரத்தில் மிக்க நிர்வேதம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட உத்தமோத்தமமான ப்ராஹ்மண குலத்தில் எனக்குப் பிறவிநேர்ந்ததும் பூர்வஜந்ம ஸ்மரணமுண்டானதும் நான் முன்பு பண்ணின கோவிந்தநாம ஸங்கீர்த்தநத்தின் பயனன்றோ? ஆகவே எனக்கு மேலான நன்மையை விளைத்த அந்த ஸ்ரீ கோவிந்தனையே நான் ஆராதனஞ்செய்து, *தீண்டாவழும்புஞ் செந்நீருஞ் சீயுநரம்புஞ் செறிதசையும் வேண்டா நாற்றமிகு முடலைவிட்டு* மாய வன்சேற்றள்ளற் பொய்ந்நிலத்தைக் கடந்து நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்தை அடையக் கடவேன் என்பதாகத் துணிந்து அங்ஙனமே செய்து பரம பாகவதனாகி வீடுபெற்றனன் என்பதாம்.

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ பத்ரிகையின் புரட்டாசி மாதத்து ஸஞ்சிகையும் வரப்பெற்றோம். இதிலும் 'பாதுகாஸஹஸ்ராவதாரதத்வ விமர்சம்' என்ற மகுடத்தின் கீழ்ப் பதினாறு பக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடைவீதி ராமாயண காலக்ஷேபமென்று பலரும் ப்ரஸித்தமாகச் சொல்லிப் போருவதுண்டே. மூலம் வாசிப்பவர் ஆரண்யகாண்டம் வாசிக்கிறார்; அர்த்தம் சொல்பவர் ஸேதுபந்தனக் கதை சொல்லிக்கொண்டிருக்கிறார். ஸர்க்கம் முடிந்தவுடனே மூலம் வாசிப்பவர் *𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌷𑍇 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌆𑌰𑌣𑍍𑌯𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌷𑍋𑌡𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃* [இத்யார்ஷே வால்மீகி ராமாயணே ஆரண்யகாண்டே ஷோடசஸ் ஸர்க்க:] என்று வாசித்து முடித்தார்; அதைக்கேட்ட கதைக்காரர் "அடபாவீ! இதை முதலிலேயே சொல்லக்கூடாதா? பரத்வாஜ ஆதித்யம், காகாஸுரவ்ருத்தாந்தம், அஹல்யா சாபம் முதலிய ஆரண்யகாண்டக் கதையைச் சொல்லியிருப்பேனே, நீ கிஷ்கிந்தா காண்டம் வாசிக்கிறாயென்று நினைத்தன்றோ நான் ஸேதுபந்தனக் கதையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்றாராம். அதைக்கேட்ட ஸபையிலே ஒருவர் 'ஐயரவாள்! பாரத பாகவத கதைகளில் செல்லாமல் ஸ்ரீராமாயணக் கதையையே சொல்லிவருகிறீர்களல்லவோ, அது போதும்; மேலே நடக்கட்டும் என்றாராம்.

இப்படிப்பட்ட கதைகளெல்லாம் ஏகதேசமென்னலாம்படி ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி, க்ரந்தத்திற்குத் திருநாமம் சாத்தியிருப்பதும் உள்ளே விஷயங்களெழுதுவதும் மிகவும் ஆச்சரியம்.

முற்காலத்தில் காளிதாஸர் ஒன்றுமறியாத சிலரை ராஜஸபையில் கொண்டு நிறுத்தி 'இவர் எனது ஆசாரியர்; அத்விதீய

மஹா வித்வான்' என்று சொல்லிப் புகழ்வராம். அந்த மஹா வித்வான் வாய்திறவாதிருந்தால் க்ஷேமம். பரவசமாக அவர் ஏதேனும் வாய்திறந்துவிட்டால் விலவறச் சிரிக்கும்படியான விபரீத வார்த்தை தவிர வேறொன்றும் வாக்கில் வெளி வராதாம். இப்படிப் பட்டவர்களிலே ஒருவரை ஒருநாள் காளிதாஸர் ராஜ ஸந்நிதானத்தில் கொண்டுபோய்ப் பெரிய சிங்காசனத்திலே எழுந்தருளப் பண்ணிவைத்தார். 'அங்கு நீர் ஒன்றும் வாய்திறக்கக் கூடாது' என்று திட்டம் செய்தும் வைத்திருந்தார். அவரும் அப்படியேயென்று இசைந்திருந்தும் அந்த ஸபா மண்டபத்தில் பயங்கரமான பத்துத் தலைகளோடே இராவணனது சித்திரம் எழுதப்பட்டிருந்தது கண்டு அஞ்சி நடுங்கி 'ராஹணன்!' என்று வாய் வெருவினார். அதுகேட்ட அரசன் காளிதாஸரை நோக்கி 'இதென்ன? இவரை நீர் மஹா வித்வானென்றீரே; ராவணனென்னவேண்டியிருக்க ராஹணன் என்கிறாரே! என்று கேட்க; ப்ரத்யுத்பந்நமதியாய் மஹா மேதாவியான காளிதாஸர் உடனே *𑌕𑍁𑌮𑍍𑌭𑌕𑌰𑍍𑌣𑍇 𑌹𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌹𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑍇 । 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌰𑌾𑌹𑌣𑍋 𑌨 𑌤𑍁 𑌰𑌾𑌵𑌣𑌃* என்று ஒரு ச்லோகஞ் சொல்லி ஒரு மணி காலம் வியாக்யானமுபந்யஸித்தாராம். இப்படி அநேக ஸமயங்களில் அவர் ஆச்சரியமான ச்லோகங்கள் இயற்றி, ஒன்றுமறியாத மூடர்களின் அஸமஞ்ஜஸ ப்ரலபிதங்களையெல்லாம் அத்யந்தம் உபபந்நங்களாகவே ஸமர்த்தநம் செய்துகொண்டிருந்தாராம்.

அவ்விதமாகவே நம் கோபாலாசார்யஸ்வாமியும் ஒரு சிறந்த கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அஸமஞ்ஜஸமாக எழுதியிருந்தவர்களின் உக்திகளை அதி சாதுர்யமாய் ஸமர்த்தநம் செய்வார்போன்று, தமது அதிகாரத்திற்கு ஏலாத காரியங்களை ஏன்றுகொண்டு விஷயங்களால் வித்வான்களின் ஹ்ருதயரஞ்ஜநம் செய்யவில்லாமல், அநுவதிக்கவும் அர்ஹமல்லாத தூஷண பரிஹாரோக்திகளினாலேயே பத்ரபூரணம் செய்தருளாநின்றார். நிந்தனை கூடாதென்று பிறர்க்கு உபதேசிக்குமிவர் நிந்தனை தவிர வேறொன்றும் அறியாதாராயினர். தாம் எழுதுவதெல்லாம் பரம பாவந திவ்ய ஸ்ரீஸூக்திகளென்றும், பிறர் எழுதுவது வசை மொழிப்

புராணமென்றும் விபரீதமாக க்ரஹித்திருக்கின்ற இந்த ஸ்வாமி அடியேன்மீது எத்தனை நிந்தைகளை எழுதினாலும் அதில் அடியேனுக்குச் சிறிதும் வருத்தமில்லை. "வைததனை இன் சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த சோறென்று கூழை மதிப்பானும், கைத்ததனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர், மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்" என்றபடி அடியேன் இவரது வசை மொழிகளால் வாழ்வேனத்தனை. இவர்தாம் தமது ஸ்வரூபத்தில் நின்றும் அதிமாத்ரம் ப்ரச்யுதராகின்றாரே! என்கிற வருத்தம்மாத்திரமே அடியேனுக்குள்ளது. விஷயங்களை அழகாக எழுதிவிட்டு இவர் எத்தனை அத்பாயம் வைதாலும் நன்றாயிருக்கும். அந்த பாக்யம் இவர்க்கு இப் பிறப்பில் இல்லையென்பதை உடனுக்குடனே அடியேன் விவரித்தே வருகின்றேன்.

இந்த ஸ்வாமியின் லிகிதங்கள் யாவும் அபத்தமயம் என்பதை ஸ்பஷ்டமாக விவரித்து இதுவரை அடியேன் மூன்று ஸஞ்சிகைகள் வெளியிட்டுள்ளேன். அவற்றிற்கு இவர் யாதொரு மறு மாற்றமும் தாராதே எதையோ எழுதிக்கொண்டு போகிறார். ப்ரக்ருதம் நான்காவது ஸஞ்சிகையில் இவர் எழுதியுள்ள விஷயங்களும் அஸம்பத்தமென்பதை இதோ நிரூபிக்கின்றேன். ஸ்வாமி தேசிகன் ந்யாய பரிசுத்தியில் "நவநூ ஶுகாஹ ஶ்லிஷோவி ஶாதம்ஹ: கண்ரீவஶ்வராணஸி" என்று ஸாதித்திருக்கின்ற ஸ்ரீஸூக்தி நமது நண்பர் திருவுள்ளத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கத் தகும். இவ்விடத்திற்கு மிகவும் பொருத்தமான ஸ்ரீஸூக்தி அதுவே.

1. "ஜஜ்ஞு ஸம்ஸ்தாபிதஃ" என்கிற எமது ப்ரயோகத்தில் ஸம்ஸ்தாபித சப்தம் அச்லீலமென்கிற வாதம் இந்த ஸஞ்சிகையிலும் தொடர்ந்திருக்கிறது. சப்தமர்மமறியாதவொருவர் எழுதியிருந்ததை ஸ்தாபிக்க இவர் பாடுபடுவது வீண். முன்னமே இதைப்பற்றிப் போதுமானது எழுதினேன். மீண்டும் ஸாரமாக எழுதுகின்றேன். ஸம்ஸ்தாபிதம் என்றால் கொல்லப்பட்டது என்று பொருள் என்று இவர்களுக்கு எந்த ப்ரமாணத்திலிருந்து தெரியவந்தது? ஸ்ரீ தேசிகனுடைய ப்ரயோகங்களை முன்னமே விளக்கியிருக்கிறேன். அவரறியாத கோசம் இவர்கள் அறிந்துவிட்டார்கள்போலும். ஸம்ஸ்தித: என்னும் பதத்திற்கு

இறந்தவனென்று பொருள் கூறப்பட்டிருப்பதைக் கொண்டு ஸம்ஸ்தாபித பதத்திற்குக் கொல்லப்பட்டதென்கிற பொருளைக் கொள்வது பரிஹாஸ்யம். சப்த கல்பத்ருமம் முதலான நிகண்டுகளில் ஸம்ஸ்தித பதத்திற்கு அவ்யவஹித பூர்வமாகவே ஸம்ஸ்தாபநம் என்கிற பதம் குறிக்கப்பட்டுளது; அதற்கு அர்த்தம் ''ஸமாப்தி, ஸ்தாபநம், ஸ்வீகரணம்'' என்று எழுதப்பட்டுளதே யன்றி மாரணம் என்று எழுதப்பட்டிருக்கவில்லை. ஸம்ஸ்தித பதத்தின் அர்த்தத்தைக்கொண்டு ஆரோபித்துச் சொல்வது கூடாதென்பது வையாகரண நிஷ்கர்ஷம்.

ஸித்தாந்த கௌமுதியின் உபக்ரமத்தில் ''முநித்ரய நமஸ்க்ருத்ய தது₃க்தீ: பரிபா₄வ்ய'' என்றிருப்பது ப்ரஸித்தமே. இதில பரிபாவ்ய என்றால் 'பரிபவப்படுத்தி' அதாவது 'திரஸ்கரித்து' என்றுதானே அர்த்தமாகும். அது தகுதியோ? என்று சங்கித்து, பரிபவ சப்தத்திற்குத் திரஸ்காரம் அர்த்தமானாலும் ஸந்த₃ர்ப₄வஶாத் அந்த அர்த்தம் கொள்ளவேண்டிய அவசியமில்லை யென்று எழுதிவைத்தார்கள். ஸம்ஸ்தாபித சப்தத்திற்கு இவர்கள் கூறுகிற பொருள் நிகண்டு ஸித்தமுமன்று, ப்ரயோக ஸித்தமுமன்று; கேவலம் ஆக்ரஹஸித்தமத்தனை. எதிலும் ப்ரமாணம்காட்டாமல் ஒருஅக்ஷரமாவது அடியேன் எழுதுவதுண்டா? பலராகத்திரண்டு எழுதுமிவர்களின் ப்ராமாணிகத்வத்தைப் பாருங்கள். தேசிகதிவ்யஸூக்தியையுமன்றோ இவர்கள் திரஸ்கரிக்கிறார்கள். ஸர்வாத்மநா அப்ராமாணிகமான விஷயங்களையே யெழுதிப் போதுபோக்குமிவர்கள் வீணாகப் பிறரை இகழ்வது என்ன ஸாஹஸமோ!

ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஐந்து விதமான ப்ரதிஷ்டைகளைச் சொல்லுமிடங்களில் ஸம்ஸ்தாபநா என்று ஒருவகை ஓதப்பட்டிருக்கின்றது. விஷ்ணுஸம்ஹிதையில் பதினைந்தாவது படலத்தில் ''ஸ்தா₂பநா(அ)ஸ்தா₂பநா சைவ ததா₂ ஸம்ஸ்தா₂பநேதி ச। ப்ரஸ்தா₂பநா ப்ரதிஷ்டா₂ ச ப்ரதிஷ்டா₂ பஞ்சதா₄ ஸ்ம்ருதா॥'' என்றுள்ளது. இங்ஙனமே நாரதீயபஞ்சராத்ரத்திலும் காணலாம். அவ்விடங்களுக்கு இவர்கள் பொருளுரைக்

குங்கால் எம்பெருமானைக் கொலை செய்கிற ப்ரதிஷ்டை யென்றே உரைப்பர் போலும்.

வேதத்திலும் பலவிடங்களில் ஸம்ஸ்தாபநமென்றும் ஸம்ஸ்தாப்யமென்றும் ஸமஸ்தாபயந் என்றும் ஓதப்பட்டுளது. இவர்கள் சொல்லுகிற அர்த்தம் ஓரிடத்திலும் கண்டதில்லை. ஸ்திரீகரணம் என்கிற அர்த்தமும் ஸமாப்தி செய்தல் என்கிற அர்த்தமுமே யுள்ளன. ஸமாப்தி செய்வதும் கொல்லப்படுவதும் பர்யாயமென்பரேல் அது பாமரபாஷிதம். ''ஶாஸ்த்ரஞ்ச பரிஸமாப்தம்'' என்று ஸ்ரீபாஷ்யத்தின் முடிவு. இதனால் 'சாஸ்த்ரம் கொலையுண்டது' என்றா சொல்லப்படுகிறது? ''ஷோட₃ஶதிநிவ்ருத்தா'' என்னுமாபோலே 'இவ்வளவோடு சாஸ்த்ரம் நிற்றல் பெற்றது' என்பதே அர்த்தம். ''லவணமென்றால் எருமைச்சாணியல்லவா'' என்னுமாபோலே இவர்களாகவே ஒரு இல்லாதபொருளை ஸித்தவத்கரித்துக் கொண்டு காவ்ப தோஷமென்றும் அச்லீல கீர்த்தநமென்றும் எழுதுவது பண்டிதகோஷ்டியில் பரிசு பெறாது.

2. ஈடுமுப்பத்தாறாயிரப்படியின் அரும்பதவுரையில் அனேக இடங்களில் அனேகவிதமான அபப்ரம்சங்கள் காணப்படுகின்றன. வடமொழியிலும் தென்மொழியிலும் விபரீதமாக ப்ரமித்து எழுதியவை அதில் உள்ளனவென்பதைப் பல ப்ராமாணிகர்கள் அறுதியிட்டே யுள்ளார்கள். அந்த அரும்பதவுரை எழுதியவர் ஆசார்ய கோஷ்டியில் சேர்ந்தவரல்லர்; மிகவும் பிற்பட்டவர். மணவாள மாமுனிகள் வரையிலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில்தான் ப்ராமாண்ய பூர்த்தியுள்ளது. பிற்பட்டவர்களின் க்ரந்தங்களில் உபபந்நமானவை மாத்திரமே உபாதேயம் என்பது அஸ்மதாசார்ய ஸித்தாந்தம். இது ஸர்வவிவேகி ஜநஸம்மதமுமாகும்.

ந்யாயபரிசுத்தியின் முதலில் ப்ரத்யக்ஷாத்யாயத்தில் — ''அதோ யாவதி₃ஹ யுக்தம் தாவது₃பஜீவ்யதே; நவமு₃ தடா₂க ஸ்ருஷ்டி(ஸ்த₂) வஜ்ஜோ பி₄ ஆக்ஷிப்₃ய ப₄ஜிவிஸ்த₂வமாஹி ஹிர₃வஜீவ்யதே'' இத்யாதியாக ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்திருப்பது மஹர்ஷிகள் விஷயத்திலேயே யன்றோ. ப்ரஹ்ம ஸூத்ரத்தில் வ்யாஸர் காட்டின வழியே இது. மஹர்ஷிகளின் வாக்குக்களையா இப்படி இழித்து

உரைப்பதென்று பரிதபிப்பாரைக் காணோம். ஆசார்ய ரல்லாதாருடைய உக்திகளில் உள்ள ஸ்காலித்யங்களை ப்ரகாணங் களில் எடுத்துரைக்க நேர்ந்து உரைத்தால் என்ன குற்றம்? ஸ்ரீ பாஷ்யகாரர் பட்டர் தேசிகன் போல்வாரான மஹான்களின் ஸ்ரீஸூக்திகளை அவலீலையாக ப்ரதிபதம் தூஷித்துக்கொண்டே போது போக்குமிவர், அர்வாசீநர்களான அரும்பதவுரைகாரர் களின் அவத்யங்களை உள்ளபடியே அடியேன் எடுத்துக்காட்டும் விஷயத்தில் பரிதாபம் காட்டுவது "ஸஞ்ஜதஸௌரிணீ ஸீதாவஸீவாஜேந தூஷ்யதி। ஹ்ருஷ்டாவாஜேகஜீவாதுஃ ராஜ்ஞஉ-த்ருஷ்யஹ்ருஷ்யதி." என்னுமாபோலே யிருக்கின்றது. வாத்ஸல்யவிஷயத்தில் "யஸ்ய வி்வாகாரீ" இத்யாதி ஸ்ரீஸூக்திகளைக் கொண்டிருக்கின்ற ச்ருதப்ரகாசிகையை "இடித்துத் தள்ளிவிடுவோம்" என்று கைகூசாமல் எழுதியுள்ளவிவர் வஸ்து ஸ்திதியை உரைக்கின்ற எம்மை இகழ்வது ஏற்குமோ? அதிகரண ஸாராவளி யின் சிந்தாமணி வியாக்யானத்திலேயே பல அவத்யங்க ளிருப்பதாக ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி ஸாதிப்பரென்று அவரது சிஷ்யர்கள் சொல்லி வருகிறார்கள். அது நயனாசார்யர் ஸாதித்ததன்று என்றும் அந்தஸ்வாமி ஸாதிப்பாராம். ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரத்தின் வியாக்கியானங்களிலும் இங்ஙனே சொல்லக்கூடிய அவகாசம் பெரிதுமுண்டென்று பெரியோர் பணிப்பர். விரும்பினால் அந்த அவத்யங்களை யெல்லாம் ஸ்பஷ்டமாகவே யெடுத்துக் காட்டுவேன். "புலிக்குத் தன்காடு புறங்காடு இல்லை" என்று இவர் எழுதுவது ஸத்யமாய் இவர் திறத்திலேயே இணங்கும். ஆசார்யர்களில் தேசிகன் மணவாள மாமுனிகள் வரையிலுள்ள பூருவர்களின் ஸகல ஸ்ரீஸூக்தி களையும் த்ரிகரண சுத்தியுடன் சிரஸா வஹிப்பவன் அடியேன். இவரொருவரே ஸ்வதந்திரமான சில கொள்கைகளைக் கைப்பற்றிக் கொண்டு, அதற்கிணங்காத ஸ்ரீஸூக்தி எந்த ஆசார்யருடையதாக இருந்தாலும் நிர்தாக்ஷிண்யமாய் பரமஜுகுப்ஸநீயமாய் உதறித் தள்ளுபவர். இப்படிப்பட்ட விவர் சில அர்வாசீநோக்திகளின் உண்மையான நிலைமையை எடுத்துரைக்கும் எம்மீது குறை கூறுதல் சில பாமரர்களுக்குத்தான் ப்ரசம்ஸநீயமாகும்.

ஸ்ரீமத் கரூர் ஸ்வாமி பரமபதித்து 60, 70, வருஷங்க ளன்றிக்கே நூறு வருஷந்தான் இருக்கட்டுமே. இருநூறு வருஷ

மாயின வென்றாலும் எமக்கு விப்ரதிபத்தி இல்லை.

தாவத்தா கிஜெஹா தஸ்ய வ-ஏவ-ாவாயெ-ஷு ஹணூதா।
ஸம்ஹவெசு? ஊஹஸ்து தத்ராஹா, காஜம் ஹெவஸ்து ஊஹாஊதிஃ॥
ஸஹஸ்ரகிரணீ தஸ்ய ஸ்யாநுஹெவக்ருதிக்ஷஊ।
ஸதேவ வஹு ஹ-ஏயாம்ஸ ஹரஞ்ஹா உவகாரகாஃ॥

ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள், வித்யாரண்ய ஸ்வாமிகள், அப்பய தீக்ஷிதர் முதலானோரும் உலகுக்கு மஹோபகாரங்களைச் செய்திருப்பவர்கள். இந்த உபகாரங்கள் உண்மையில் வாசாமகோசரம். அவற்றுக்காக அவர்கள் பக்கல் ஆசார்யத்வ ப்ரதி பத்தியை ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி தாமும் பண்ணக் காணோம். மைஸூர் அனந்தாழ்வானைக் காட்டிலுமா வேறொருவர் எம்பெருமானார் தர்சனத்திற்கு மஹோபகாரகராகத் தேறப் போகிறார்? க்ருதஜ்ஞதையைச் செலுத்தவேண்டா மென்பாராருமில்லை. தேவப் பெருமாளுக்கு ஆழ்வார் பாடலில்லை யென்கிற நிராதார துராக்ரஹத்தில் தலை நிற்பவர்கள் கரூர் ஸ்வாமியைப் பூர்வாசார்ய கோஷ்டியிலே நிறுத்தி (அல்லது, அவர்கட்கும் மேலான பதவியில் நிறுத்தி) ஆராதிக்க விரும்பினால் தாராளமாக ஆராதிக்கட்டுமே. திரியுங் கலியுகமென்று ஆழ்வாரருளிச்செய்ததற்கிணங்கப் பூர்வாசார்யர்களுக்குத் திரஸ்காரமும் ஆதுநிகர்களுக்குப் புரஸ்காரமும் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமே. ஹவிஷ்யத்யரோதுஹு என்றது அனுஷ்டானத்திற்கு வர வேண்டாவோ? எதிர் காலம் எப்போதும் எதிர்காலமாகவே யிருக்கலாகுமோ?

3\. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ப்ரமாணத்திரட்டின் ஆராய்ச்சி என்று அடியேன் வெளியிட்டிருக்கின்ற ஒரு ஸஞ்சிகையின்மீது திருவெழுத்துச்சாத்த ஆரம்பித்திருக்கிறார் ஸ்ரீகோபாலார்ய நண்பர். திருக்குடந்தையில் வாழும் ஸ்ரீ உ.வே. வி. கே. ராமானுஜாசார்ய ஸ்வாமிகள் மிகவும் மஹநீயரென்பதையும், அவர் திரு நக்ஷத்திரம் நிரம்பியவராய் மிகவும் அசக்தரான நிலைமையிலும் பல புஸ்தக வெளியீடுகளை இடைவிடாது செய்துகொண்டே நல்ல போது போக்குபவர் என்பதையும் மற்றும் அவரது பல புகழ்ச்சிகளையும் அடியேனே எழுதி வெளியிட்டிருக்கின்றேன். லோகோபகாரத்திற்

கென்று பெரும் பொருட் செலவு செய்து வெளியிடப்படுகின்ற அவரது புத்தகங்களில் பிழைகள் இல்லாதிருந்தால்தான் உண்மையான லோகோபகாரமாகும் என்றெண்ணியே அவரது பதிப்பொன்றில் ஸதாலீபுலாக ந்யாயமாகச் சில குற்றங் குறைகளை எடுத்துக் காட்டினேன். "கண் அடியோடு தெரியாத வயோவ்ருத்தராய் அஜாத சத்ருவான அந்தப் பெரியாருடைய பதிப்பில் இந்த யுவா அவத்யம் காட்டுவதைத் தெய்வம் ஸஹிக்குமா? உலகம் ஸஹிக்குமா?" என்று பாய்ந்து போகிறார் ஸ்ரீகோபாலார்யர். அந்த ஆராய்ச்சிப் புத்தகத்தின் முடிவில் (பக்கம் 14-ல்) அடியேன் வெளியிட்டுள்ள முக்கியமானதோர் விஜ்ஞாபனத்தைக் குறிக் கொள்பவர்கள் "மிகவும் யுக்தமும் ஆவச்யகமுமான ப்ரவ்ருத்தியே இது" என்று தலை துலுக்கி மெச்சுவார்கள்; அப்படியே பல பெரியோர் மெச்சுகின்றார்கள். அடியேன் எழுதியுள்ள விஷயங்களை நெஞ்சில் வாங்கிக்கொள்ளவும் வல்லரல்லாதார் வயிறெரிவதில் அடியேனுக்கு என்ன அவஸாதம்?

ஸ்ரீமத் வி. கே. ராமாநுஜார்ய ஸ்வாமிகள் வெளியிட்டுள்ள கீதாபாஷ்யவுரைப்பதிப்பின் முகவுரையில் (பக்கம் 18ல் புட்நோட்டில்) "ஒன்றில் குற்றமிருப்பதாக ஒருவர் எழுதினால் உண்மையைக் கண்டுபிடிக்கவேணு மென்று ஆசைப்படுகிறவர்கள் அதை நன்றாய்க் கவனிக்கவேணும்; தூஷித்ததாக நினைக்கக்கூடாது." என்று அழகாக எழுதியுள்ளது ஏனோ இவர்கண்ணில் தென்படவில்லை. அதே கீதாபாஷ்யப் பதிப்பில் (பக்கம 54ல்) *த்ரைகுண்ய விஷயா வேதா:* என்கிற கீதா ச்லோகத்திற்கு உரை யெழுதுகின்ற அந்தஸ்வாமி—

> "கும்பகோணம் முதலான பெரிய ஸ்தலங்களில் கூலிவேலை செய்கிறவர்களுக்காக கள்ளுக்கடைகள் இருக்கவேண்டியது. அப்படி இல்லாவிட்டால், கள்ளுஇல்லாவிட்டால் தாங்கமுடியாதவர்கள் கள்ளுக்கடை இருக்கும் ஊர்களுக்குப் போய், கும்பகோணத்தில்போல் தொழில் அகப்படாமல், உத்ஸவ காலத்தில் ஆராவமுதனை கருடவாஹனத்தில் எழுந்தருளப் பண்ணுகிற பாக்கியத்தையும், அதினாலுண்டாகும் புண்ணியத்தையும் இழந்து போவார்கள்."

என்று எழுதிவைத்திருக்கின்ற வார்த்தைகளை இந்த ஸ்ரீகோபாலார்யர் ஒரு ஸபையில் வாசித்துக்காட்டி "இப்படியும் ஒரு மஹான் எழுதுவாரா? பரமபரிசுத்தமான கீதாபாஷ்யத்தில், ஆராவமுதன் ஸந்நிதியில் கள்ளுக்கடை வைக்க வேணுமென்று க்ராம்யவார்த்தையைக் கைகூசாமல் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எப்படி எழுதினார்?" என்று உத்கோஷித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றி அடியேன் எழுத வந்தேனல்லேன்.

நன்றாக வெளிக்கண் தெரியப்பெற்றவரும் யுவாக்களில் தலைவரும் ஸுஜாத சத்ருவுமாகிய ஒரு மஹாநுபாவரைக் குறித்தே அடியேன் எழுதியிருக்கின்றேனென்பது இவர் கண்ணில் படாதது ஏனோ? பல வம்புதும்புக் கடிதங்களை ப்ரசுரஞ் செய்வதையே பொது போக்காகக் கொண்டிருக்குமவர் விஷய சர்ச்சைகளில் வெளிவராது பதுங்கி நிற்பது ஏனோ? வாவதூகராகிய கோபாலார்ய ஸ்வாமி தமது தொழில் முறைமையில் அனைவர்க்கும் ப்ரதிநிதியாக எழுந்தருள்கின்றார் போலும். பொறுமையை யொழித்த பண்டிதர்கள் ஒருகாலும் இவருடைய எழுத்துக்களில் ஈஷத்தும் மனங் கனியார்களென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன்.

இவர் அடியேனை நோக்கி எழுதும்போது (பக்கம் 51-ல்)— "எழுதத் தெரியும்படி ஈச்வரன் கொடுத்த சக்திக்கு அரும் பெரியோரை இகழ்வதில்தானோ விநியோகம்?" என்கிறார். அடியேனுடைய சக்தியானது அரிய பெரிய உலக வுபகாரங்களிலேயே இருபது வருஷமாக உபயோகப்பட்டுவருகின்ற தென்பதை உலகமறியும். எம்பெருமான் *ஸம்பவாமி யுகே யுகே* என்றபோது தன் திருவவதாரத்திற்கு மூவகைப் பயன்களை வெளியிட்டருளினன். அவற்றுள் மத்யஸ்தமாகக் காண்கின்ற பலன் ஸாதுக்களுக்கு ஆசம்ஸநீயமேயாகும். அதனை அவனடியார்களும் கொள்ள ப்ராப்தம். 'சடங்கர்வாயடங்கிட' இடையிடையே அடியேன் எழுதுகின்ற நூல்களும் விவேகிகளுக்கு ஹ்ருதயங்கமங்களே. "ஸ்வயம் தரிதுமக்ஷம: கிமபராநவௌ தாரயேத்?" என்று ஸ்ரீவேங்கடாத்வரி பணித்தபடியே தம்முடைய அவத்யங்களைப் பரிஹரித்துக்கொள்ள கில்லாதவிவர் அநாவச்யக—அஸாத்ய—ப்ரவ்ருத்திகளிலே தலையிட்டுக்கொள்வது ஏதுக்கு? நிற்க.

அடியேனுடைய திரட்டாராய்ச்சி நூலில் (பக்கம் 5-ல்) ‘‘அநியயாவி ஸம்ஸ்லேஷா உஹதேவ ஹி பாவகா:’’ என்பதற்குப் பொருளெழுதிய திரட்டுக்காரர் அவிபாவத்தை விட்டுப் பொருளுரைத்திருப்பது விபரீதார்த்தக மென்று காட்டியிருந்தேன். ‘அது ஏதோ கைப்பிசகினால் விட்டுப்போயிற்று’ என்று கோபாலார்யர் ஸமாதான மெழுதுகிறார். இது அழகியதே. இவ்வளவோடு நில்லாமல் ப்ரஸங்கங்களை அதிக்ரமித்துச் செல்வது அழகோ? ‘உசவா’ என்று அடியேன் எழுதியிருந்த ஒரு பதத்தில் தகாரஅிசுவமில்லையென்பதைப் பெரிய குற்றமாகக் காட்டியிருந்தவொரு வித்வானைத் தோள்மீதுகொண்ட விவர், அடியேனை ப்ராக்ருத விஷயத்திற்காகச் சிரமீதுகொள்ள வேண்டாவோ? தடஸ்த புத்தியுடன் வருவது உண்மையாயிருந்தால் அப்படியன்றோ வரவேணும். ‘தத்துவ பாகங்களைத் திருத்த வந்தாரோ இவர்’ என்று அடியேனை நோக்கிக் கேட்கின்றார். இவர் தம் திருவுள்ளத்தில் எதைத் தத்வ பாகமாக நினைத்திருக்கின்றாரென்று தெரியவேணும். தேசிகன் ‘‘அகாரஸஉய-நம்’’ என்று ஒரு க்ரந்த மருளிச்செய்தது எதற்காகவென்று இவரையே கேட்போம்.

“குயுக்தியால் வீண் வம்புக்காக” இத்தியாதி வார்த்தைகளை ஸ்ரீ கோபாலார்யர் அடியேன் திறந்து எழுதுவது தகும் தகும். ஏனெனில்; விஷய சர்ச்சைகளில் வாத்ஸல்ய விஜயத்வஜத்தினாலும் பரஉஂவேஉஂவிசுவபரஊய-ரசைக்ஷயினாலும் (வ்ராஜொஹ வ்யஜொஷயத்தினாலும்) இவரை நன்கு வாய்மாளப் பண்ணியிருக்கின்ற அடியேன் விஷயத்தில் இவர்க்குள்ள உத்வேகம் இப்படிப்பட்ட சொற்களை வெளியிட்டுத்தானே சாந்தி பெற வேணும். அந்தோ! என் செய்வர் பாவம் !!. அடியேனுடைய ஸஞ்சிகைகளைத் திருப்பித் திருப்பிக் கடாக்ஷித்தருளுகிறார். ஒரு அக்ஷரத்திற்கும் மறுப்புரைக்க வாய்திறக்கவும் வழியில்லை. “பிறகு விஸ்தாரமாக பதில் எழுதுவோம்’’ என்று அட்டைமீது வெளியிட்டுவிட்டுத் தமக்கு அவசியமல்லாத விஷயங்களிற் புகுந்து பரிதபிக்கிறார். ஏனோ இவர்க்கு இந்த விதி?

அபூர்வமாகவும் ரஸ்யமாகவும் பல விஷயங்கள் தாம் க்ரஹித்திருப்பதாக அபிமானிக்கிறார். அது வ்யர்த்தமான அபிமானமே.

யென்பதை இரண்டொரு விஷயங்களைக் காட்டி இங்கு விசதமாக்குகின்றேன். சென்ற வாரத்தில் இப் பெரியார்க்கு அடியேன் விடுத்திருந்த வொரு விண்ணப்பத்தில் ‘‘திவிஂகிஙு திவிஂமிஙு:’’ என்ற ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய ச்லோகரத்நத்தைக் குறிப்பிட்டிருந்தேன். அதன் நான்காவது பாதம் ‘‘நிவ்ருத்திஉவி யஉ-உத்நவதத்வ விநிக்ரஹா:’’ என்பது. இதற்கு அடியேன் ஒரு அர்த்தமும் எழுதியிருக்கவில்லை. ஆனாலும் தத்வவிநிக்ரஹா: என்பதற்கு, தத்வவித்துக்களான பாகவதோத்தமர்களால் செய்யப்படுகிற நிக்ரஹம் என்றே அடியேன் பொருள் க்ரஹித்திருப்பது.

இப்படியேதான் ஸம்ஸ்க்ருத வித்வான்களனைவரும் க்ரஹித்திருப்பதாகும். இந்த ஸ்வாமி அடியேனுக்கு விடுத்த உத்தர பத்திரிகையில் எழுதியுள்ளார்—“தத்வவித்துக்களை நாம் நிக்ரஹிப்பது என்று அர்த்தம் கொள்ளவேணும்; ஏனென்றால் நித்யம் அஜ்ஞாத நிக்ரஹர்களாகிய தத்வவித்துக்கள் நம்மை நிக்ரஹிக்க ப்ரஸக்தி யில்லாமையால் ‘தத்வித்துக்களால் செய்யப்படுகிற நிக்ரஹம்’ என்று பொருள் கொள்ள ப்ரஸக்தியே கிடையாது” என்று.

இவருடைய ரஸிகத்வத்தையும் ஸம்ஸ்க்ருத பாஷையின் சுவடறியுந் தன்மையையும் இஃதொன்றிலேயே விவேகிகள் கண்டு கொள்ளலாம். நிக்ரஹம் என்பது அநுக்ரஹத்திற்கு எதிரிடையான சொல். அநுக்ரஹம் செய்ய யார் அதிகாரிகளோ அவர்கள் தாம் நிக்ரஹம் செய்வதற்கும் அதிகாரிகளாவர். நீசர்களான நாம் மஹான்களை எப்படி அநுக்ரஹிக்க முடியாதோ அப்படி நிக்ரஹிக்கவும் முடியாதென்பது சொல்லவும் வேணுமோ? ஆசார்யன் சிஷ்யனை நிக்ரஹித்தானென்று வசநவ்யக்தியுளது. இங்ஙனம், சிஷ்யன் ஆசார்யனை நிக்ரஹித்தானென்று சொல்வதாக இவ்வுலகில் இது வரை எங்கும் கேட்டதில்லை. வேதத்திலும் ‘‘ஹோதாரம் நிக்ருஹ்ணாதி’’ போல்வன வாசகங்கள் பலவுள்ளன. உத்துங்க விஷயத்தில் அதமனுடைய அபசாரத்தை நிக்ரஹ சப்தத்தால் ஒரு விவேகியும் சொல்ல விரும்பான். இப்படியிருக்க இவர் மஹார்த்தம் கண்டுபிடித்து விட்டதாக அவ்ருஷ்டார்த்தமாகவே

எழுதித் தம்முடைய பரம பாண்டித்யத்தை ப்ரகாசப்படுத்திக் கொள்ளுகிறார். 'எல்லாம் தலைகீழ்' என்பது இவர் விஷயத்திலா? அடியேன் விஷயத்திலா? என்பதைத் தடஸ்தர்களே நிஷ்கர்ஷிக்கலாம். ஸ்ரீ தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் இவர் தலையிட்டு அவத்யமான அர்த்தங்களைச் செய்யவேண்டா என்பதை மீண்டும் கைகூப்பி வேண்டுகின்றேன்.

இங்ஙனமே மற்றொரு விஷயமும் பண்டித போக்யமாகக் காட்டுகின்றேன். காண்மின் கண்ணுடையீர்!. இப்போது இந்த ஸ்வாமி வெளியிட்டுவரும் வைராக்ய பஞ்சகவுரையில் (பக்கம் 29ல்) "நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சிந்ந மயா கிஞ்சிதார்ஜிதம் | அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் ||" என்கிற ச்லோகத்திற்கு அர்த்தமெழுதியிருக்குமழகைக் காணீர்;

> "என்தகப்பனாரும் நான்சொல்லப்போகும் என்னுடைய த்னத்தை ஸம்பாதித்தவர் அல்லர்; அவர் தகப்பனார் முதலியோர்களும் ஸம்பாதித்தது அல்ல."

என்று எழுதியுள்ளார். இது எந்த ஸ்ரீஸூக்திக்கு அர்த்தமோ அறியோம். தேசிகன் மூலத்தில் ப்ரயோகித்திருக்கின்ற நாஸ்தியும் நவ்வும் அத்யந்தாபாவார்த்தத்தில் ப்ரயுக்தங்களேயன்றி அந்யோந்யாபாவார்த்தத்தில் ப்ரயுக்தங்களல்ல. இது ரகுவம்சம் வாசிக்கிற ஒரு சிறு மாணுக்கனுக்கும் எளிதாகப் புலனாகும் விஷயம்.

'எனக்கு ஸ்வயமார்ஜிதமான தனமும் கிடையாது, பித்ரார்ஜிதமான தனமுங்கிடையாது' என்று சொல்வதன்றோ பூர்வார்த்தத்தில் உள்ளது. இவரெழுதுவது அப்படியில்லையே. "ஹஸ்திசைலாக்ரத்திலுள்ள தேவப்பெருமாளாகிற செல்வம் நான்படைத்ததுமன்று, என்தந்தை படைத்ததுமன்று" என்று எழுதுகிறாரே; இதற்கு இங்கு ப்ரஸக்திலேசமாவது உண்டாவென்று பாருங்கள். ஹஸ்திசைலாக்ரஸ்தாயியான வஸ்துவைப்பற்றிப் பூர்வார்த்தத்தில் ஸ்மரணமே கிடையாதே. தத்விஷயமான ப்ரஸங்கத்தைப் பூர்வார்த்தவுரையில் இவர் எதுக்குப் பண்ணுகிறார்? இதைவிட அஸமஞ்ஜஸம் வேறுண்டோ? இதற்கு இவர் என்ன சொல்லுவரென்றால் "பதவுரையில் ஸரியாக எழுதியிருக்கிறேனே" என்பர்; அது இவருடையதன்று என்பது குடந்தையில் ஏற்கனவே வெளிவந்திருக்கின்ற வைராக்யபஞ்சக வியாக்கியானத்தினால் விசதமாகும். அப்படிப்பட்ட பதவுரையைப் பார்த்து வைத்தும் இவர்க்கு விபரீதமான பொருளே தோன்றுகின்றதென்றால் இனி இவருடைய மேதாவிலாஸத்தைப்பற்றி நாம் விரித்துரைக்க வேண்டுவதுண்டோ? இது சிறிய விஷயமா, பெரிய விஷயமா, பாருங்கள்.

இவருடைய புத்தி ருஜுவான வழியில் புகுகிறதா? விபரீதமான வழியில்புகுகிறதா? என்று தெரிந்து கொள்வதற்கு இவ்விஷயமொன்றே $ போதுங்கிடீர். இப்படிப்பட்ட பரம ஹேயமான அர்த்தங்களை யெழுதிவிட்டுத் தமக்குமேல் ரஸமாகவுரைப்போர் உலகத்திலேயே கிடையாரென்று இறுமாப்புக் கொள்கின்றார். இது நிற்க.

அடியேனுடைய திரட்டாராய்ச்சியில்(பக்கம் 4ல்) "மூலத்தில் இல்லாத பதங்களைச் சேர்த்துக்கொண்டு அர்த்தமெழுதுவது" என்ற மகுடத்தின்கீழ் வ்யாகரணவித்வான்கள் சிரமேற்கொள்ள வேண்டிய ஒரு விஷயம் எழுதியிருக்கின்றேன். அதில் புகுந்து பேசுவதற்கு இவர்க்குச் சிறிதும் அதிகாரமில்லை. இவர் தாம் தம்மை ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரராக நினைத்திருக்கையாலே எந்த விசாரத்திலும் தாராளமாகப் புக விரும்பி இதிலும் வாய்வைத்து மஹாகோலாஹலங்கள் செய்துள்ளார். இங்கு விஷயமென்னவென்றால் ஆழ்வானுடைய ஸ்ரீ வைகுண்ட ஸ்தவத்தில் "ஸ்வைரேவ தை: பரிஜநைஸ்ஸஹ ஸங்கமீய" என்றதற்கு "நித்யஸூரிகளுடன் எப்போது நான் சேருவேன்" என்று திரட்டுக்காரர் எழுதியிருந்த பொருள் வியாகரணத்திற்குச் சேராது; 'எப்போது' என்பதற்கு வாசகமான பதம் மூலத்தில் இல்லை; கொண்டு கூட்டுவோமென்றாலும் மேலுள்ள க்ரியாபதமானது ஆசீர்

$ ஸ்ரீகோபாலார்யருடைய பதிப்புக்களில் இப்படிப்பட்ட அஸம்பத்த லேகநங்கள் ஆயிரக்கணக்காக வுண்டென்பதை ஸமயம் வாய்க்குங்கால் விரிவுக்குஅஞ்சாமல் நிரூபிப்பேன். முன்ஸஞ்சிகைகளிலும் இங்ஙனே பல நிரூபித்தேயிருக்கின்றேன்.. எதற்கும் அநுத்தரமே இவர்க்கு சரணம்.

லிங்ரூபமாதலால் அதன் சேர்க்கையை ஸஹிக்கவேமாட்டாது— என்பது அடியே னெழுதியிருந்தது. இங்கும் கைகூப்பவேண்டுவது தவிர வேறு கதியில்லை. அப்படியிருந்தும் இவர் ஸமர்த்தநம் பண்ண வருகிறார். எங்ஙனே யென்னில்; திரட்டுக்காரர் பதவுரை கூறவந்தவரல்லர்; தாத்பர்யமே உணர்த்த வந்தவர்; ப்ரகரணத்திற்குப் பொருந்த உரைக்கவேண்டு மாதலால் கீழ் ச்லோகங்கள் சிலவற்றில் [கஷா கஷா] என்று ஆழ்வானே கூறியிருப்பதால் அதிமாத்ரம் த்வரையோடே கூடியிருக்கின்ற அவருடைய திருவுள்ளத்திற்குச் சேர இப்படித்தான் உரைக்கவேண்டும்—என்கிறார். இதுதான் * கும்பகர்ணே பகாரோஸ்திவாக்யார்த்த மென்பது. ஸ்தோத்ரக்ரந்தத்தில் ப்ரகரணமென்று ஒன்றுண்டோ? ஒவ்வொரு ச்லோகத்தில் ஒவ்வொருவிதமான கீர்த்தநம். இதில் பூர்வோத்தரஸமந்வயக்ரமம் யாதொன்றும் கிடையாது. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலும் ஒரு பாசுரத்தில் அளவு கடந்த த்வரை விளங்கும்; அடுத்தபாசுரத்தில் சிறிது ஆறுதலான பேச்சு வரும். இங்ஙனே ஸ்ரீஸூக்தி முறைமைகள் பலவிதம். உள்ள சப்தத்திற்கு நாம் உள்ளபடி அர்த்தம் உரைக்கவேண்டுமத்தனை. அப்படி உரைக்கவில்லை என்றால் அது அஜ்ஞாநத்தையும் அந்யதாஜ்ஞாநத்தையும் காட்டுமேயல்லது வேறொன்றையுங் காட்டாது. மூலவக்தாவுக்கு த்வராதிசயம் விவக்ஷிதமானால் அதைக் காட்டக்கூடிய சப்தப்ரயோகம் அவர்க்குத் தெரியாதோ? இவர்களுக்குள்ள அஸாமர்த்தியத்தை மூலவக்தாக்கள் பேரிலும் ஏறிடப் பார்ப்பது மிகவியப்பே. ஆழ்வார்கள் ஒரேபதிகத்தினுள் "அடையப்பெறுவேனோ?—அடையக்கடவேன்—எப்போது அடைவேன்?—அடைந்துவிட்டேன்—அடையாமல் எப்படியிருப்பேன்?—அடைவதற்கு வழியுண்டோ?—நானுவது அடையப் போகிறதாவது—அடையப் பெறலாகுமா?" என்றிப்படிப்பட்ட வசநவ்யக்திகளைப் பாசுரங்களில் அமைத்திருக்கக் காண்கின்றோம். இங்கு எதைக் கொண்டு எதன் பொருளை மாற்றுவது? மாற்றுதற்கு யாருக்கதிகாரம்? ஒரு ஆசிரியரும் மாற்றவுமில்லை. "திரட்டுக்காரர் ஆராய்ச்சியின்றியே எழுதிவிட்டார்" என்று ஒருவார்த்தையில் முடிக்க வேண்டிய விஷய மிது. 'மனம் போனபடி நாம் எதையும் எழுதிவிடலாம்' என்று

ஸ்ரீகோபாலார்யர் துணிவு கொள்ளுகிறார் பாவம்! அடியேனுடைய வாழ்நாளில் அதை அவர் ஜரிப்பித்துக் கொள்ள முடியாதென்பது திண்ணம் திண்ணம்.

இந்த ப்ரஸங்கத்தினிடையில் (பக்கம் 54ல்) ஸ்ரீகோபாலார்யர் "காந்திஸ்தவோத்வரஹாதவரஸ்ய ஸ்ரீ: வாயேத வாரணயிதும் கிம் சக்ஷுஷோசேத்? என்ற ஸ்ரீவைகுண்டஸ்தவ ஸூக்திக்கு அர்த்தமெழுதியுள்ளார் காண்மின்;—

"உம்முடைய காந்திபானது என்கண்களுக்குப் பாரணை செய்ய சக்யமாகுமோ?" என்று. இதை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்கட்கு இதில் ஒரு அவத்யமும் தோன்றாது. உண்மையாகவுள்ள குற்றம் அடியேனுடைய ஸ்தூலத்ருஷ்டியிலேயே தோன்றித்தீரும். இங்கே 'சக்யமாகுமோ?' என்று இவர் எழுதியிருப்பது ஒவ்வாது. 'காந்தியானது சக்ய மாகுமோ? என்றால் என்ன அர்த்தம்? சக்தம் என்று ஒரு பதம். சக்யம் என்று ஒரு பதம். இரண்டுக்கும் பொருள்வாசி பெரிதுமுண்டு. அர்த்தத்தில் பதம் சக்தம்; பதத்திற்கு அர்த்தம் சக்யம். காரணவஸ்து சக்தம்; கார்யவஸ்து சக்யம். இந்த நிரூபணங்கள் நுண்ணறிவோடு கூடிய சாஸ்த்ரவாஸனையில்லாதார்க்குச் சிறிதும் ரஸிக்கமாட்டாது *ஸ்ரோதவ்யஸ்துவிநீதேந கோவிஸாநயேந * என்று கொண்டு இப்படிப்பட்டவிஷயங்களை ஸமயங்களில் எழுதிவருகின்றேன்.

"காந்தியானது கண்களுக்கு த்ருப்திசெய்ப சக்யமாகுமா?" என்கிற கோபாலார்யருடைய வாசகம் ஸர்வாத்மநா அஸங்கதம். 'காந்திபானது கண்களுக்கு த்ருப்தி செய்ய சக்தமாகுமா? என்ன வேணும். "ஸக்ஷ்ரதவிநவஸ்ரஹ: கணவாஹீ தாஷிநீதாஸம் மாணார். சம்பெறா நம்பத்வௌரவிரஹாயிம்மிதம் வவந:॥" என்பது சாகுந்தளநாடகத்தில் காளிதாஸருடைய ஒரு ச்லோகம். இதனை ஊன்றி நோக்குக. "ஸ்வாமிநு ஸயாசக்தி சக்ஷுஷாம் நஸக:" என்பது தேசிக திவ்யஸூக்தி. சக்யபத ப்ரயோக ஸ்தலத்தையும் சக்த பத ப்ரயோக ஸ்தலத்தையும் காட்டிவிட்டேன். உபாத்யாயர் என்னை உத்தீர்ணனுக்குவதற்கு சக்தரா?

என்று கேட்கலாமே தவிர சக்யரா? என்று கேட்கலாகாது. அப்படியேதான் இங்கும்.—வார்த்தை சொல்லத் தெரியாதவர்கள் பலர் பெரியவர்களிடத்தில் மிகவும் மரியாதையாகப் பேசுவது போல் நினைத்து "ஸ்வாமியைக் கொஞ்சம் அபசாரப்படுத்துகிறேன், க்ஷமிக்கவேணும்" என்பர். இப்படிப்பட்ட அவிவேகிதரமணீய வார்த்தைகள் நமது கோபாலார்யருடைய சுவடிகளில் பலகோடி நூறாயிரம்.

அந்தஸ்வாமிக்கும் அடியேனுக்கும் வாதிப்ரதிவாதிபாவம் ஏற்பட்டிருப்பதால் அது காரணமாக இங்ஙனே அடியேன் எழுதுவதாய்ச் சிலர் நினைக்கலாம். காரணம் அதுவே யெனினும், அடியேன் எழுதும் விஷயம் ஒவ்வொன்றும் ப்ரளயத்திலும் அசைய மாட்டாதென்பது அறிஞர்கட்கும் குறிப்பிற் கொள்ளத்தக்கது. ‹ வாஸாம்ஸிவஹ்ரஹம்தேகம் நவாவயதி ஸாமராः ›। தமேவ ஊஸவிவிதம் ஹ்ருநவ்ருநஜவி ஸ்ருவஃ॥

'சக்யமாகுமோ' என்கிற சொல் மிகச்சிறிதேயாயினும் நுண்ணறிவாளர்க்கு இது மிகப் பெரிய விஷயம். யாதயம்மென்ன? ஸ்ருதயாயம்மென்ன? எதற்கு எங்கே அந்வயம்? சாப்த போதம் எப்படி? என்று வினவப்புகுந்தால் *சுவஸாகுணாம் வளராணிகெஷாஃ சுயம்யெம்வ நதாஸவரி* என்றாற் போன்ற விடை யொன்றையே நமது நண்பர் அளிக்கவல்லவரென்பதில் என்ன ஸந்தேஹம்.

இந்த ப்ரஸங்க மத்யத்திலேயே ஸ்ரீ கோபாலார்யர் ஸாவாநி என்று ஒரு லோட்ரூபம் ஆழ்வான் ப்ரயோகித்திருப்பதாக (பக்கம் 54-ல்) எழுதுகிறார். இப்படிப்பட்ட ஒரு பத ஸ்வரூபம் லோகத்திலேயே கண்டதில்லை. (வேதத்திலும் கண்டதில்லை.) ஸர்வாத்மநா அஸத்தான ஒரு பதத்தை இவர் ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தியில் நுழைக்கப் புகுவது மிக்க ஸாஹஸம். ஸ்துதி என்று சொல்லுகிறோமாகையாலே ஸ்துவாநி என்றுதான் லோட்ரூபமிருக்கவேணுமென்று இவர் க்ரஹித்துவிட்டார். முதலெழுத்து போகட்டும்; முடிவெழுத்தாவது சுத்தமோ என்று பார்த்தால் அந்தோ! அதுவு

மில்லை. இவர் காட்டும் ஆழ்வான் ச்லோகத்தில் வயம் என்பது கர்த்ரு பதமாதலால் அது எங்ஙனே ஒட்டும்? இத்தனை ஆராய்ச்சியில்லாத மஹாநுபாவர் அடியேனை கர்ஹிக்கப் புறப்பட்டதை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும். (இங்கே உள்ள ரூபம் ஸ்துவாஊ—ஸ்தவாம என்பதே.)

4. இனி, மேலே செல்வோம். திரட்டாராய்ச்சியில் "அநாவச்யகமான பிழை திருத்தங்கள்" என்ற தலைப்பின் கீழ்ச் சில நுட்பங்கள் காட்டியுள்ளேன். அவற்றையும் பழிக்கப் புகுந்திருக்கின்றார் திரட்டுக்காரர் கூப்பீடு என்றவொரு பதத்தை முதலிலே யெழுதிப் பிறகு பிழைதிருத்தத்தில் அதைக் கூப்பாடு எனத் திருத்தியுள்ளார்; இரண்டு சொற்களும் சுத்தமே யாதலால் திருத்தம் வேண்டா என்பது அடியே னெழுதியுள்ளது. இங்கே கோபாலார்யருடைய ஸமாதான மென்னவென்றால், இரண்டு சொற்களும் சுத்தமேயானாலும் திரட்டுக்காரர்க்கு உத்தேச்யமான பதம் கூப்பாடு என்பதேயாதலால் அது தோன்றவே திருத்தஞ் செய்யப்பட்டது என்பதாம். இதுவும் விபரீதம். சுத்தா சுத்த பத்ரிகை என்றும் பிழைதிருத்தம் என்றும் மகுடம் வைத்து அசுத்தம் என்கிற வகுப்பின் கீழ் கூப்பீடு என்ற சொல்லை யெழுதி சுத்தமென்கிற வகுப்பின்கீழ் கூப்பாடு என்ற சொல்லை எழுதியிருக்குமவர்க்கு இவர் ஏறிடும் ஸமாதானம் உபகாரகமாகுமோ? திண்ணையில் படுத்திருந்தவன் வேணுமென்றே கீழே யிறங்கியிருந்தாலும் 'உறக்கத்தில் நழுவி விழுந்திட்டேன்' என்று சொல்லி ஸமாதானம் பண்ணலாம். கீழே படுத்திருந்தவன் மேலே காணப்பட்டால் மேற்குறித்த விதமான ஸமாதானம் சொல்லலாகுமோ? நம் கோபாலார்யர் அப்படியும் சொல்லலாமென்று கற்பிக்கிறார் போலும். ஹந்த! கிஊஸாயஸ்ரூம் வாவஊகுகாஹ்ருமணாநாஃ?

ப்ரஸ்துதஸ்தலத்தில் ஆராய்ச்சியில் நாம் எழுதியுள்ளவை தமிழ்ப்பண்டிதர்கள் தலைமேற்கொள்ள வுரியவை. இரண்டு பாஷையிலும் நாடீஜ்ஞான மில்லாதவர்கள் ஏதோ எழுதப் புகுவதும் அதற்கு நாம் விடையளிக்கப் புகுவதும் மிக்க பரிதாபம். "அரஸிகெஷு கவிகவநிவெதநம் ஸிரஸி ஊஷிவ ஊஷிவ"

என்ன ப்ராப்தம். "திரட்டுக்காரர் உண்மையான பிழைகளுக்குத் திருத்தம் பதிப்பித்திருந்தால் அழகாயிருக்கும்; இனி அங்ஙனம் பதிப்பிப்பதானுல் பிழைதிருத்தம் மாத்திரம் இருபது முப்பது பாரங்களுக்காகும்" என்று நாம் ஆராய்ச்சியில் (பக்கம் 10ல்) எழுதியிருந்ததைக் கண்ட ஒரு தமிழ் மகாவித்வான் "உண்மையைக் கூசாது வெளியிட்டவுமக்கு என் தலையல்லால் கைம்மாறிலேன்" என உவந்து திருமுகமருளியுள்ளார்.

"கண் தெரியாத ஒரு க்ரந்தகர்த்தா அச்சிடும் புஸ்தகத்தில் 'ன'வுக்கும் 'ந'வுக்கும் வ்யத்யாஸத்தை யெடுத்து எழுதுவதினழகை என்னென்று சொல்லுவது?" என்று தொடங்கி (பக்கம் 55ல்) ஸ்ரீகோபாலார்யர் எழுதியிருப்பதும் தவறு. க்ரந்த கர்த்தா கண் தெரியாதவரென்பது நமக்குத் தெரியும். அது நமது ஆராய்ச்சிநூலிலும் குறிப்பிடப்பட்டேயுளது. அந்த ஸ்வாமி ஒருவரை ஸஹாய பூதராக வைத்துக்கொண்டு காரியம் செய்து வருகிறுராதலால் அந்த வ்யக்தி உண்மையான வித்வானுக இருக்க வேணுமென்றும், பல அவத்யங்களுக்கு அவகாசம் கொடுத்து எழுதுகின்றவரைத் துணைகொண்டு செய்யும் காரியம் உலகுக்கு உபகாரகமாகாததோடு ஸத்ரூபத அபகாரகமும் ஆகிறதே! அங்ஙனம் ஆகாதபடி நோக்கிக் கொள்வது நன்று—என்றும் நாம் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறேமே.

"தமிழ்ப்பாஷையில் இலக்கணம் பொருந்திய இலக்கிய நூலாக வைத்துக் கொள்வதற்குத் திரட்டுக்ரந்தம் எழுதப்படவில்லையே! இதன்மேல் எதுக்குக் குற்றம் குறை கூறவேணும்?" என்கிறுர் ஸ்ரீகோபாலார்யர். இலக்கணக் குற்றம் கூறுவதை நாம் நெஞ்சிலும் நினைக்கவில்லை. இல்லாத விஷயத்தை இவர் எதுக்கு ஏறிட்டுக் கொண்டு இகழ்கிறுர்? உண்மையில் பிழையல்லாதவற்றைப் பிழையாக ப்ரமித்துப் பிழை திருத்தம் பதிப்பிக்கப்பட்டிருந்ததனுல் ப்ரஸங்காத் சிறிது இலக்கணத் தத்துவம் காட்டினேம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்களுக்குப் பொருள் விபரீதமாக எழுதப்பட்டுளதென்பதை யன்றே நமது ஆராய்ச்சிநூல் காட்டுவது. அவ்விஷயத்தில் ஸமாதானம் சிறிதும் ஏறவில்லையே.

5. ஜாதஸ்நேஹ தவ விச்வஜநீ ஸத்தா நித்யம்ப்ரியா ஸத்த்வ கேவல தேஹி நித்யா:" என்ற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியில் இரண்டாவது பாதத்திற்குத் திரட்டில் உள்ள பொருள் பொருந்ாதென்று எழுதியிருந்தேன். இதற்கு ஸ்ரீகோபாலார்யர் எழுதுகிற விநோதத்தை ஆராய்வோம். "நித்யம் ப்ரியா:— எப்போதும் ப்ரியமாயிருக்கின்றன" என்பது திரட்டின் விவரணம். அது அர்த்தமில்லாத வார்த்தை யென்றுர், நித்யஸத்த்வஸேவ ரஸஹித்தா: என்றே உரைக்கவேணு மென்றும் நாம் எழுதியிருந்தோம். இங்ஙனம் நாம் காட்டியிருக்கிற பொருளையே கோபாலாசார்யஸ்வாமி தாமும் நெடுநாளாக க்ரஹித்திருந்ததாகவும் இப்போது ஆராய்ந்த பிறகு மற்றொருவிதமான அர்த்தமும் சொல்லப் பொருந்துகின்றதாகவும் எழுதுகிறுர். இங்கே விவேகிகள் ஜாகரூகர்களா யிருக்கவேணும். 'மற்றொரு அர்த்தம்—மற்றொரு அர்த்தம்' என்று இவர் எழுதுகிறுரே, அந்த மற்றொரு அர்த்தம் என்ன வென்று பாருங்கள். ஒன்றுமில்லை. அடியேன் எழுதியுள்ள அர்த்தத்தையேதான் அவரும் முடிக்கிறுர். 'எப்போதும் ப்ரியமாயிருக்கின்றன' என்றாலும் 'நித்யத்வேந அபிமதங்கள்' என்றாலும் தார்பரியம் ஒன்றுதான் என்று தலைக்கட்டி யுள்ளார். இப்படிப்பட்டவிவர் "மற்றொரு அர்த்தமும்" என்று எழுதுவது சேருமோ? "விவரணத்தில் சப்த பேதமே யன்றி அர்த்த பேதம் அடியோடு இல்லை" என்று இவர் எழுதியிருக்கவேண்டும். இரண்டு அர்த்தம் என்றே இவர் தவருக க்ரஹித்து அநர்த்தம்செய்கிறுர். இனி, 'இரண்டுவகையான அர்த்தங்களையும் நான் ஸ்பஷ்டமாக நிரூபித்தே யிருக்கிறேனே' என்று இவர் சொல்லவருவர். அது ப்ரமமாகத்தான் முடிவுபெறும். ஒருகாலும் இரண்டுவகை தேறமாட்டாதென்பது விவேக குசலர்களுக்கு விசதமேயாகும். அதுநிற்க.

திரட்டுக்காரர் எழுதியுள்ள பொருள் பொருந்திவிடுகிறதா இல்லையா? என்று விமர்சிப்போம். ஒருநாளும் பொருந்தாது. ஏன்? கேண்மின்;—"நித்யாஹ்வாஹிதங்களான" என்கிற பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திக்கு இவர் என்ன அர்த்தம் செய்கிறு

ரென்றால், நித்யபதத்தை இச்சையில் ஸாக்ஷாத்தாக விசேஷணமாக்கி நித்யமான [எப்போது முள்ளதான] இச்சையினாலே ஸித்தங்கள்—என்று பொருள் கொள்ளுகிறார். சாஸ்த்ர வாஸனையுள்ளவர்கள் இங்ஙனம் கொள்ளார்கள். இச்சா என்கிற பதம் ஸாகாங்க்ஷபதம். என்ன வென்கிற இச்சை? என்று கேள்வி பிறந்தே தீரும். 'எப்போதும் நான் இச்சிக்கிறேன்' என்று நிஷ்ப்ரகாரகமான வார்த்தையே ஒட்டாது. இன்னபடியாக இச்சிக்கிறே னென்று சொல்லித் தீரவேண்டும். எப்போதும் இச்சைக்கு விஷயமென்றால், எவ்வகையான இச்சை? என்று ஆகாங்க்ஷை உதிக்கே தீருமாதலால் அதற்கு விடையளிக்க வேறொரு பதத்தைக் கொண்டாகவேண்டும். யாருடைய அர்த்தத்தில் க்லேசமென்பதை இப்போது தெரிந்து கொள்க. 'ஸ்வநித்யவஸ்தூநி நித்யவஸ்தூநி' என்றால், எப்போதுமுள்ள புத்தி என்று எந்த மேதாவி அர்த்தம் கூறுவர்? „ஸநாதநநாதவாஸிய–" இத்யாதிகளைக் காணலாமே. நித்யேச்சா என்றால் ஜந்ம நித்யஸ்ஸ்ரீநித்யாநவ்யவஸாயாதிகா – நித்யாவஸ்தாகாரிகா – இச்சா என்று அர்த்தம் கொள்ளலாகுமேயன்றி 'தொடர்ந்து வருகிற இச்சை' என்று கொள்ளலாகாது. சப்தத்திற்கு இந்த சக்தி இல்லையென்று நாம் சொல்லவில்லை. ஆகாங்க்ஷையை அகற்றுமலிருப்பதாலும், அதை அகற்றுவதற்கு வேறொருபதத்தை இழுத்துப் போட்டுக்கொள்ள வேண்டியிருப்பதாலும் அங்ஙனம் கொள்ள வொண்ணாதென்கிறோம். 'நித்யமென்கிற இச்சை' என்றல்லது வேறுவிதமாக உரைக்க இடமில்லை. ' அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்கள் " என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரஸூக்தியே இந்தத் தெளிவை நன்கு பிறப்பிக்கும். உத்தவத்ரூமஹாவஸுமையிலுள்ள இச்சையையன்றோ ஸ்வாமி தேசிகன் அநித்யேச்சையென்கிறார். 'அநித்ய மென்கிற இச்சை' என்றாலன்றிப் பொருந்தாதே.

ஸ்ரீபாஷ்யத்தில் கடைசி அதிகரணத்தில் ஏதோ அருளிச் செய்யப்பட்டிருப்பதாக அநுவதித்து எழுதியுள்ளார் ஸ்ரீகோபாலார்யர். இங்கு "குணங்களின் நித்யத்வமானது பரமபுருஷனுக்கு

நித்யேஷ்டம்" என்று ஸ்ரீபாஷ்யத்திலுள்ளதாக இவர் எழுதுகிறார். இந்த ஒருவாக்யமே நமக்குப்போதும். 'குணங்கள் பரமபுருஷனுக்கு நித்யேஷ்டம்' என்றில்லையே. இச்சையில் விஷயபூதம் நித்யத்வமா? குணமா? என்று பாருங்கள். நித்யத்வமென்று நாம் சொல்லுகிறோம். ஸ்ரீபாஷ்ய ஸூக்தியும் அப்படியேயிருப்பதாக இவரே காட்டுகிறார். இதனால், இந்த விசாரம் இன்னதென்றே இவர்க்குப் புலப்படவில்லை யென்பது நன்கு விளங்கவில்லையா? தமக்கு ப்ரதிகூலமானதைத் தாமே எடுத்துக்காட்டுகிறாரே.

" நித்யமாயிருக்கட்டுமென்று எப்பொழுது ஸங்கல்பிக்கிறது? புதிதாகவுண்டாகும் பொருளைப்பற்றி எப்படி ஸங்கல்பிக்கலாம்? " என்று அற்புதமான சிலவினாக்களை ஸ்ரீகோபாலார்யர் வெளியிட்டுள்ளார். புதிதாக வுண்டாகும் பொருள் எது? என்று தெரிந்து கொண்டு விடையளிப்போம்.

மேற்குறித்த ஆழ்வான் ஸ்ரீஸூக்தியில் நித்யம் என்கிறபதம் இரண்டாம் பாதத்தின் முதலிற் போலவே மூன்றாம் பாதத்தின் முதலிலுமிருப்பதால் இரண்டிடத்திலும் ஒரேவிதமாக இந்தப் பதத்தின் பொருளைக் கொள்ள வேண்டாவோ? ஏருஷா ஜஷாஷ்டாக்ஷிகங்களில் வெவ்வேறாக ப்பொருளுரைக்க முடியுமோ?—என்கிறார் கோபாலார்யர். இதுவும் அஸங்கதம். நித்யம் என்கிற பதம் இரண்டிடத்திலும் ஸமாநம் என்பதை மாத்திரம் இவர் பார்த்தாரே யல்லது அதற்கடுத்த பதம் வெவ்வேறாக வுள்ளதே யென்பதைப் பார்த்தாரல்லர். ஸமபிவ்யாஹ்ருத பதாநுகுணமாகவன்றோ அர்த்தம் செய்யவேண்டும். ஸ்ரியா: என்ற பதமும் ஸ்வஶேஷவ்ருத்தேர் நிஜவிபவா: என்ற பதமும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருக்குமாகில் நித்யம் என்ற பதமும் அப்படியேயாகும். தவிரவும், இங்கு இவர் த்ருஷ்டாந்தம் தார்ஷ்டாந்திகம் என்ற சொற்களை ப்ரயோகிப்பதும் அஸமஞ்ஜஸதமம். பாதாரவிந்தம்—முகசந்த்ரன் என்கிற இடங்கள் போலவன்று இங்குள்ளது. பூர்வார்த்தத்தால் நித்யவஸ்து ஸாமாந்ய லக்ஷணம் கூறி, உத்தரார்த்தத்தால் லக்ஷ்யவிசேஷே ஸமந்வயம் காட்டினபடி. சாஸ்த்ரீய மர்யாதையைச் சிறிது மறியாமே

கைபோனபடி யெல்லாமெழுதுவது அறிஞர்க்கு அழகன்று. சுவஶிஷ்டஃவஶிஷ்டாஃ ஸத்யாஸவஸ்யகதாயாஃ.

6. "ஸ்தோத்ரம்" என்கிற பட்டருடைய முக்தகத்தில் "ஶ்ரீதாஶிஷ்ட ஐஐ விஜிதஃ" என்றவிடத்திற்குத் திரட்டுக்காரர் கொண்ட அந்வயமும் பொருளும் தவறு என்றெழுதியிருந்தோம். அது தவறுதான் என்றார், ஏதோ அநவதாநத்தினால் எழுதிவிட்டார் என்றும் ஸ்ரீகோபாலார்யர் எழுதுகிறார். இது ப்ராமாணிகஸரணி. இப்படித்தான் ஒவ்வொரு விஷயத்திலும் இவர் எழுதவேண்டியவர். ஆயினும் பலவிடங்களில் ஆத்மாவை வஞ்சிக்கிறார். இங்கு உண்மைக்கு இசைந்ததைபற்றி உவப்போம். ஆனாலும் இவர் அவ்வளவோடு நில்லாமல், வேறொரு ரஸ்யமான பொருள் இருப்பதாகவும் 33-ஆண்டுகட்கு முன் அப்பொருளை ஒரு மஹாவித்வான் உபந்யஸிக்கத் தாம் கேட்டதாகவும் விவரித்திருக்கிறார். மிகவும் ரஸமான பொருளையும் அந்வயத்தையும் நாம் நழுவவிட்டதாகச் சொல்லுகிறார். அடுத்த ஸஞ்சிகையில் இந்த பட்டர் ஸ்ரீஸூக்தியை நாம் விரிவாக விவரிக்கப்போகிறோமாதலால் இங்கு ஸங்க்ரஹித்துவிடுகிறோம். "வஂவொவவநஊஶதஃ" என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தில் (வஂவொ) என்று தனியாகப் பிரித்துவிட்டு, வவநஊஶதம் என்று எடுத்துக்கொண்டு "அலைமேலலை இடிமேலிடி என்னுமாபோலே காற்று மேல்காற்று குட்டிக்காற்று என்கிறது" என்று பரமரஸ்யமாக உபந்யஸித்த ஒரு ப்ரபலபண்டிதருடைய உபந்யாஸத்தையே இவர் 33-வருஷங்களுக்குமுன் கேட்டருளினர் என்பதை ஸத்யமாய் நாம் நம்புகிறோம். இங்குத் திரட்டுக்காரர் எழுதினது தப்புதான் என்று இவர் நிர்விவாதமாக ஒப்புக்கொண்டானபிறகு இங்கு நமக்கு உபரதியே உரியது. 'ரஸமான' என்று இவர் கையால் எழுதினால் அது பரமவிரஸமாகவே யிருக்குமென்று விவேகிகள் திடமாக நிஷ்கர்ஷித்துக் கொள்வார்களாதலால் அந்த வைரஸ்யத்தை நிரூபிக்க நாம் ப்ரயாஸம்கொள்ளத் தேவையில்லை.

7. திரட்டாராய்ச்சியில் (பக்கம் 3ல்) "அநபேக்ஷிதங்களை யெழுதுவது" என்ற தலைப்பின் கீழ், *ஶவஶ்யாநவஸ்ய யதாவஂ ஶவஞஉயிரஹதி* என்கிற மஹா பாரத ச்லோகம் அவ்வளவு மாத்திரமே உதாஹரிக்கப்பட்டுள்ளவிடத்திற்கு ஜிஜ்ஞாஸுக்களுக்கு விபரீதார்த்தத்தை ப்ரத்யாயநம் பண்ணக்கூடிய விவரணமுள்ளது என்று நாம் எழுதியிருந்தோம். இதற்கு ஸ்ரீ கோபாலார்யர் இப்போது என்ன ஸமாதானம் எழுதியுள்ளாரோ இதை முன்னமே நாம் எடுத்துக்கொண்டு (அதில் பக்கம் 4ல்) கண்டித்திருக்கிறோம். ப்ரமாணத் திரட்டிற்குப் பொருளுரைப்பதென்றால் ஒரு நியமம் அவசியமிருக்கவேண்டும். மூலத்தில் எவ்வளவு பாகம் உதாஹரிக்கப்பட்டுளதோ அவ்வளவுக்கு மாத்திரமே பொருளுரைப்பது—என்கிற நியமமாவது இருக்கவேண்டும். அல்லது, ப்ரமாணத்தின் ஸ்வல்ப பாகம் மாத்திரமே மூலத்தில் உதாஹரிக்கப்பட்டிருந்தாலும் எவ்வளவு அம்ஶத்திற்கு விவரணம் எழுதினால் வாசிப்பவர்களுக்கு உபகாரமாகுமோ அவ்வளவு அம்ஶத்திற்கும் பொருளுரைப்பது—என்கிற நியமமாவது இருக்கவேண்டும். இரண்டில் ஒரு நியமமும் இந்தத் திரட்டுக்காரர்க்கு இல்லை யென்பதே ஆராய்ச்சியில் நன்கு நாம் நிரூபித்திருப்பது. உண்மையில் இது பெரிய குற்றம். க்ரந்தகாரருடைய இஷ்டந்தான் நியாமகம் என்று சொல்வது பொருந்தாது. அச்சுக்கூடத்தைக் கொள்வதும் காகிதத்தைக் கொள்வதும் அவருடைய இஷ்டத்தைப் பொறுத்திருக்கலாம். க்ரந்தத்தின் அமைப்பில் ஒழுங்கீனம் ஏற்பட்டால் அது திருத்திக்கொள்ள வேண்டிய தவறுதான். இக்குற்றத்தை ஸ்ரீ கோபாலார்யர் ஒப்புக்கொண்டு, ஆனால் இது இவருடைய குற்றமன்று, இவர்க்கு முந்தியே ஒரு ப்ரமாணத்திரட்டு வெளியிட்டிருக்கின்ற இவரது ஆசார்ய ஸ்வாமியின் குற்றம் என்று காட்டவருகிறார். 'பரம்பரையாகவே நாங்கள் தவறிப்போகிறவர்கள்' என்று சொன்னால் இரங்கவேண்டியது அவசியமே. ஆதலால் நாமும் இங்கு இரக்கங்காட்டி நிற்கின்றோம். வாவதூகர்களின் வல்லமை விசித்திரமே.

ஒருமுக்ய விஜ்ஞாபநம்.

நிகழும் யுவஹு சித்திரை மாதம் முதலாக ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமி அடியேனுடைய க்ரந்தங்களின்மீது வெளியிட்டுள்ள தூஷணா ஸஞ்சிகைகள் ஆறு. இந்த ஆறு ஸஞ்சிகைகளிலுமுள்ள விஷயங்களை அடியேன் அலசியலசி இவருடைய லேகனங்கள் ஸர்வாத்மநா அஸங்கதம் — அபஹாஸ்யம் — அநாதரணீயம் — அவிவேகித ரமணீயம் — ரஸலேசவிவர்ஜிதம் என்பதைக் கையிலங்கு நெல்லிக்கனிபோல் காட்டியாயிற்று. ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி அடியேனெழுதுகிற ஸமாதாந ஸஞ்சிகைகளின்மீது ஒரு அக்ஷரமும் எழுதவில்லாமல் மேலே மேலே ஏதேனும் வெவ்வேறு விஷயங்களை எடுத்துக் கொண்டு தூஷணைகள் எழுதி வந்தாலும் விஷய சர்ச்சைகளில் அடியேன் தளர்ச்சியடைவேனல்லேன். ப்ராமாணிக ஸரணியில் அந்த ஸ்வாமியின் எழுத்து எள்ளளவும் ஓங்காதென்பதை உடனுக்குடனே அடியேன் காட்டியே நிற்கின்றேன். இன்னமும் அவர் அடியேனை உத்தேசித்து ஏதேனும் எழுத விரும்புவாராயின், இது வரையில் (சென்ற வைகாசி மாதம் முதலாக) அடியேன் வெளியிட்டுள்ள ஸஞ்சிகைகளுக்கு லக்கம் வாரியாக விடையளித்துவிட்டு மேலெழுத்திற் செல்கவென்று கைகூப்பி வேண்டப்படுகிறார்.

இடையிடையே ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமிக்கும் அடியேனுக்கும் கடிதப் போக்குவரத்தும் நடந்துகொண்டிருக்கின்றது. அடியேன் அவர்க்கு என்ன எழுதுகின்றேனென்பதை அவர் தாமே வெளியிட்டுக்கொள்க. அவர் அடியேனுக்கு எழுதுவது என்னவென்றால்,

> “முன்னாடியே நான் எழுதி அச்சிடுவேதற்கு அனுப்பிவிட்டேன்; அச்சிட்டும் ஆய்விட்டது; அதிலுள்ள தோஷங்களை மாத்திரம் க்ஷமித்துக்கொள்ள வேண்டியது; இனி எழுதுவதெல்லாம் திருவுள்ளத்திற்குப் பாங்காகவே யிருக்கும்.”

என்று இவ்விதமாகவே பலகால் எழுதி வருகிறார். ஏற்கனவே இந்த ஸ்வாமியின் க்ஷமாப்ரார்த்தநா பத்திரிகைகள் இரண்டு மூன்று அச்சாகி வெளிவந்திருக்கின்றன. இப்போது ஸமீபகாலத்திலும் (20—10—35) அப்படிப்பட்ட பத்ரிகை மீண்டும் கிடைத்திருக்

கின்றது. இவற்றால் இந்த ஸ்வாமியின் அற்புதமான ஆத்மகுண பரிபூர்த்தி வெளியாகின்றதென்பது வாஸ்தவம். மிகவும் மஹநீயரான அந்த ஸ்வாமி நீசனேன் நிறையொன்றுமிலேன் திறத்தில் அத்தகைய திருமுகங்களை அருள்வது தகாது. கல்யாணகுண மிகுதியினால் அருள்கின்றாரென்பதை அடியேனும் அறிந்தவனே. அந்த ஸ்வாமியைச் சார்ந்தவர்கள் பலர் ‘எதிரிக்கு ஒரு பத்ரிகையும் தேவரீர் எழுதக்கூடாது; க்ஷாமணா பத்ரிகை அடியோடு எழுதக் கூடாது’ என்று வெகு நிர்ப்பந்தங்கள் செய்தபோதிலும் எதையும் அந்த ஸ்வாமி பொருட்படுத்தாமல் ஸஹஜஸௌஜந்யத்தினால் அடிக்கடி க்ஷாமணா பத்ரிகைகளை அநுக்ரஹித்து வருகின்றார். அவர் அச்சிட்டு வெளியிடுகின்றவற்றுக்கும் அடியேனுக்கு அவர் விடுக்கும் ஸ்ரீமுகங்கட்கும் ஸம்பந்தலவலேசமு மில்லாமலிருப்பதுபற்றியே அடியேன் மிக வருந்துகிறேன். ‘தெரியாமல் முன்னாடியே யெழுதி அச்சிட்டுவிட்டே’னென்று ஒருதரம் எழுதினால் அழகாயிருக்கும்; அதவா இரண்டு தடவையும் எழுதட்டும். பலகால் அப்படியே யெழுதிக்கொண்டிருந்தால் அர்த்தமில்லாமற் போகிறதல்லவா? வாஸ்தவமாய் அவருடைய சுவடிகளுக்கும் அர்த்தமில்லை, கடிதங்களுக்கும் அர்த்தமில்லை. என்பதே தாஸனுடைய தீர்மானம்.

ஸ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தி பத்ரிகையை நடத்தத் தொடங்கினபிறகு, ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமி என்ன தூஷணைகள் எழுதினாலும் அவற்றை நாம் பொருள்படுத்தவே வேண்டாம் என்று திண்ணிய உறுதிகள் செய்து கொண்டாலும், உலகுக்கு வழிகாட்டியான அந்த ஸ்வாமியே இத்தகைய ப்ரவ்ருத்திகளை போக்யமாகக் கொள்ளும்போது இவற்றைப் பரம போக்யமாகக் கொள்ளவேண்டியதன்றோ நமது கடமை என்று பாவியேனுக்குத் தோன்றிவிடுகிறது.

ஸ்வரூபஸித்தமான நைச்யத்தை அடியேன் எவ்வளவு அநுஸந்தித்துக்கொண்டாலும், சாந்திரஸத்தில் எவ்வளவு குதூஹலங் கொண்டாலும் ஸ்ரீ கோபாலாசார்யஸ்வாமியின் அத்யந்தம் அஸம்பத்தமான லேகனங்கள் ப்ரக்ருதி பாரவச்யத்தை உத்தேஜநம் செய்கின்றமையால், ‘இப்படிப்பட்ட அநாவச்யக ப்ரவ்ருத்திகளில் விரக்திகொள்ளவேணும்’ என்று அநேக மஹநீயர்கள் அடியேனுக்கு

நியமித்தருள்வதை நிறைவேற்றுவதற்கு அவகாசமில்லையாகிறது. ஆனால், ஸம்ப்ரதாயத்தில் ஐகரஸ்யத்தை அழகாக அனுபவிக்க வேணுமென்று அடியோம் கொண்டிருக்கின்ற ஆவலுக்கு ஒரு குறையும் நேராது. எந்த ஸம்ப்ரதாயத்தையும் எந்த ஆசார்யரையும் எந்த ஸ்ரீஸூக்தியையும் அவசமாகவுங்கூட இகழமாட்டோமென்பது ஸத்யம்.

மற்றொரு விஜ்ஞாபநம்.

உபயாவது [illegible]மென்றும், அது சிறந்த பெருங்குணமென்றும் பட்டர் முதலான ஆசார்யர்கள் அருளிச் செய்திருப்பதை தூஷித்து ஸ்ரீகோபாலார்யர் எழுதின ஸஞ்சிகையின் மீது அடியேன் மறுப்பு வெளியிட்டுப் பல மாதங்களாயின. கோபாலார்யருடைய ஒவ்வொரு வார்த்தையும் ப்ரமாணவிருத்த மென்பது அதில் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அந்தஸ்வாமி அடியேனுடைய ஸஞ்சிகைக்கு விடையளிக்காமல் ஸ்ரீ வடகரைஸ்வாமியின் ஒரு ஸ்ரீமுகத்திற்கு விடையளிப்பதாக ஏதோ விரிவாய் எழுதி வெளியிட்டு வருகின்றார். ஸ்ரீபாஷ்யத்தில் அந்த அதிகரணத்தில் அப்படியிருக்கிறது, இந்த அதிகரணத்தில் இப்படியிருக்கிறது—என்று எதையேனும் மனம்போனபடியெல்லாம் எழுதி வருகின்றார். எம்பெருமான் ஆநந்தமயன் என்பதையும் ஹேயப்ரதிபடன் என்பதையும் திருப்பித்திருப்பி எழுதுகிறார். இதுதவிர வேறொரு அக்ஷரமும் அவர் எழுதுவதில்லை. இதை யாரும் மறுக்கவில்லையே. இவர் கூறுகிற துராக்ஷேபங்களையெல்லாம் முன்னமே அநுவதித்துக் கண்டித்து பட்டரும் நம்பிள்ளையும் ஸாரமாக அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகளைப் பன்முறை நாம் எடுத்துக் காட்டியிருந்தும் அவற்றில் கண் செலுத்தாமலும் அதைப்பற்றி ஸ்வாபிப்ராயம் சிறிதும் காட்டாமலும் வீண்வம்பளப்புகளினால் கோபாலார்யர் பல ஏடுகளை நிரப்பிவருவது ஆர்க்கு ரஞ்ஜகமோ?

விஶஸ்ஞீயோ விஷய: கீத்ருஶிதோ விசார்யதாம் ।
யதாதஶா ஶிவஸ்து ஸௌரம் மோவார்யோ விஜ்ரும்பதே ॥

வ்யாமோஹப்ரசமௌஷதத்தின்

மூன்றாவது பகுதி முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமி
வைபவபரிஷ்கார பரிசிஷ்டம்.

ஸ்ரீ காஞ்சீ அய்யா ஸ்ரீ கிருஷ்ணதாதாசாரியர்ஸ்வாமியால் எழுதப்பட்டு வேதாந்த தீபிகையில் பிரசுரமாகி வரும் "ஸ்ரீகிருஷ்ணதாதார்ய மஹா தேசிக சரிதம்" என்கிற வியாஸம் விசாலமான ஹ்ருதயத்துடன் எழுதப்படவில்லையென்பதையும், பல வகையான பொய்க்கதைகளைக் கல்பனை செய்து பாமரஜந ப்ராமகமாக எழுதப்பட்டதென்பதையும் ஏற்கனவே நாம் நன்கு நிரூபித்திருக்கிறோம். "ஸ்ரீமத்திருப்புட்குழிஸ்வாமி வைபவ பரிஷ்காரம்" என்கிற நமது நூல் வெளி வந்த பிறகும் மேற் குறித்த அய்யா ஸ்வாமி தமது துராக்ரஹத்தை அகற்றிக்கொள்ளமாட்டாமல் அநாவச்யகமான தப்பு ஐதிஹ்யங்களை வீணாகக் கல்பித்தெழுதி ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமிக்கு அதிமாத்ரமான அகௌரவத்தையே ஸ்தாபிக்கின்றாரே! என்கிற அநுதாபம் ப்ராமாணிகர்களின் திருவுள்ளத்தில் குடிகொண்டுளது.

சென்ற புரட்டாசிமாதத்தில் வெளிவந்த வேதாந்த தீபிகையில் அவர் எழுதியுள்ள கதைகள் பெரும்பாலும் பொய்யுரைகள் என்பதை ப்ராமாணிகர்களான பல பெரியோர்கள் பகர்கின்றார்கள். அன்னவர்களின் உக்திகளை அவலம்பமாகக்கொண்டு யாம் சில பரமார்த்தங்களை ஈண்டு நிரூபிக்கின்றோம். ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமி ஸந்நிதியில் நாநா ஸம்ப்ரதாயஸ்தர்களும் ஸாமாந்ய சாஸ்த்ரங்களை அதிகரித்துக்கொண்டிருந்தார்கள். அநேக ஸ்தலங்களில் மஹாவ்யாபகர்களாக எழுந்தருளியிருக்கின்ற ப்ரஸித்த வித்வச்சிகாமணிகளெல்லாரிடத்திலும் நாநாமதஸ்தர்கள் ஒன்று கூடி ஸாமாந்ய சாஸ்த்ரங்களை அதிகரிப்பதுண்டு. மைஸூரில் எழுந்

தருளியிருந்த கஸ்தூரி ரங்காசார்யர்ஸ்வாமி, திருப்பதியில் எழுந்தருளியிருந்த திருமலைஅனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமி, காஞ்சியிலெழுந்தருளியிருந்த வித்வத் ஸிம்ஹமான குன்றபாக்கம் ஸ்வாமி, முதலான பல ஸுப்ரஸித்த மஹா வித்வான்களின் ஸந்நிதியில் இத்தகைய ஸம்பவம் உலகமறிந்ததே ஸாமாந்ய சாஸ்த்ரங்களை யார் எவ்விடத்தில் அதிகரித்தாலும் விசேஷ சாஸ்த்ரங்களான ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளை ஸம்ப்ரதாய ப்ராப்தர்களான தம்தம் ஆசார்யர்கள் பக்கலிலே அதிகரிப்பார்கள்.

திருக்குடந்தையில் சதுச்சாஸ்த்ரகல்பதரு என்றெழுந்தருளியிருந்த அம்மாஸத்ரம் சேஷாசாரியர்ஸ்வாமி தம்மிடத்தில் வாசிக்க வருகின்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரையும் , ஸ்வரூபக்ரந்தங்களையும் தம்மிடத்திலேயே ஸேவிப்பதாக ப்ரதிஜ்ஞை பெற்றுக்கொண்டே சாஸ்த்ரபாடங்களை அதிகரிப்பிக்கிற வழக்கமென்பது ப்ரஸித்தம். இவ்விதமாகவே ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியும் தம்மிடத்தில் ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் பயிலும் தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் தாமே ஸ்வரூபக்ரந்தாசார்யராகவும் இருக்க வேணுமென்று மிக்க குதூஹலம் கொண்டிருந்தவர் போலும்.

இந்த ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் ஒரு யதியினிடம் சென்று ஏதோ சில க்ரந்தங்களை அவிழ்த்துக் கட்டி சாஸ்த்ரார்த்தம் கொண்டாடி விட்டு ஊருக்குத் திரும்பி யெழுந்தருளினார். அப்போது பெருமாள்கோயில் வடவண்டை மாடவீதியில் எழுந்தருளியிருந்த (ஜடப்ரோல்ஸம்ஸ்தாந மஹா வித்வான்) கோயில் கந்தாடை அண்ணன் ரங்காசாரியர்ஸ்வாமி ஸந்நிதியில் வியாகரண சாஸ்த்ரத்தை அதிகரித்துக்கொண்டே ஸ்ரீ பாஷ்ய சிந்தனையும் இந்த ஸ்வாமி செய்து வந்தார். உபநிஷத் பாஷ்யங்களும் அந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே ஸேவித்து வந்தார். ஸ்ரீ பெரும்பூதூர் எம்பார் ஸ்வாமி என்று ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்வாமி (பூர்வாச்ரமத்தில்) பெருமாள்கோவிலில் எழுந்தருளியிருக்க அந்தஸ்வாமி ஸந்நிதியிலே ந்யாய மீமாம்ஸைகளில் க்ரோடபத்ரங்களை அதிகரிக்கும்போது உபயவேதாந்த ரஹஸ்ய க்ரந்தங்களையும் கூடவே சிந்தனை

செய்து வந்தார். இவ்வகையாலே தென்னாசார்ய ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் தமக்கு சுத்த பரம்பரையிலேயே கிடைத்ததாகச் சொல்லி அந்த ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்வகீய வித்யார்த்திகள் சிலர்க்குத் தாமே ஸ்வரூபக்ரந்த ப்ரவசநமும் செய்தருள வேணுமென்கிற ஆசையை ஆவிஷ்கரித்தருளினாராம்.

அவர்களும், உண்மையில் இந்த ஸ்வாமி ஸதாசார்யஸந்நிதானத்திலே ஸ்வரூபக்ரந்தசிந்தனைகள் செய்து போந்த வைலக்ஷண்யத்தைக்கண்டு இவருடைய ஆசையை ஒருவாறு தலைக்கட்டி வைக்கலாம் என்று நினைத்திருக்கையில், இந்த ஸ்வாமி பேரருளாளன் ஸந்நிதியில் தர்மகர்த்ருபதவியை வஹித்துப் பலவகையானவிஷமங்களைச்செய்துகொண்டு காலங்கழிக்கையில், ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கின்ற மணவாளமாமுனிகள் திவ்யமங்கள விக்ரஹத்திற்கு[அபீதிஸ்தவத்திலே ஸ்வாமிதேசிகன் ஸாதிக்கிறக்ரமமாக] ஒரு அவத்யத்தை விளைவித்து, ந்யாயாலயத்திலும் சென்று "தேவப்பெருமாள் ஸந்நிதியில் மணவாளமாமுனிகளின் உத்ஸவவிக்ரஹம் ஒருநாளும் கிடையாதென்று அகோரப்ரமாணம் பண்ணுவேன்" என்று சொல்லி ந்யாயாதிபதிகளின் திரஸ்காரமொழிகளைப் பெற்று, "யஸ்ய ஸாஹஂ நவபெஷ்த்தா" என்றச்லோகத்தின் உத்தரார்த்தப்படியே எழுந்தருளியிருந்தவராதலால் தம்முடைய ஆசை நிறைவேறுவதற்கு அவகாசமற்றவராயினர்.

மணவாளமா முனிகள் ந்யாயாலயத்தில் வெற்றி பெற்று ஸந்நிதிக்கு எழுந்தருளினபின் ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி மஹத்தான அநுசயத்துடனே ஸந்நிதிக்கெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து "விண்ணுளார் பெருமாற் கடிமை செய்வாரையும் செறும்ஐம்புலனிவை, மண்ணுளென்னைப் பெற்றால் என் செய்யா" என்கிற பாசுரத்தை உரக்க உத்கோஷித்து கெடும்போது கண்ணுங் கண்ணீருமாயிருந்து அபசார க்ஷாமணம் செய்து கொண்டு அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ-உ-வே ஈச்சம்பாடி நரஸிம்ஹா சாரியர் ஸ்வாமி முதலான ஸ்வமித்ரவர்க்கங்கள் திருவடிகளிலும் விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து "ப்ராக்ருதி பாரவச்யத்தாலே நேர்ந்த அபசாரத்தைத் திருவுள்ளத்திலே பொருள் படுத்தாமல் பொறை

கொண்டு இப்பாவியேன் விஷயத்தில் பண்டு போலவே திருவுள்ள முகந்திருக்கவேணும்" என்று பரமவிநயத்தோடே ப்ரார்த்தித் தருளினர். இத்திருப்புட்குழிஸ்வாமி பரலோகப்ரீதியும் சாஸ்த்ர விச்வாஸமும் போர உடையவராகையாலே திருநாட்டுக்கெழுந் தருளும்படியான ஆஸந்நதசையிலே அந்தரங்கரானவரை அழைத்து "ஆசார்யத்வ பூர்த்தியுள்ள மணவாளமாமுனிகள் பக்கலிலே கோர மான அபசாரங்களைச் செய்திருக்குமிப் பாவியேனுக்குப் பரகதியி லே போர ஸம்சயம்வர்த்தியா நின்றது: ஏற்கனவே நிஷ்க்ருதிகள் செய்து கொண்டேனாகிலும், செய்த அபசாரிதம் சாலவும் அனந்த தாகையாலே இந்நிலைமையில் நெஞ்சு தளும்பாநின்றது., ஸந்நிதியில் திருவாராதனமானவாறே மணவாள மாமுனிகளின் தீர்த்தப்ரஸா தம்கொணர்ந்து தந்தருளி என்னை ஆச்வஸிப்பிக்கவேணும்" என்று சிரமேற் கரங்குவித்து ப்ரார்த்தித்து அப்படியே பெற்றுப் பரமபத த்திற் கெழுந்தருளினர் என்று ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. அழகிய மணவாள ராமாநுஜஜீயர் ஸ்வாமி ஸ்ரீகுன்றபாக்கம் ஸ்வாமி முதலானர் பலகாலும் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

ஸகல சாஸ்த்ர ப்ரவீணராய் எழுந்தருளியிருந்த ஈச்சம்பாடி நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி மணவாளமா முனிகள் ஸந்நிதியிலே உபய வேதாந்த ஸாரங்களான உபந்யாஸங்களைப் பலகாலும் செய்த ருள்வார். ஒருநாள் ஆழ்வார் திருவீதி ப்ரதக்ஷிணமாக எழுந்தரு ளிக்கொண்டிருந்த ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமி ஸ்ரீ நரஸிம்ஹா சாரியர்ஸ்வாமியின் திருமிடற்றோசையைக் கேட்டு மாமுனிகள் ஸந்நிதியினுள்ளே யெழுந்தருளித் திருவோலக்கத்திலே வீற்றி ருந்து உபந்யாஸ ஸுதாஸ்வாதநம் செய்தருளா நிற்கையில் "[illegible] ||" என்னும்படியான நிலைமையை எய்தி மூன்றுமணி காலம் உபந்யாஸ அமுத மொழி களைத் திருச்செவி சார்த்திக் கொண்டிருந்து முடிவில் எழுந்தி ருந்து "நானும் பல சாஸ்த்ரங்கள் கற்றேன், இதிஹாஸ புராணங் களும் வாசித்தேன்; அருளிச்செயலும் ஓதினேன்; ஈடு முப்பத் தாறாயிரமும் ஸேவித்தேன்; இரண்டு வார்த்தைகளைக் கோத்து

அழகாகச் சொல்ல அல்பமும் பாக்யம் பெற்றிலேன்; தர்க்க கர்க் கசங்களான விஷ வாக்குக்களை ப்ரலாபித்துக்கொண்டு போது போக்கிக் கிடவாநின்றேன்; இது என்ன ஸ்ரீ ஸூக்தி கங்கா ப்ரவாஹம்! * முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும் தத்திப்பதித்தாற்போல் ஸகல சாஸ்த்ர ஸாரார்த்தங்களையும் ஒருங்க விட்டு அம்ருத வர்ஷம்போலே அருளிச் செய்தவிவை என்னே! என்னே!!" என்று விஸ்மயஸ்திமிதராய்ப் பேசி நிற்க, ஸ்ரீ நரஸிம்ஹாசார்யஸ்வாமியும் "[illegible]" என்கிற யதிராஜஸப் ததி திவ்ய ஸூக்தியை யெடுத்துக்கொண்டு, எம்பெருமானார்க்கும் மணவாளமாமுனிகளுக்குமுள்ள ஒற்றுமை நயத்தையும் உபபா தித்துக்கொண்டே ஒருமணி காலம் உபந்யஸித்து, "காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்" என்றும் "பல்லியின் சொல்லும் சொல்லாக் கொள்வதோவுண்டு பண்டு பண்டே" என்றும் சொன் னப்போலே அடியேனுடைய இளைய புன் கவிதைகளும் ஸ்வாமி திருவுள்ளத்திற்கு இனிமை தருவது வியப்பன்று; மாமுனிகளின் திவ்ய ஸூக்திகளிலே சிந்திப்போன அர்த்தங்களிவை காணீர்! என்று விண்ணப்பித்து நிற்கையில், ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமியும் "[illegible]" என்று ஸஞ்ஜயன் அநுஸந்தித்த நிலைமை பாவியேனுக்கும் வாய்க்கும்படி ஸ்வாமி ஸந்நிதியிலே ப்ரார்த்தித்து * [illegible]* இவ்வளவு க்ருபை செய்தருளவேணும்—என்று பிரார்த்தித்து எழுந்தருளினர்.

ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே தர்க்க சாஸ்த்ரம் அதிகரித்து வித் வானாய் சடகோப நிலய பாடசாலையில் ப்ரதாநாத்யக்ஷராக எழுந் தருளியிருந்த பரவஸ்து வேங்கடாசார்யஸ்வாமி பரமஸாதுவாகை யாலே (திருப்புட்குழி) ஸ்வாமி பக்கலிலே தேவதா ப்ரதிபத்தி பண்ணியிருந்தவர். ஸ்வாமி சோதிவாய் திறந்து எது ஸாதித்தா

னும் அதுதான் சாஸ்த்ரார்த்தம், அதுதான் பரமார்த்தம் என்று விச்வஸித்திருந்தவர். இப்படி யிருக்கையில், ஸ்ரீ ஸ்வாமி ஸத்ஸம்ப்ரதாயார்த்த தூஷணமாகச் சில க்ரந்தமெழுதிச் சில சிஷ்யர்களுக்கு ப்ரவசநம் செய்துகொண்டிருக்க எதிர்த் திருமாளிகையில் ஸிம்ஹம்போலே எழுந்தருளியிருந்த குன்றபாக்கம் ஸ்வாமி நேரில் எழுந்தருளி வாக்யார்த்தம் நடத்தி மறுவாய் திறக்க வழியில்லாதபடி செய்து போருவர். இங்ஙனே பலபல நாள் நடந்து செல்லுமாம். நடக்கும்போதெல்லாம் ஸ்ரீ ஸ்வாமியின் திருமுகமண்டலம் கதிரவனைக்கண்ட குமுதம்போல் நிற்கும்படியையும், இந்த நிலைமையின் பரிஹாரார்த்தமாகவே திருமாளிகையையும் விட்டு வேகவதியோரத்திலே குடிலமைத்துக் கொண்டு வஸிக்க நேர்ந்தபடியையும் கண்ட ஸ்ரீ பரவஸ்து வெங்கடாசாரியர் ஸ்வாமி ஒரு நாள் (திருப்புட்குழி) ஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியிலே தண்டன் ஸமர்ப்பித்து நின்று அஞ்ஜலிஹஸ்தராய் "ஸ்வாமிந்! தேவரீரை ஒரு அவதார புருஷராகவே அடியேன் ப்ரதிபத்தி பண்ணியிருப்பது: ஸாம்ப்ரதாயிக அர்த்த நிர்வாஹங்களிலே குடிலமான மார்க்கத்தை விட்டு ருஜுவான மார்க்கத்திலே திருவுள்ளம் சென்றால் பொன்னுக்கு மணம் சேர்ந்தாற்போலே இத்தனை போக்யதையும் பரிமளிக்கும்படியாயிருக்குமே; மநஸ்ஸாக்ஷ்யத்திற்கு மாறுதலாகச் சில வார்த்தைகளை ஸாதித்தருளுகிறாப்போலே அடியேனுக்குத் தோன்றினபடியால் இவ்வளவு விஜ்ஞாபிக்கலாயிற்று; க்ஷமித்தருள வேணும்" என்று விண்ணப்பித்தாராம். அதற்குத் திருப்புட்குழி ஸ்வாமி சிறிதும் சீற்றங் கொள்ளாமல் புன்னகை செய்து கொண்டே 'வெங்கடாசார்யரே! நம் பேரருளாளன் அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதனென்று பேர்பெற்றிரா நின்றான்; அவன் திருவடி வாரத்திலே ப்ரார்த்தியும்' என்று நியமித்தருளினாராம்.

ஒருநாள் குன்றபாக்கம் ஸ்வாமி பேரருளாளனை மங்களாசாஸநம் செய்தருளுவதற்குத் திருவத்திமாமலையில் எழுந்தருள, ஸ்ரீமத் திருப்புட்குழி ஸ்வாமி பெரிய பெருமாள் ஸந்நிதாநத்திலே சில ஸ்ரீ வைஷ்ணவர்களுக்காக அத்ருஷ்டார்த்தம் செய்தருள்கின்றாராய்க் கதவடைத்து நிற்கையில், பெருமாள் ஸேவைக்காக நெடும்போது

காத்துக்கொண்டிருந்த குன்றபாக்கம் ஸ்வாமி, உள்ளே காரியத்தை முடித்துக்கொண்டு வெளியில் எழுந்தருளின திருப்புட்குழி ஸ்வாமியை நோக்கி 'இன்று ஸ்வாமி ஸந்நிதியிலே ஒரு பெரிய ஸந்தேஹம் சமிப்பித்துக்கொள்ள வேண்டியவனாயிரா நின்றேன், திருவுள்ளமாகுமோ?' என்ன, திருப்புட்குழிஸ்வாமியும் 'தேவரீருக்கு அடியேன் என்ன ஸந்தேஹ சமநம் செய்யப்போகிறேன்; விஷயம் என்ன?' என்று கேட்க; 'இப்போது தேவரீர் நடத்தின உபாயாநுஷ்டாந விஷயந்தான்' என்று குன்றபாக்கம் ஸ்வாமி ஸாதிக்க; அதைக்கேட்ட திருப்புட்குழி ஸ்வாமி 'ஏதோ எங்கள் ஸம்ப்ரதாயத்திலே ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகன் காலம் முதலாக இங்ஙனே அநுஷ்டாநம் நடந்து போருவதாகக் கேள்வி; இதில் விசாரம் எதுக்கு? — நியமிக்க வேணும், விடை கொள்ளுகிறேன்' என்று சொல்ல; விவேகியான ஸ்வாமி அப்படி ஸாதிக்கலாகாது; நிரூபித்து அருளிச்செய்யவேணும்' என்று குன்றபாக்கம் ஸ்வாமி ஸாதிக்க; அப்படியே ஆகட்டும்: இப்போது அவகாசமில்லை; நாளைய தினம் ஆலோசிப்போம்' என்று திருப்புட்குழி ஸ்வாமி ஸாதித்து எழுந்தருளிவிட்டார்.

பிறகு ஒருநாள் பேரருளாளன் திருவீதிப் புறப்பாட்டில் திருமுற்ற வெளியிலே இவ்விரண்டு ஸ்வாமிகளுக்கும் இதுவிஷயமான அனைவரும் கூடி ஸ்ரீ ஸமக்ஷமாக, மூன்று நாள் வாக்யார்த்தம் நடந்து முடிவில் ஸ்ரீமத் திருப்புட்குழிஸ்வாமி "இந்த அநுஷ்டாநத்தில் ப்ரமாணோபபத்தி இல்லையென்றாலும் 'யஉஜ்ஜுஸயேஃ ஞூஜாணூ' என்று கொண்டு யாம் அநுஷ்டித்துப் போரத் தடையில்லையே" என்று ஸாதித்தாராம். அது கேட்ட குன்றபாக்கம் ஸ்வாமி "ப்ரமாணமில்லையென்றபோதே இது யஉஜ்ஜுஸயமுமன்று என்பது ஸித்தமாகவில்லையோ?" என்ன, திருப்புட்குழி ஸ்வாமி வாதுபராஜிக் குறிப்பான சில வார்த்தைகளை அருளிச்செய்து எழுந்தருளிவிட்டாராம்.

அப்போது நடந்த வாக்யார்த்தத்தில் ஸாரமான சிறிது அம்சம் பின்வருமாறு:— [ஸ்ரீ-உ-வே. விரக்தி பாஷ்யகாரர்ஸ்வாமி ஸங்க்ரஹித்தருளினபடி.]

குன்றபாக்கம் ஸ்வாமி :—சரணாகதியின் பதிவ்ரதா ஸஹகாரா ந விரோதமாக ப்ரவ்ருத்திரூபமான இந்த அநுஷ்டாநம் எங்ஙனே உபபந்நம்? நிவ்ருத்திரூபமாகவன்றோ இதுப்ரஸித்தம்?

திருப்புட்குழிஸ்வாமி :—ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரத்தில் ஸித்தோபாய சோதநாதிகாரத்தில்—“ நாம் ஒரு உபாயாநுஷ்டாநம் பண்ணுகை என்னென்பது? நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனென்கிறபடியே அருள் புரிந்த சிந்தை யடியார்மேல் வைத்து அவன்தானே ரக்ஷித்தபோது காணுமத்தனை யன்றோ வென்று சிலர் கலங்குவர்கள். இவர்களைத் தெளிவிக்கும்படி..........” இத்யாதியாகவுள்ள ஸ்ரீ ஸூக்திகளை வாசித்துக்காட்டினார்.

குன்றபாக்கம் ஸ்வாமி :—அந்த ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலேயே க்ருத க்ருத்யாதிகாரத்தில்—

“ அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கந மடியாக வுண்டான ஹம வந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப் போந்த நமக்கு சுவஸாரப்ரதீக்ஷையான பகவத் க்ருபையடியாகவுண்டான ஸதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த அத்யோஸாரணாநந்தஸாரணத்தாலே ப்ரவத்யநுஷ்டாநம் பிறந்த பின்பு ஶாஸ்த்ரப்ரவஸாதநங்களில் இதுக்கு மேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹ ஹேதுக்களை யெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்த வடியவர் தம்மைத் திருத்திப்பணி கொள்ளவல்ல ஸர்வசேஷியான ச்ரிய:பதி தன் பேறாகத் தானே ரக்ஷிக்குமென்று தேறி நிஸ்ஸரணாயிருவென்கை; இது ஶரணாஹ: என்கிற சரண்ய வாக்யத்திலும் தீர்ந்த பொருள் ”

என்கிற தேசிக திவ்ய ஸ்ரீஸூக்திகளை வாசித்துக் காட்டி ஸித்தோபாய சோதநாதிகார ஸ்ரீஸூக்திகளை இவற்றோடே ஸமந்வயப் படுத்தி ஐகரஸ்யம் பொலிய உபந்யஸித்தார்.

திருப்புட்குழி ஸ்வாமி :— பாஷ்யகாரர் பண்ணின ப்ரபத்தியினாலேயே பின்புள்ளா ரெல்லார்க்கும்பேறு என்று உங்கள் ஸம்ப்ரதாயத்தில் வார்த்தை யென்று கேள்விப்படுகிறேன்; இது மெய்தானோ?

குன்றபாக்கம் ஸ்வாமி :— ப்ரஸக்தமான விஷயத்திற்கு பதில் ஸாதிப்பதை விட்டு வேறு வார்த்தையை ஏதுக்கு எடுக்கிறது? க்ருதக்ருத்யாதிகார ஸ்ரீஸூக்தியின் மீது [அதாவது ‘ஸதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த அத்யோஸாரணாநந்தஸாரணத்தாலே ப்ரவத்யநுஷ்டாநம் பிறந்த பின்பு” என்றும். “ ஶாஸ்த்ரப்ரவஸாதநங்களில் இதுக்கு மேல் ஒன்றில்லாமையாலே” என்றுமுள்ள ஸ்ரீ ஸூக்தியின்மீது] தேவரீருக்கு உத்தரமில்லையென்று தெரிந்து கொண்டேன். இப்போது தேவரீர் கேட்ட கேள்விக்கும் விடையளிக்கிறேன்; உடையவர் பண்ணின ப்ரபத்தியினாலேயே பின் புள்ளா ரெல்லார்க்கும் பேறு—என்கிற வார்த்தை * எதிராசர் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே * என்றவருடைய வார்த்தை என்றே பெரியோர்கள் சொல்லுவது.

திருப்புட்குழி ஸ்வாமி ;— தேசிகன் அப்படி எங்கும் ஸாதித்தது கிடையாது. ந்யாஸ திலகத்தில் * உக்த்யா தநஞ்ஜய ஜநார்த்தநவப்ப ம: * இத்யாதி சில ஸ்ரீ ஸூக்திகளுக்குச் சிலர் தவறான அர்த்தம் செய்வதுண்டு; அதையே கொண்டு தேவரீரும் ஸாதிக்கிறாப் போலிருக்கிறது.

குன்றபாக்கம்ஸ்வாமி:—அப்படியா? தவறான அர்த்தம் செய்பவர்கள் தொலையட்டும். ஸரியான அர்த்தத்தை தேவரீர் பணித்தருளலாமே.

திருப்புட்குழிஸ்வாமி:—அந்தச்லோகத்தில் கொடுத்திருக்கிற த்ருஷ்டாந்தங்களை நோக்கினால் பாஷ்யகாரர் காலத்திலேயே யிருந்தவர்களையே விஷயீகரிக்கின்றதாக ஏற்படுகின்றதேயன்றி, பிற்பட்டவர்களையும் விஷயீகரிப்பதாகச் சொல்லமுடியாது. ஏனெனில்; கண் தெரியாத ஒருவன் கண் தெரிந்த ஒருவனைப் பற்றிக்கொண்டு போகிறாப்போலே என்பது முதல் த்ருஷ்டாந்தம். குருடன் ஒருகாலத்திலும், கண் தெரிந்தவர் மற்றொரு காலத்திலும் இருந்தால் பயனில்லையே. இருவர்க்கும் ஸாஹசர்யம் வேணுமே. அப்படியே, ‘நொண்டியானவன் படகில் ஏற்றி வைக்கப்பட்டு ஓடக்கா

ரனல் கடத்துவிக்கப்படுவதுபோல்' என்று இரண்டாவது த்ருஷ்டாந்தமுள்ளது. இதுவும் ஸாஹசர்ய நியதம். (என்று சொல்லி முடித்து விட்டார்.)

குன்றபாக்கம் ஸ்வாமி:—மூன்றாவது த்ருஷ்டாந்தம் ஸாதித்திருக்கிறீரே, அதையும் சிறிது சோதிவாய் திறந்து விவரித்தருளலாமே. முக்கியமான அம்சத்தை மூடிவைக்கலாகுமோ?

திருப்புட்குழி ஸ்வாமி:—அரசனிடத்தில் சேவகம் செய்பவனுடைய புத்ர பௌத்ராதிகளும் வாழ்கின்றார்களே, அது போல என்று ஸாதித்திருப்பதில் தேவரீர்களுக்கு என்ன லாபமுள்ளது?

குன்றபாக்கம் ஸ்வாமி:—லாபநஷ்ட விசாரம் செய்ய நாம் வியாபாரிகளல்லோம்; அவ்விடத்து ஸ்ரீ ஸூக்தியை ஊன்றி நோக்கியருளவேணும். * ஸஞ்ஜாதஹோமாது ஸுவிதிதந்ருபவ: ஸேவகஸ்ஸுஹ்ருதாதி: * என்று அங்கு ஸ்ரீஸூக்திஸந்நிவேசமுள்ளது. ஸுவிதிதந்ருபவ: என்ற விசேஷணத்தின் பயன் ஆராயத்தக்கது. அரசனிடத்தில் ஒரு மந்த்ரியானவன் நெடுநாள் சேவகம் செய்து அபாரமான பொருளைத்திரட்டி நியிநியாயம் வைத்துவிட்டால் அந்த மந்திரியின் பிள்ளைபேரன் கொள்பேரன்முதலான ஸந்ததியார் அனைவரும் மூலதனமளித்த அரசனைக்காணாதவர்களாயும் அவன் இன்னான் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாதவர்களாயுமிருந்தாலும் அந்த நிதியைக் குறைவின்றி அநுபவிக்கப்ராப்தர்களாமாபோலே— என்று ஸாதித்திருக்கையாலே பூர்வார்த்தத்தில் தோன்றின ஸாஹசர்யநியமம் அவிவக்ஷிதம் என்று ஸ்பஷ்டமாக விளங்கவில்லையா?

திருப்புட்குழி ஸ்வாமி:—ந்ருபனென்றும் ஸேவகனென்றும் ஸுஹ்ருதாதிகளென்றும் ஸாதித்திருக்கிறீரே; ந்ருபஸ்தாநத்தில் யார்? ஸேவகஸ்தானத்தில் யார்? ஸுஹ்ருதாதிஸ்தாநத்தில் யார்?

குன்றபாக்கம் ஸ்வாமி:—ஸஹோ! ப்ரயோஜநாஹ்ருதப்ரஸ்நா: ப்ரஸ்நா: இவை மிக அவசியமான கேள்விகள். ந்ருபஸ்தாநத்தில்

ஸ்ரீரங்கநாதன். ஸேவகஸ்தாநத்தில் எம்பெருமானார். ஸுஹ்ருதாதிஸ்தாநத்தில் நாமெல்லாரும்—தேவரீரும் இப்படித்தானே அர்த்தம் சொல்லியாகவேண்டும் ஸேவகஸுஹ்ருதாதிகள் மூலபுருஷன் வைத்திருக்கும் நிதியின் வட்டியை அநுபவிக்க எப்படி அரசனையும் அந்த மூலபுருஷனையும் பார்த்திருக்கவேண்டிய அவசியம் இல்லையோ, அப்படியே ஸ்ரீரங்கநாதனிடத்தில் எம்பெருமானார் பெற்று வைத்த அநுக்ரஹ நிதியை அநுபவிக்கவல்ல நாமும் அந்த ஸ்ரீரங்கராஜதிராஜர்களைப் பார்த்திருக்கவேண்டிய அவசியம் சிறிதும் இல்லை என்று ஸ்பஷ்டமாக விளங்கவில்லையா?

திருப்புட்குழி ஸ்வாமி:—ஸ்ரீபாஷ்யகாரர் செய்தருளின ப்ரபத்தியாலே அவர் வாழ்ந்து போக ப்ராப்தியுண்டேயன்றி, அதில் அந்வயமில்லாத நாமும் வாழ்ந்துபோக ப்ரஸக்தியில்லையே. எல்லார்க்குமாக அவர் ப்ரபத்தி பண்ணவுமில்லை; எல்லார்க்குமாக ஸ்ரீரங்கநாதன் அநுக்ரஹிக்கவுமில்லை.

குன்றபாக்கம் ஸ்வாமி:—சரணாகதிகத்யத்திற்கு ச்ருதப்ரகாசிகாபட்டர் ஸம்க்ஷிப்தமாக ஒரு பாஷ்யம் அருளிச்செய்திருப்பது ஸ்வாமி கடாக்ஷித்திருக்கலாமே. அதில் *சரண்யே தே; தவைவ ஸது ஸம்வத்ஸரதே* என்றவிடத்தில் "ஸஸம்பந்திஸம் பந்திநிர்ஸ்தரணசி ஸர்வதப்ரஸாதாஹித்வேது" என்கிற ஸ்ரீஸூக்தியை நோக்கவேணும்.

திருப்புட்குழி ஸ்வாமி:—அதை நான் நோக்காமலில்லை; நோக்கியேயிருக்கிறேன். அதேவிடத்தில் "விலக்ஷணஸஹாயத ஸாக்ஷஸந்த்யாயேந" என்று தேசிகன் அருளிச்செய்திருக்கையாலே ஸ்ரீபாஷ்யகாரர் காலத்திலுள்ள ஸம்பந்தி ஸம்பந்திகளைமாத்திரமே அது குறிக்கும்.

குன்றபாக்கம் ஸ்வாமி:—தேசிகன் அங்கு மூன்றுவித யோஜனைகளை அருளிச்செய்திருக்கிறார்: பலன் ஸந்ததாவி ப்ரஸரிக்குமென்பதை நெஞ்சிற் பதியவைப்பதற்காக விலக்ஷண ஸஹாயத ஸாக்ஷஸந்த்யாயத்தை ஸ்வாமி காட்டினாரேயல்லது வேறில்லை. மூன்

ருவது யோஜனையில் இது ஸ்பஷ்டமாகவே உள்ளது. [illegible] மாக [illegible] ந்யாஸவிம்சதியில்" [illegible] அடுத்ததான * [illegible] * என்கிற ச்லோகத்தில் மூன்றாவது பாதத்தைக் கண்டு வைத்தும் மருள் கொள்வாருண்டோ? எம்பெருமானார்க்கு ஸ்ரீரங்கநாதன் ஒரு வரம் தந்தருளினதாக இதில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே; அந்த என்ன வரம்? எம்பெருமானார்க்குப் பிறகு நெடுநாள் கழித்துத் திருவவதரித்தவரான ஸ்வாமி தேசிகன் * [illegible] * என்று சொல்லியிருக்கின்றாரென்றால் அந்த வரம் எப்படிப் பட்டதாக இருக்கவேணும். இங்கே வியாக்கியானம் செய்தருளின நயனாசார்யரும் "[illegible]" என்று அருளிச்செய்திருக்கிறார் ‡. வியாக்கியான வாக்கியமிருக்கட்டும்- மூலஸ்ரீஸூக்தியே போதுமே. இந்த ஸ்ரீஸூக்தியை அநுஸரித்துத்தானே மணவாளமாமுனிகளும் யதிராஜ விம்சதியில் * [illegible]

‡ திருக்குடந்தையில், நயனாசார்யர் வியாக்கியானம் முதலியவற்றோடு அச்சிட்டுள்ள ந்யாஸதிலகத்தில் இந்தப் பங்க்திகள் நயனாசார்யருடைய வியாக்கியானத்திலிருந்து வேறொரு வியாக்கியானத்தில் நுழைக்கப்பட்டிருக்கக் காண்கின்றன. அங்ஙனமே உண்மையெனினும் குறையில்லை.

[illegible] * என்று அருளிச்செய்தார்.

திருப்புட்குழி ஸ்வாமி :—திருவாய்மொழியில் (6—10—11) "பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே" என்றவிடத்து ஈட்டில்—"இவர் (ஆழ்வார்) பண்ணின ப்ரபத்தியே நமக்கு மெல்லாம்; தனித்து வேண்டா; இப்பாசுரத்தைச்சொல்லிப் பலத்திலே அந்வயிக்குமத்தனை" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறதே. 'ஆழ்வாருடைய ப்ரபத்தியால் நமக்குப் பேறு' என்றதேயொழிய ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரபத்தியால் நமக்குப் பேறு என்றதில்லையே. அன்றியும், பாஷ்யகாரர்க்கும் ஆழ்வாருடைய ப்ரபத்தியே போதுமாயிருக்க அவர் தனித்து ப்ரபத்தி பண்ணியருளினது எங்ஙனே?

குன்றபாக்கம் ஸ்வாமி :—ஸ்ரீபாஷ்யகாரர்க்குப் போலே ஆழ்வார்க்கு ஒரு வரம் கிடைத்ததாக எங்கும் யாரும் ஸாதிக்கவில்லை. "இவைபத்தும் பிடித்தார் பிடித்தார்" என்ற சொல் நயத்தை நோக்கி நம்பிள்ளை அருளிச்செய்தது பொருந்தும். அறிவிலிகளான நாம் வடமொழியிலோ தென்மொழியிலோ சில சொற்களைப்புதிதாய்த்தொடுத்துச் சொல்லி ப்ரபத்திப்ரயோகம் பண்ண வேண்டிய அவசியமில்லை; "புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்ற இப்பாசுரத்தைப் பேசுமத்தனையே போதும் என்றது நன்றே. ஆளவந்தார் முதலான ஆசார்யர்கள் அநுபவ பரீவாஹரூபமாக அருளிச்செய்து வைத்த ஸ்துதிக்ருதிகளில் * [illegible] * [illegible] * இத்யாதிகள் அருளிச்செய்தது அபூர்வப்ரபத்திப்ரயோகமன்று. சாஸ்த்ரார்த்த ப்ரதிபாதநமுறைமைகள் இருந்தபடி. எம்பெருமானார் தாமும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளையும் ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளையும் அநுஸந்தித்து

உய்வதில் ஸந்தேஹங்கொண்டு சரணாகதிகத்யம் அருளிச்செய்தாரல்லர். அவருடைய அநுபவம் உள்ளே அடங்கியிருக்கமாட்டாமையாலும் ஆச்ரயர்களின் பாக்யவசீகத்தாலும் அந்த ஸ்ரீஸூக்திகள் அவதரித்தன. மற்றையோருடைய ஸ்ரீஸூக்திகள் எல்லாவற்றிலுங்காட்டில் கத்யத்திற்கு மிக்க சிறப்புண்டு. அது யாதெனில்; மற்றையோருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு எம்பெருமான் ஒரு மறுமாற்றம் தந்தருளினதாகத் தெரியவில்லை. எம்பெருமானார்க்கு அங்ஙனன்றிக்கே * ஸத்யம் தே; ததைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே * இத்யாதிகளான பல மறுமொழிகளை எம்பெருமான் சோதிவாய்திறந்து ஸ்ரீராமாவதாரஸமயியைக்கடந்து பணித்ததாக நன்கு விளங்குகின்றது. தேசிகன் கத்யபாஷ்யத்தில் இதை ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறார், (ஸத்யம் தே, ததைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே) என்றும், நித்யகிங்கரோ பவ; ஸுகமாஸ்வ ஹஸிதோஸி, ஸர்வம் ஸம்பத்ஸ்யதே, நித்யகிங்கரோ ப்ரவிஷ்யஸி, மாதே பூத் ஸம்சய: இதி ப்ரத்யவஹாரங்கள் நிஸ்ஸம்சயஸம்வாதை—என்றுமுள்ள ப்ரதிவசநங்கள் ஸாக்ஷாத் பகவத்வாக்யங்களே யென்று தேசிகன் கருணைவெண அருளிச்செய்திருக்கக் காண்கிறோம். ஆகவேதான் * ப்ரத்யாயயாத் ப்ரதிவசநம் ப்ரபந்நைஸ்தம் விதீர்ணம் ப்ரபக்வா வயம் * என்று அருளிச்செய்யலாயிற்று. ஆகவே எம்பெருமானார் ப்ரபத்தியால் ஆழ்வார் ப்ரபத்தி அவிசோதிதமாயிற்று என்று கருதலாகாது.

திருப்புட்குழிஸ்வாமி:— தேவரீருடைய நிரூபணங்கள் பரம போக்யங்களாகவேயிருக்கின்றன * தவ ஹரோஹமநோகாரிஷி யாவிருதெகேம்பரணிகத்யதி வாஞ்சாஸ்நெஷிபம் * இத்யாதி பட்டர் ஸ்ரீ ஸூக்திகளை ஆராய்ந்தாலும் தேவரீருடைய நிரூபணங்களுக்கே போரவும் ஔசித்யமுள்ளது. ஆயினும் * யதா தே தத்வதேசிக ஸ்து,ததா தத்ர வர்தேரந்: * என்ற ஔபநிஷதோபதேசத்தின் படி, நன்றோ தீதோ எங்கள் பெரியோர் ஒழுகினபடி யாமும் ஒழுகுவதுஉரியதுதானே.

குன்றபாக்கம் ஸ்வாமி:—இவ்வளவு ஆதரித்ததெல்லாம் தகவப்ராஹ்மணத்தினாலேயன்றி இவ்வநுஷ்டாநத்தால் தேவரீர் போல்வார்க்குக் கிடைக்கும் வருமானங்களைத் தவிர்க்க வெண்ணியன்றே. இவ்வநுஷ்டாநமில்லையென்றால் வஸ்துத: அநேக ஸ்வாமிகள் சாலவும் ச்ரமப்பட நேருமென்பது அடியேனுக்குத் தெரியாமையில்லையே. நம்பூருவர்களின் சரிதைகளை எழுதியுள்ள க்ரந்தங்களில் ஒரு ஆசார்யருக்காவது வங்கஸம்ஹாரத்திற்காட்டில் தனிப்பட இப்படியொரு அநுஷ்டாநமென்று நடந்ததாயெழுதியிருக்கக் கண்டதுண்டோ?

திருப்புட்குழிஸ்வாமி:—ஸங்கேதஸித்தமான இந்த அநுஷ்டாநத்தில் இதற்குமேல் ஆக்ஷேபிப்பது வேண்டாமென்று நினைக்கிறேன். 'ப்ரபத்தி உபாயமன்று' என்று தேவரீர்களின் ஸித்தாந்தத்தில் வார்த்தையாமே; இதைப்பற்றிச்சிறிது கேட்கவேணுமென்று எனக்கு ஆசை.

குன்றபாக்கம்ஸ்வாமி:--அடியேனுக்குக்கூட நெடுநாளாகவொரு சையுண்டு; ஸ்வாமிதேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் * உபயம் கெமுமுக்ஷோரபாயகப்ரத்யயாத்மிகா। ஸாத்ஹெதுகவ்யபசார மெக கிஞ்சந்நஸாதகாரிணா * என்றும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் *உபாய: ஸ்வப்ராப்தெர்பகவந்நிஷ்டதீஸ்தஸ்ஸமவாப *ஸ்வப்ராப்தௌ ஸ்வயமேவ ஸாயநதயா ஜோபஸ்ஷ்யமாண: ச்ருத: * என்றும்அருளிச்செய்திருப்பவற்றுக்கு முரணாக தேவரீர்கள் ப்ரபத்திக்கு உபாயத்வம் எங்ஙனே சொல்லுகிறதென்று தெரிந்துகொள்ள.

திருப்புட்குழிஸ்வாமி:—ஸித்தாஞ்ஜநரத்நபேடிகையில் இவ்விஷயம் விரிவாகநிரூபித்திருக்கிறேன்: கடாக்ஷிக்கலாம்.

குன்றபாக்கம்ஸ்வாமி;—அடியேனும் ரத்நபேடிகாபேடிகையில் மிகவிரிவாக விவரித்திருக்கிறேன்:கடாக்ஷித்தருளலாம்.

திருப்புட்குழிஸ்வாமி;—இது இருக்கட்டும்; பிராட்டியை ஜீவகோடியில் வைத்துப்பேசுகிறீர்களாமே; அது பொருந்துமா?

குன்றபாக்கம்ஸ்வாமி;—தேவரீர் ஒவ்வொருவார்த்தையும் ஸ்ரீ தேசிகதிவ்யஸூக்திவிருத்தமாகவே ஸாதிக்க வேணுமென்று உறுதி கொண்டிருப்பதாக நினைக்கிறேன். ஸ்ரீந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஸ்வாமிதேசிகன் (ஜீவபரிச்சேதத்தொடக்கத்தில்) * அதஜீவ: * என்று ஆரம்பித்து * அணுவரிமாணசேஷவத்தி ஜ்ஞாத்ருத்வம் * சேஷசேஷவத்தி ஜ்ஞாத்ருத்வம் உதயாதி தல்லக்ஷணம் * என்று ஜீவலக்ஷணமருளிச்செய்துள்ளார். இதனால் தேசிகன் பிராட்டியை ஜீவகோடியில் தான் திருவுள்ளம்பற்றியிருக்கிறாரென்பது ஸ்பஷ்டமாகவில்லையா? அணுவரிமாணசேஷவத்தி ஜ்ஞாத்ருத்வமென்பது பிராட்டியிடத்தில் ஸித்தியாதென்று தேவரீர் 'விதண்டாவாதம் செய்தாலும் சேஷசேஷவத்தி ஜ்ஞாத்ருத்வமென்பது பிராட்டியிடத்தில் இல்லையென்று சொல்லமுடியாதன்றோ.

திருப்புட்குழி ஸ்வாமி:—அங்கே ரங்காராமாநுஜஸ்வாமி பரிஷ்கரித்தருளியிருக்கிறார். கடாக்ஷிக்கவேணும்.

குன்றபாக்கம் ஸ்வாமி:—அவ்விடத்துப் பங்க்திகளை அடியேன் ஸேவித்தேயிருக்கிறேன். * லக்ஷ்ம்யா ஜீவாந்தர ஸாதாரண்யேந சேஷத்வாதி நதோஷ: * என்று ரங்காராமாநுஜஸ்வாமி நிரூபித்தருளியிருக்கிறார். லக்ஷ்மிக்கு ஜீவாந்தரஸாதாரண்யம் இசையாவிடில் தோஷம் வரத்தான் வரும் என்கிற திருவுள்ளம் இதில் ஸ்பஷ்டமாக இல்லையா?

திருப்புட்குழி ஸ்வாமி :—இதெல்லாம் ஸ்ரீ கோசங்களை வைத்துக்கொண்டு வார்த்தை சொல்லவேணும். பிறகு பார்ப்போம்; தேவரீருடைய நிரூபண நைபுண்யத்திற்கு ஸந்தோஷமாய் உகக்கின்றேன்—என்று ஸாதித்துக்கொண்டே ஆச்ரமத்திற்கு எழுந்தருளியாயிற்று.

(இன்னமும் வரும்.)

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், காஞ்சீபுரம். 11—35.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

விஷயதானம்செய்ய வாக்களித்திருக்கும் மஹாநுபாவர்கள்.

ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை வாதூல தேசிக அப்பன் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. கோவிந்தப்பங்கார் ஸ்வாமி திருநாராயணபுரம்
ஸ்ரீ உ. வே. தேசி வரதாசாரியார் ஸ்வாமி காரப்பங்காடு
ஸ்ரீ உ. வே. திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசாரியார் ஸ்வாமி
ஸ்ரீ உ. வே. A.V. கோபாலாசாரியார் ஸ்வாமி பத்ராதிபர் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணீ
ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை அ. ராமாநுஜாசாரியார் ஸ்வாமி திருமழிசை
ஸ்ரீ உ. வே. மேலவாத்தியார் திருமலை அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர்
ஸ்ரீ உ. வே. திருநாராயணய்யங்கார் ஸ்வாமி பத்ராதிபர் செந்தமிழ் மதுரை
ஸ்ரீ. உ. வே. உத்தமசேரி ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி ஸ்ரீரங்கம்
ஸ்ரீ. உ. வே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமி
ஸ்ரீ. உ. வே. கோ. க. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி திருமழிசை

—— :o: ——

நிகழும் மார்கழி மாதமானது தினத்திற்கு ஸர்வோத்தரமான ப்ராஹ்ம முஹூர்த்தம்போல ஸம்வத்ஸரத்திற்கு ஸர்வோத்தரமான மாதமாகும். மேலும் விபூதியில் உத்க்ருஷ்டமான பதார்த்தங்கள் எல்லாம் நான் என்று ஸ்ரீ க்ருஷ்ணபகவான் அருளிச்செய்யுமிடத்து, "மாஸாநாம் மார்க்க சீர்ஷோஹம்" என்று அருளிச்செய்திருக்கின்றமையாலும் இம்மாதம் மாதங்களெல்லாவற்றிலும் மேன்மையுடையது. இன்னமும் இவ்விருள் தருமாஞாலத்தில் ஆண்டாளவதரித்து மார்கழி நீராட்டம் என்று ஒரு வ்யாஜத்தால் திருப்பாவை பாடி நமக்குபகரித்ததும் இம்மாதத்திலே. இவ்வளவு பெருமை வாய்ந்த இம்மாதத்தில் வைஜயந்தீ, வனமாலிகாம்சராய் பகவத் கைங்கர்ய நிஷ்டர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களின் பாததூளியென்றே தமக்கு நிலைநின்ற நிரூபகமாம்படி தொண்டரடிப்பொடி என்ற திருநாமத்தை யுடைய ஆழ்வாரவதரித்தது கேட்டை நக்ஷத்திரமாகையாலே அத் தினத்தன்று வைஜயந்தியின் 2-வது ஸஞ்சிகை வெளியிடும்படி நேர்ந்ததும் பெருத்த முடைத்தே.

வர்த்தமானங்கள்.

காஞ்சீபுரம்:—இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தான மென்கிற தேவப்பெருமாள் ஸந்நிதியில் தைமீ 1உ (14—1—36) இரவு 11 மணிக்குள் இராப்பத்துத் திருவத்யயனோத்ஸவம் சாத்துமுறையாகி உடனே ஜீயர்புரம் பரிவேட்டை உத்ஸவத்திற்குத் தண்டிகையில் புறப்பாடு நடைபெறும். பழைய சீவரம் என்கிற விடத்திலுள்ள ஸ்ரீ நரஸிம்ஹஸ்வாமி மலையின்மீது மறுநாள் காலை 10 மணிக்குள் சேர்ந்து அன்று மாலை பாலாற்றங் கரைப் பிராந்தங்களில் எழுந்தருளியிருக்கின்ற நான்கு எம்பெருமான்களுடனே ஆச்சரியமான உத்ஸவம் நடைபெறும். தைமீ 3உ காலை 12 மணி ஸ்வாமியாருக்குத் தேவப்பெருமாள் ஸந்நிதி சேர்ந்தருள்வர்.

தெப்பஉத்ஸவம்:—தைமீ 25உ (7—2—36) முதற்கொண்டு மூன்றுநாள் மேற்குறித்த ஸந்நிதியில் அனந்தஸரஸ்ஸில் பேரருளாளனுக்கும் பெருந்தேவித்தாயாருக்கும் அற்புதமான தெப்பவுத்ஸவம் நடைபெறும்.

தையில்மகம்:—திருமழிசையாழ்வார் காஞ்சீபுரத்தில் திருவெஃகா என்கிற ஸ்ரீயதோக்தகாரி ஸந்நிதியில் எழுந்தருளியிருந்த காலத்தில் நடந்த இதிஹாஸத்தை அநுஸரித்து அநாதிகாலமாக ஷ திருவெஃகாவில் *பைந்நாகப் பாய்சுருட்டியுத்ஸவம் என்பது வெகு அழகாக நடந்து வருகின்றது. ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமானும் திருமழிசைப்பிரானும் 'ஓரிரவிருக்கை' முதலான கிராமங்களுக்கும் அக்ரஹாரங்களுக்கும் எழுந்தருளிப் பாலாற்றங் கரையில் திருமஞ்சனங் கொண்டருளி அதிரமணீயமாக நடைபெறுமிந்த மஹோத்ஸவம் தைமீ 26உ (8—2—36) பின்மாலை 5 மணி முதல் நடைபெறும்.

திருமழிசை:—மேற்குறித்த பக்திஸாரமஹாமுநியான ஆழ்வாருக்குத் திருவவதார ஸ்தலமாகிய திருமழிசையில் தைமீ 17உ முதலாக 10 நாள் வருஷோத்ஸவம் அதிக விமரிசையாய் நடைபெறும்.

ஸ்ரீபெரும்பூதூர்:—இத்தலத்தில் திருவவதாரம் செய்தருளின ஜகதாசார்யரான எம்பெருமானார்க்கு அர்ச்சாவதார ப்ரதிஷ்டோத்

ஸவமாக நடத்தப்பட்டு வருகின்ற குருபுஷ்யோத்ஸவம் தைமீ 22உ முதல் மூன்றுநாள் லோகோத்தர விபவங்களுடனே நடைபெறும் தினப்படி திருமஞ்சனமும், இரண்டுவேளையும் வாஹனப் புறப்பாடுகளும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளும் வித்வான்களின் அமுத மொழிகளும் அநுபவிக்கத்தக்கவை.

மதுரமங்கலம்:—"ராமானுஜபதச்சாயா" என்னும்படி எம்பெருமானார்க்குத் திருவடி நிழலாக ப்ரஸித்தரான எம்பாருக்குத் திருவவதார ஸ்தலமான இத்தலத்தில் தைமீ 14உ முதலாகத் திருநக்ஷத்ரோத்ஸவம் ஆரம்பமாகி 5—2—36உ புநர்வஸு நக்ஷத்திரத்தில் சாத்துமுறையாகும். வெகு அழகிய வைவரியில் இவ்வுத்ஸவம் நடைபெறும். இதே ஸமயத்தில் காஞ்சீபுரம் உலகளந்தபெருமாள் ஸந்நிதியாகிய திருவூரகத்திலும் ப்ரம்மோத்ஸவம் விபவமாக நடைபெறும். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுக்கு முதல் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுவதும் இதே ஸமயமாகும்.

கூரம்:—"ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" என்னுமாபோலே எம்பெருமானார்க்கு வலக்கையாக எழுந்தருளியிருந்த கூரத்தாழ்வான் என்கிற ஆசார்யஸார்வபௌமருக்கு இத்தலத்தில் தைமீ 21உ முதலாகத் திருநக்ஷத்ரோத்ஸவம் ஆரம்பமாகி 12—2—36உ ஹஸ்த நக்ஷத்திரத்தில் சாத்துமுறையாகும்.

ஸ்ரீரங்கம் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபை:—6—1—36உ மேற்குறித்த ஸபையின் இருபதாவது வருஷாந்த மஹோத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் உடையவர் ஸந்நிதியில் இனிது நடைபெறும். இந்த திவ்ய தேசத்தில் ஷ ஸபையினால் பலவகையான மஹோபகாரங்கள் விளைந்திருப்பதனால் இச்சபை மேன்மேலும் அபிவிருத்திபெற்று விளங்கவேணுமென்று பல மஹா ஜனங்கள் பிரார்த்தித்து வருகின்றார்கள்.

சென்னை பகவத் கதாப்ரஸங்க ஸபை:—இந்த ஸபையின் சார்பில் நடைபெறும் உபந்யாஸங்கள் தங்கசாலை வீதியிலுள்ள தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் ஹாலில் நடந்துவருகின்றன. ஐந்துவருஷகாலமாக இதில் உபந்யாஸங்கள் நடத்திவருகின்ற காஞ்சீ ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்யஸ்வாமி நிகழும் யுவஹு சித்திரைமீ முதலாக சனிக்கிழமைதோறும் ஸ்ரீ பாகவத–தசமஸ்கந்த உபந்யாஸங்களும், ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆழ்வாரருளிச்செயல் ஸ்ரீஸ

ஷார்த்த வுபந்யாஸங்களும் நடத்தி வருகின்றனர். இடையில் மார்கழியீ தினப்படியாகத் திருப்பாவையின் உபந்யாஸங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. பிறகு பதாக்ரமம் சனிக்கிழமைதோறும் மாலையில் ஸ்ரீ பாகவதமும் ஞாயிற்றுக்கிழமைதோறும் காலையில் திவ்யப்ரபந்தங்களும் உபந்யஸிக்கப்பட்டுவரும். சென்ற திருக்கார்த்திகைக்கு முன் திருப்பல்லாண்டு உபந்யாஸம் முடிக்கப்பட்டிருப்பதனால் தையீ முதல்வாரத்தில் திருமாலை விசேஷார்த்த உபந்யாஸம் தொடங்கப்படவேணுமென்று பக்த ஜனங்களின் அபேக்ஷை தெரியவருகின்றது.

பாண்டுரங்க பக்த ஸபையினுதரவில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. சடகோபாசார்யஸ்வாமிகளால் கோவிந்தப்பநாய்க்கன் தெரு உப்பட்டூர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியார் சாரிட்டியில் அநேக விசேஷார்த்தங்களுடன் ஹரிகதா காலக்ஷேபம் நடைபெறு ... திருநாராயணபுரம் ஸ்ரீ. உ. வே. அனந்தாண்பிள்ளை கோவிந் ... பங்கார்ஸ்வாமிகளால் யதீந்த்ர ப்ரவணம் செட்டியார் சாரிட்டி ... உபந்யாஸங்கள் நடத்தப்படும்.

நாராயணமுதலி வீதியில் காருமானி ஆதிகேசவலுசெட்டியார் சாரிட்டியில் திருமழிசை கோ. க. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிகளால் விசேஷமான உபந்யாஸங்கள் நடத்தப்படும்.

திருவல்லிக்கேணி பகவத்விஷய காலக்ஷேபம்:—இங்கு நம்மாழ்வார் ஸந்நிதியில் ஸ்ரீவில்லிபுத்தூர், உ. வே. ஸாது ராமாநுஜாசார்யஸ்வாமியால் இரண்டுமூன்று மாதகாலமாய் திருவாய்மொழியீடு காலக்ஷேபம் ஸாதிக்கப்பட்டுவந்து இடையில் அநத்யயனத்திற்காக அது நிறுத்தப்பட்டு மார்கழியில் திருப்பாவை காலக்ஷேபம் நடத்தப்பட்டுவருகிறது.

எழும்பூர்:—ஜகன்னாத பக்த ஸபையினுதரவில் ஸாகேத நிலயத்தில் வடகரை ஸ்ரீமான் உ. வே. வெங்கட வரதாசார்யஸ்வாமிகளைக் ... உபந்யாசங்கள் நடைபெறும். ... அநேக ஹரிகதா காலக்ஷேபங்களும் பாட்டுக் கச்சேரிகளும் நடைபெறும்.

248931

ஏஜன்டுகள் தேவை.
தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

ருசிகரம்! அதிஸௌகர்யம்!

சமையலுக்கு இன்றியமையாத ஓர் புதிய பதார்த்தம்.

ஷட்விதபா கோபயோகி
என்கிற
இண்டியன் குக்கிங் பவுடர்.

சென்னை கார்ப்ரேஷன் சுகாதார ஆபீஸர்களாலும் மற்றும் பல ஸாராஸார விவேகிகளாலும் பரீக்ஷித்து பாராட்டப்பெற்றது.

ரஸம் சாம்பார் முதலான பதார்த்தங்கள் புளி உப்பு மிளகாய் முதலானவைகளில்லாமலே அதி சுவபமாயும் அதி ருசிகரமாயும் அதி சீக்ரத்தில் செய்து கொள்ள உபயோகமாயிருக்கும்.

(1) அப்படியே இட்லிமுதலானவைகளுக்கு உபயோகிக்கலாம்
(2) ஜலத்தில் கட்டியாய் கலந்தால் சட்னியாகும்.
(3) புளிப்பில்லாத்தயிரில் கலக்க தயிர்ப்பச்சடியாகும்.
(4) சாதத்தில் கடலைப்பருப்பும் முந்திரிப்பருப்பும் வறுத்துச் சேர்த்துப் பொடியைக்கலக்க புளியோதனமாகும்.
(5) சமையல் செய்த பருப்பில் சேர்த்தால் சாம்பாராகும்.
(6) கொதித்த ஜலத்தில்சேர்த்து விட்டால் ரஸமாகவேயிருக்கும்.

"கோதா விலாஸம்" 25. ஆசாரப் தெரு, மதராஸ்

V. R. GOPALA AIYNAGAR,
Proprietor.